
# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



ரூசோ


ஊசி 2 குத்து 8

★ மே 1964 ★


இதனுள்:


மயிர் ஏற்றுமதி!

வினை அறுக்கிறார்கள்!

என்ன கிழமையானால் என்ன

வெங்காயம்

உம் மகள் திருமணம்

ரூசோ வரலாறு

புலால் புசித்தல்

ஷேக்ஸ்பியர்

சோஷலிச பட்ஜெட் II

கவிதைப் பகுதி

இலக்கியப் பகுதி

— இன்னும் ப


50 காசு

டெலிஃபோன் நம்பர் : 51451

நிறுவனம் : 1930

தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

| பட்டினத்தார் உளுத்தம் பருப்பு | எப்போதும் வாங்கி உபயோகியுங்கள் — எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். | ஷெல் துவரம் பருப்பு |
|---|---|---|

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

**23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன் : 82026) சென்னை-34**

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | $4\frac{1}{2}$% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $4\frac{3}{4}$% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $5\frac{1}{4}$% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | $5\frac{1}{2}$% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

டி. வி. நரசிம்மன் M.A., C.A., I.I.B.



# அறிவுப்பாதை

சுயமரியாதை (அறிவியல்) இயக்க வார ஏடு

ஆசிரியர்: சா. குருசாமி

*அரசியல் கட்சி சார்பற்றது மே 1-ந் தேதி முதல் வெளி வருகிறது!*

*ஆண்டுக் கட்டணம் ரூ 6/- தனி இதழ், காசு 13.*

*விற்பனையாளருக்கு 25% கழிவு*

நிர்வாகி: "அறிவுப்பாதை" 50. சி. அய். டி. காலனி ஷெனாய் நகர் சென்னை-30.

# குத்தூசி

[ஆசிரியர்: சா. குருசாமி]

*— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —*

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ்: விலை 50 காசு;

ஆண்டுக் கட்டணம்:

உள் நாடு: ரூ. 5 கொழும்பு: ரூ. 6

வெளி நாடு: ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம்:

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய்;
அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய்;
இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.
(அரைப் பக்கம்: 25 ரூபாய்)

குறிப்பு:-நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

---

குறிப்பு:—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை; முன் அநுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

---


Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

அவர்கள் அப்படி ! இவர் இப்படி !!



"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

# குத்தூசி

ஊசி 2 மே 1964 குத்து 8

## மயிர் ஏற்றுமதி !

இந்நாட்டு மக்களை எந்தத்துறையில் முன்னேற்றினாலும் அறிவுத் துறையில் மட்டும் முன்னேற்ற முடியாது போலிருக்கிறது. வாழ்க்கைத் தரம் உயர உயர அறிவுத்தரம் ஆழமான படுகுழியை நோக்கிச் சென்று கொண்டேயிருக்கிறது. கற்றனைத்துக்கூட அறிவு ஊற வில்லை, இங்கே. கல்வி வேறு, அறிவு வேறு என்ற உண்மைக்கு இந் நாடே தலைசிறந்த எடுத்துக் காட்டாக நிற்கிறது. படித்தவர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர், படிக்காத பாமரர் கண்மூடி வாழ்க்கை வாழ்கின்றனர்.

மதம் நல்லொழுக்கத்தையும் வளர்க்கவில்லை; ஒற்றுமையையும் வளர்க்கவில்லை. மடமையைத்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறது. வெறி உணர்ச்சியைத்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் உயர்நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டால் தலையிலிருந்து விழுந்த மயிருக்குச் சமம் ஆவார்கள்-என்கிறார், வள்ளுவர்.

மயிருக்குத் தலையில் உள்ள வரையில்தான் சிறப்பு; கீழே விழுந் ததும் அது ஒரு குப்பை!

ஆனால் இதோ, ஒரு செய்தி :—திருப்பதி ஏழுமலையானுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படுகின்ற தலைமயிருக்கு வெளிநாட்டில் மிகுந்த தேவை ஏற்பட்டிருக்கிறதாம். தரப்படியும் நீளப்படியும் இம் மயிரைப் பிரித்து பெல்ஜியம், ஹாங்காங், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன்,

# குத்தூசி

ஃப்ரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் போகிறார்களாம்!

சில மாதங்கட்கு முன்னர் காஷ்மீரில் "புனிதமுடி" காணாமற் போய்விட்டதனால் அது காரணமாக விமானத் தாக்குதல் நடந்தது போன்ற பரபரப்புக்கிளம்பியது நினைவிருக்கலாம்.

மதத்தின் பெயரால் மடமையும், மதவெறியும் எந்த அளவுக்கு இந் நாட்டைக் கிறுக்கர் நாடாக ஆக்கியிருக்கிறது என்பதை அறிவுடையோர் சிறிது சிந்திக்க வேண்டும்.

மயிர்க்காணிக்கை கேட்கும் கடவுள்கள் காட்டுமிராண்டிகள் வாழும் நாடுகளில்கூட இல்லை. "இன்பத் திராவிடத்தை"த் தவிர வடநாட்டிலுங்கூட இல்லை. நோய் நீங்கவும், மனக்குறை போகவும், பிற ஆசைகள் நிறைவேறவும் மனிதன் தனது உற்பத்தியான "கடவுளை" வேண்டுகிறான்! இவற்றில் நூற்றுக்கு 4-5 கூட நிறைவேறுவதில்லை. ஆயினும் விடாப்பிடியாக வேண்டிக் கொண்டேயிருக்கிறான். வாயினால் கேட்பது மட்டும் போதாது என்று, "கடவுள்" என்பவருக்குக் கைக்கூலி (லஞ்சம்) யும் தருகிறான். தேங்காய், பழம், சோறு, சிற்றுண்டி, பால், நெய் போன்ற உணவுப் பொருள்கள் மட்டுமா? பூ முதல் தலைமயிர்வரை, ஆடு-கோழி முதல் பொன்-வெள்ளி-கரன்சி நோட் வரையில், தனக்குப் பிடித்ததையெல்லாம் லஞ்சமாக (காணிக்கை)க் கொடுக்கிறான்.

இறக்குமதி செய்யும் வெளிநாட்டினர் இந்நாட்டுத் தலைமயிரைப் பார்த்தவுடன் என்ன பேசிக் கொள்வார்கள்?

"இந்தியன் தன் மயிரைச் சிரைத்துத் தலையை மொட்டையாக்கிக் கொள்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்! மயிர் வெட்டும் கடையில் (சலூன்) தலையையோ முகத்தையோ சிரைத்துக் கொள்வதுதான் உலக வழக்கு! ஆனால் இந்து மத பக்தனோ, தன் கடவுளுக்கே காணிக்கையாகத் தலைமயிரைத் தருகிறான்! இவன் எவ்வளவு படித்தாலும் என்ன பயன்? அறிவு இல்லாத கல்வி, காம்பு இல்லாத கோடரி மாதிரித்தானே! கடவுளைத் திருப்திப்படுத்துவதற்கு மயிர்க்காணிக்கையா தருவது? என்ன மானக் கேடு! இவ்வளவு மடமை மலிந்து பொங்கி வழியும் நாட்டில் அறிவை ஆணிவேராகக் கொண்ட சோஷலிச சமுதாயம் எப்படி முளைக்கும்? முளைத்ததாக உலக வரலாற்றில் காணமுடிகிறதா? 'மதம் மக்களுக்கு அபின்' என்பதல்லவா, சோஷலிசத்துக்கு உயிர் மூச்சு? மதத்துக்காக மொட்டையாம்! அந்த மயிரை ஏற்றுமதி செய்வதாம்! மடத்தனத்தை இப்படியா விளம்பரப் படுத்துவது! திருப்பதிக் கடவுள் மயிர்க் காணிக்கை மூலம் நோய்களைப் போக்குகிறதென்றால் இத்தனை மருத்துவர், மருந்துகள், மருத்துவ

நிலையங்கள், நர்சுகள்-எல்லாம் எதற்கு? சே! சே! வடிகட்டின மடத்தனம்!''

இப்படித்தானே பேசுவார்கள், திருப்பதிச் சரக்கை இறக்குமதி செய்கின்ற பிற நாட்டார்?

திருப்பதிக் கடவுளுக்கும் பிற கடவுளர்–கடவுளச்சிகளுக்கும் இன்னல் போக்கும் சக்தி இருக்குமானால் சீனாக்காரனையும் பாகிஸ்தான் காரனையும் விரட்டியடிக்கத் திருவுள்ளம் கொள்ளலாகாதா? நாட்டின் தற்காப்புக்காக நாள் தோறும் கோடிக் கணக்கான ரூபாய் பாழாகிக் கொண்டிருக்கிறதே! திருப்பதிக்கடவுள் பொறுப்பேற்றுக் கொண்டால் 44 கோடி மக்களும் கூட மயிர்க்காணிக்கை தரலாமே! வெங்கடாசலபதியின் உடலையே வைரத்தால் மூடலாமே!

இந்த நாடு எந்தத் துறையிலாவது உருப்படும் என்று நம்புகிறீர்களா? நமக்கு நம்பிக்கையில்லை, மடமையின் முதிர்ச்சியைப்பற்றி நினைக்கும் போதெல்லாம். இந்நாட்டுக் கல்விக்குச் செலவாகும் பணம் முழுதும் கடலில் ஊற்றிய சந்தனமாகத்தான் இருக்கிறது!

---

# வினை அறுக்கிறார்கள்!

வட நாட்டில் பல நூற்றாண்டுகளாகக் கொழுந்துவிட்டு எரிந்த மதச்சண்டை இனித் தமிழ்நாட்டிலும் கிளம்பிவிடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அண்மையில் சென்னையின் ஒரு பகுதியில் இந்து–முஸ்லிம் சச்சரவு ஏற்பட்டு, காவல் துறையினரின் திறமையினால் உடனடியாக அடக்கப்பட்டுவிட்டது. வெளிப்படையாகப் பகையும் பூசலும் அடக்கப் பட்டாலும் இருசாராரிடையே முன்பிருந்த உறவும் நட்பும் இனி உள்ளூர இருக்கமுடியாது.

இதற்குக் காரணமென்ன? அரசியல் மேடைப் பேச்சாளர்களும் அரசியல்கட்சி எழுத்தாளர்களும் தங்கள் தங்கள் சுயநலத்துக்காக மத வெறியைக் கிண்டிவிட்டு ஆதரவுதேடிக் கொண்டிருக்கின்றனர். மதத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளே உருவாகியிருக்கின்றன; இவை தேர்தலில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்வதுடன் சட்டமன்றங்களிலும் இடம் பெற்றுவிட்டன.

காந்தியார் இந்துமத வெறியனால் (பார்ப்பனர்) சுட்டுக் கொல்லப் பட்டவுடனேயே மதச்சார்பு கொண்ட அரசியல் கட்சிகளை அரசாங்கம் கலைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்யாதது மாபெரும் தவறு.

இதுமட்டுமா? நபிநாயகம் பிறந்த நாள் என்ற பெயரால் நடக்கும் விழாக்களில் அரசியல் கட்சித் தலைவர்களும், மத ஒழிப்புத்தலைவர்

களும் கூட கலந்து கொண்டு பாராட்டிப் பேசி, எப்படியாவது சொந்தப் புகழ்—சொந்த விளம்பரம்-கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் மத வெறி உணர்ச்சித் தீயை விசிறி விட்டுக் கொண்டிருக்கின்றனர்; ஆனால் பிறமத விழாக்களில் எந்த முஸ்லிம் தலைவராவது கலந்து கொண்டு பாராட்டுச் சொற்பொழிவாற்றுகிறாரா என்பதை இச்சுயவிளம்பரப் பெருந்தலைவர்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை.

இன்னும் கூறுவோம். பொதுக் கல்விக் கூடங்கள், அரசாங்கப் பணிமனைகள், பொது நிகழ்ச்சிகள், வானொலி,-ஆகியவற்றிலும்கூட இந்து மதப்பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது; இதனால் மாற்று மதக்காரர்களின் மனம் புண்ணாகிறது; மதமற்றவர்களின் வெறுப்பும் ஆத்திரமும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நாட்டிலுள்ள பிற மதத்தவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களல்லர்; வந்தவர்களின் வழித் தோன்றல்களுமல்லர். இந்துமதச் சாக்கடையின் வாடை பொறுக்க மாட்டாமல், சாதிக் கொடுமையைச் சகிக்க மாட்டாமல், மூடப் பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொள்ள இசையாமல், வெளியேறியவர்களும் விரட்டப்பட்டவர்களுமேயாவர். மதம் மாறாமலே மேற்கண்ட மடமைகளை ஒழித்துவிட்டுப் பகுத்தறிவு (அறிவியல்) வாதிகளாக இருக்கலாமென்றாலோ, இதற்குத் தனித் துணிவுவேண்டியிருக்கிறது; பகுத்தறிவு வாதிகளிடையே கட்டுப்பாடான, ப்ரவலான, உறுதியான, நிலையான, இயக்கமும் உருவாகவில்லை.

ஆகவே, மணிதோறும் மதவெறி உணர்ச்சி நெருப்புக்கு அரசாங்க அமைப்புக்களும் அமைச்சர்களும் பிறரும் 'பெட்ரோல்' ஊற்றிக் கொண்டேயிருக்கின்றனர்.

மத உணர்ச்சி அவரவர் வீட்டுக்குள்ளேயே (அல்லது கோயிலுக் குள்ளேயே) இருந்தால்—இருந்திருந்தால்—இம்மாதிரிக் கேடுகள் வளர்ந் திருக்கமாட்டா. பாகிஸ்தான் தனி நாடு கூட ஏற்பட்டிருக்காது. வெளி நாட்டார் ஆட்சியின்போதுதான் மதவெறி—சாதி வெறி—இரண்டையும் ("மதத்தில் தலையிடுவதில்லை" என்ற நொண்டிச்சாக்கின் மூலம்) வளர விட்டுப் பிரித்து வைத்து ஆட்சி (Divide and Rule) நடத்தினர் என் றால், அதைவிடப் பன்மடங்கு கேடாக, இன்று நம் சொந்த ஆட்சியில் ("மதச்சார்பற்ற ஆட்சி" என்ற பெயரால்) அதே வேலை நடைபெற்று வருகிறதே!

இந்நிலையில் இந்நாட்டில் தேசீய ஒருமைப்பாடு எப்படி ஏற்படும்?

மதப்பிரசாரமும் சாதி உணர்ச்சியும் அடியோடு அழிக்கப் படாத வரையில், அரசாங்கம் இத்துறையில் உடனடியாக இறங்கி, அறிவியல்

(பகுத்தறிவு) வாதிகளை ஊக்கப் படுத்தாத வரையில், தேசீய ஒருமைப் பாடு வெறும் காட்டுக் கூச்சலாகத்தான் இருக்கும்.

ஆதலால் இன்றைய வகுப்புக் கலவரங்களுக்கு அரசாங்கமும் மாற்றுக்கட்சித்தலைவர்களுமே பொறுப்பாளிகள் ஆவர். வினை விதைத்தார்கள்; விதைத்துக் கொண்டே யிருக்கிறார்கள். இந்திய சமுதாயம் தீவினை (கேடுகள்) அறுத்தே தீரவேண்டும்.

---

# நல்ல முயற்சி!

ஒருவாரத்திற்கு முன்பு சென்னைக் கல்லூரி மாணவர்கள் கடற் கரைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

''ஹாஸ்டல் குழாயில் தண்ணீர் வரவில்லை; இரவில் எந்த நேரத் திலும் உண்டிவிடுதிக்குத் திரும்பும் உரிமை வேண்டும்; பதிவுப் புத்தகத் தில் கையெழுத்துப் போடமாட்டோம்! ஹாஸ்டல் செலவுக்கு மேலும் இரண்டு ரூபாய் தரமாட்டோம்!"—ஆகிய காரணங்களுக்காகக் கண்ட னக் கூட்டம், கல்லூரி செல்லாக் கூட்டம் முதலியவற்றைத் திறம்பட நடத்துவதில்தான் கல்லூரி மாணவர்கள் சிறந்தவர்கள்—என்ற பொது வான குற்றச்சாட்டுக்குச்சாட்டை யடி கொடுப்பதுபோல் இம்மாபெரும் கூட்டம் மகத்தான ஒரு காரியத்துக்காக நடைபெற்றிருக்கிறது.

''என் வாழ்க்கையில் இன்னின்ன மாதிரி லஞ்சத்தை ஒழித்துள் ளேன்; தேர்வு எழுதும் போது இன்ன மாதிரிக் கள்ளத்தனம் செய் ததை விட்டுவிட்டேன்; பயணச் சீட்டு இன்றி ரயிலிலும் பஸ்ஸிலும் பிர யாணஞ் செய்துவந்த வழக்கத்தை இந்த நாளிலிருந்து கைவிட்டு விட் டேன்......''

இப்படியாக, மாணவரும் மாணவியரும் மேடையில் தோன்றித் தெரிவித்தனர்.

இதுபோல் ஊர்தோறும் மாணவர்கள் பொதுக் கூட்டம் நடத்தி எடுத்துக் காட்டவேண்டும். இதுமட்டும் போதாது.

''நான் சென்ற மாதம் முதல் சிகரெட் புகைபிடிப்பதை நிறுத்தி விட் டேன்; சினிமாவுக்குச் செல்வதை அடியோடு நிறுத்தாவிட்டாலும், மூன்று மாதத்துக்கு ஒரு காட்சிதான் பார்க்கிறேன்; குடும்பத்துக்கு உத வியாக வீட்டுவேலைகளைப் பார்க்கிறேன்; சிக்கனமாகச் செலவு செய் கிறேன்; அரசியல் கட்சிகள் இருக்கின்ற பக்கத்தைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை; சாதி உணர்ச்சியையே விட்டுவிட்டேன்; மத உணர்ச்

சியை ஒழித்த அறிவியல் மனிதனாக ஆகிவிட்டேன்; சாதி–மத சின்னங்களை அணிவதில்லை. ஒழுக்கந்தான் என் கடவுள்; உழைப்புத்தான் என்மதம்......''

இப்படியெல்லாம் நம் நாட்டு மாணவ–மாணவிகள் பொது மேடைகளில் கூறவேண்டும்; இதைக்கண்டு பெரியவர்கள் வெட்கப்பட வேண்டும். அரசியல் வாதிகள் மாணவர்களைச் சூதாட்டக் காய்களாகப் பயன் படுத்தும் முயற்சியைக் கைவிடவேண்டும்.

லஞ்சத்தையும், சுரண்டலையும், சாதி வெறியையும், மதப் பூசலையும் ஒழித்துக் கட்டுவதில் முதியோர்கள் முன்வர மாட்டார்கள். இளைஞர்களாகிய மாணவர்கள் முன்வரலாம். ''கலப்புமணம்தான் செய்வேன்," என்று உறுதிகொண்டு அதன் மூலம் சாதியை ஒழிக்கலாம்.

வெறும் விளம்பரத்துக்காக மட்டுமே இக்கூட்டங்கள் நடைபெறக்கூடாது. உண்மையாகவே நடைமுறையில் காட்டக் கூடிய நெஞ்சுறுதி கொண்ட இளைஞர்கள் ஊருக்குப் பத்துப்பேர் வெளிக் கிளம்பினாலும் போதும். தீச்செயல்கள் பரவுவது போலவே நற் செயல்களும் விரைவில் பரவும். சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு இதுபோன்ற முயற்சிகள் மிகமிகத் தேவை.

அரசாங்க சட்டதிட்டங்களினால் ஆகாத நன்மைகளைப் பொது நல ஊழியர்களின் உழைப்பினால் சாதிக்க முடியும்.

சென்னை மாணவர்களைப்போல் வெளியூர் மாணவர்களும் மேலே காட்டியுள்ள விரிவான முறையில், இந்தப் புதுவகைப் பிரசாரத்தை நடத்திவர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

---

*''குறைவாக எதிர்பார்க்கவும் மிகுதியாக நுகரவும் கற்றுக் கொள்வதே வெற்றியின் இரகசியம்.''*

—*கதே*

* * *

*''இயற்கை மேல் குறை கூறுதே! அவள் கடமையை அவள் செய்துவிட்டாள். நீ உன் கடமையைச் செய்தால் போதும்.''*

—*மில்ட்டன்*

* * *

*"மனிதனுக்குத் தன் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க, பிறரை எதிர்பார்த்து நிற்க வேண்டிய அவசியம் அதிகரிக்கிறது. அத்தேவை குறைந்தால் அந்த அவசியம் குறைகிறது; பிறருக்கு மேலும் மேலும் உதவ முடிகிறது. பிறருக்குச் செய்யும் உதவி தன்னலத் தியாகத்தின் அளவைவிடப் பன்மடங்கு மிகுதியாகும்.''*

—*டால்ஸ்டாய்*

ப. நா. பாலசுப்பிரமணியன், B. Sc., D.H.M.P.

# புலால் புசித்தல்

*[புலால் உண்ணுமையை வலியுறுத்திப் பல பெரியார்கள் ஏராளமாக எழுதியுள்ளனர். சைவம், வைணவம், சமணம், பிரம்ம ஞான சபை போன்ற சில மதப்பிரிவுகளும்கூடப் புலால் உண்ணுமையை வலியுறுத்துகின்றன. உடற் கூற்று ஆராய்ச்சியாளரும் இக்கருத்துக்கு ஆதரவு தருகின்றனர். வள்ளுவர் போன்ற அக்கால அறிவியல்வாதிகளும் புலால் உண்ணுமையின் சிறப்பைப்பற்றிக் கூறியுள்ளனர். ஆனாலும் இப்பழக்கம் வரவர வளர்ந்து கொண்டேயிருக்கிறது; சாதியாலும், மதத்தாலும், வழக்கத்தாலும், பிறப்பாலும் புலால் உண்ணுதிருந்தவர்களிற் பலர் புலால் உண்கின்றனர். கட்டுரையாளர் இது பற்றி ஆராய்கிருர்: இதற்கு மாருன கருத்தும் தக்க ஆதாரத்துடன் வரவேற்கப்படுகிறது.]*

உயிர் வாழ்வதற்காக உண்பதா, அன்றி உண்பதற்காக உயிர் வாழ்வதா, என்று வேடிக்கையாகக் கேட்பது வழக்கம். உண்மை எதுவாயினும், உயிர் வாழ உரியவற்றை உண்ண வேண்டுவது தவிர்க்க வொண்ணுதது. உயிர் உடலில் உள்ளது. உடலுக்கு ஊறு நேர்ந்தால் உடலிலுள்ள உயிரையும் பாதிக்கும்.

உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ்
சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே.

—திருமூலர்

என்ற 'திருமந்திர' வரிகள் இக்கூற்றிற்குச் சான்று பகரும். எனவே நாம் உயிர் வாழ, உடலிலுள்ள உயிரைப் பேணி அதன் பயனுய் நலமுடனிருக்க நாளும் சத்து நிறைந்த உணவு உண்ணவேண்டும்.

உடல் நலமுடனிருக்க, உடலில் போதிய சக்தியும் வெப்பமும் உண்டாகவும், பழுதடைந்த அல்லது தேய்ந்துபோன பகுதிகளைப் புதுப்பிக்கவும், புதிய நுண்ணிய 'செல்' (Cell) களை உண்டாக்கவுமே நாம் பல வகையான உணவு உண்கிறோம். இறைச்சியுணவு, மரக்கறியுணவு, ஆகிய இவ்விரண்டிலும் உடலுக்குச் சக்தி தரும் பகுதிப் பொருள்கள் இருக்கின்றன. எனினும் புலால் புசித்தல் தேவைதானு, மரக்கறி உணவின் மாண்பு ஆகியவை குறித்து இங்கு ஆய்வோம்.

## பகுதிப் பொருள்கள்:

புலால் புசித்தலின் அவசியத்தை ஆராயு முன்னர் நமது உடல் எப்பகுதிப்பொருள்

களால் ஆக்கப்பட்டுள்ளது. அவைகளின் இயல்பு, இன்றியமையாமை பற்றி அறிய வேண்டியது அவசியம். நமது உடல் பின்வரும் பகுதிப் பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளது:—

(1) புரதம். (Protein)

(2) கொழுப்பு (Fat.)

(3) கார்போஹைட்ரேட் (Carbohydrate.)

(4) தாது உப்புக்கள் (Mineral Salts.)

(5) தண்ணீர் (Water)

### புரதம்:

கார்பன், ஆக்சிஜன், நைட்ரஜன், ஹைட்ரஜன் ஆகிய நான்கும் கலந்த ஒரு கூட்டுப் பொருள் புரதம்; உடலிலுள்ள பல்வேறு "செல்"களின் வளர்ச்சிக்கு புரதச் சத்து தேவைப்படுகின்றது. உடலின் வளர்ச்சிக்குத் தேவையான நைட்ரஜன் புரதத்தைத் தவிர வேறு பகுதிப் பொருள்களில் இல்லை. இதனால் பிறவற்றினும் சிறப்புடைத்து புரதம்.

### கொழுப்பு:

கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் ஆகிய மூன்றும் உள்ள கலவையே கொழுப்பு. இஃது நமது உடலுக்கு வெப்பத்தையும் சக்தியையும் தருகின்றது. உடலில் தேவைக்கதிகமாக கொழுப்புச் சக்தி இருந்தால் ஊளைச் சதை, சுரம், பிற நோய்கள் தோன்றும்.

### கார்போஹைட்ரேட்:

கார்போஹைடிரேட், கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் ஆகியவை கலந்த ஒரு கலவைப் பொருள். நாம் உண்ணும் அரிசிச் சோற்றிலும், கோதுமை, உருளைக் கிழங்கு, சோளம், கம்பு ஆகியவைகளிலும் கார்போஹைடிரேட் மிகுந்துள்ளது. சில பொருள்களில் சர்க்கரைப் பொருளாகவும் உள்ளது. உடலில் ஆக்சிகரணம் அடைந்து வெப்பத்தையும் வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியையும் தர வல்லது கார்போஹைட்ரேட்.

### தாது உப்புகள்:

கால்சியம், பாஸ்வரம், அயம் முதலியவை தாது உப்புக்கள் எனப்படும். பல், எலும்பு ஆகியவற்றின் வளர்ச்சி உறுதி ஆகியவற்றிற்கு தாது உப்புகள் காரணமாயுள்ளன. பால், மோர், கீரை வகைகள், ஆரஞ்சு, ஆப்பிள், பயறு முதலியவற்றில் தாது உப்புக்கள் நிறைந்துள்ளன.

### தண்ணீர்:

உடலின் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் துணைபுரிவது தண்ணீர். நீரற்ற வாழ்வு வாழ்வாகாதென்க. நாம் நலமுடன் வாழ உண்ணும் உணவோடு தேவையான அளவு நீரும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நோயற்ற வாழ்வு நடத்தவும் உடலுறுதி பெறவும் மேற்போந்த பகுதிப் பொருள்கள் நிறைந்த முழு உணவை (Square meal) உண்ண வேண்டும்.

## காயிருக்கக் கனி கவர்தல்

இறைச்சியுணவு, மரக்கறியுணவு ஆகிய இவ்விரண்டு உணவு வகைகளில் மேற்போந்த பகுதிப்பொருள்கள் நிரம்ப இருக்கின்றனவெனினும், இறைச்சி உணவில் கொழுப்புச்சத்து மிகுதியாகக் காணப்படுகின்றது. உடலுக்கு வெப்பத்தையும் சக்தியையும் தரவல்லது கொழுப்புச் சக்தியென முன்னரே கண்டோம். இக்

கொழுப்புச் சக்தி பால், மோர், தயிர் போன்றவைகளில் மலிந்திருக்க புலாலை நாடுவது கனியிருக்கக் காய் கவரும் செயலுக்கு ஒப்பானதே! ஆம். 75 காசு விலையுள்ள நான்கு முட்டைகளில் கிடைக்கக்கூடிய அயச்சத்து பத்துக் காசுகளுக்குக் கிடைக்கும் பசளைக் கீரையில் இருக்கிறது! மேலும், குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய கடுகுக் கீரையில் ஆறு முட்டைகளில் உள்ள 'கால்சியம்' இருப்பதாக ஆராய்ச்சி அறிவிக்கின்றது! விரிவஞ்சி இது போன்ற விவரங்கள் அனைத்தும் இங்கு தரப்படவில்லை. இங்ஙனம் மரக்கறி உணவிலேயே எல்லா வகைச் சத்துக்களும் கிடைக்க வீணே புலாலை நாட வேண்டியதில்லை. உள் நாட்டிலேயே தரம் மிகுந்த பொருள்கள் இருக்க, படாடோபம், ஆடம்பரம் முதலியவைகளுக்காக வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வது போலுள்ளது!

## தேவைதானா?

புலாலில் புரதச் சத்து மிகுந்திருப்பது உண்மை. பிற சத்துக்களும் புலால் உணவில் உள்ளன. இறைச்சி உண்ணுமலே இச்சத்துக்களை அடைவது எளிதென டாக்டர் ஜீன் (Dr. Jean) என்பார் உரைப்பர். இறைச்சி உணவில் பிராணியுண்ட உணவிலுள்ள சத்தே காணப்படுகிறது. இச்சத்தினை இரண்டாந்தரமாக இறைச்சியுணவினால் பெறுவதைக் காட்டிலும் நேரடியாகவே மரக்கறி உணவிலிருந்து பெறலாம். அதுவே சிறந்தது என்பது அன்னருடைய வாதம்.

மனித உணவில் இறைச்சியே தேவையில்லை. இறைச்சியற்ற, பால் போன்ற சத்துக்கள் நிறைந்த பொருட்களுடன் கூடிய மரக்கறி உணவே 'போதுமானது, திருப்திகரமானது, உடல் நலத்திற்கு உகந்ததென, 'ஏ', 'டி' வைட்டமின்களைக் கண்டு பிடித்த டாக்டர் மெக்கோல்லம் (Dr. Mc. Collum) கூறுவார்.‡

இத்தகு அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சியின் அடிப்படையைக் கொண்டு மறுக்க முடியாத உண்மைகளை உரைப்பவர்கள்.

கீழ்க்காணும் அட்டவணைகளிலிருந்து புலால் புசித்தலின் தேவையின்மையை நன்கறியலாம்:—

> **மஞ்சள்**
>
> மஞ்சள் முதலில் சீனாவிலோ இந்தோ சீனாவிலோ உண்டாயிற்று. பிறகுதான் பிற ஆசிய நாடுகளுக்குப் பரவியிருக்கிறது. தமிழ் நாட்டில் இது ஒரு சிறப்பான வாணிபப் பயிர். ஆசிய நாடுகளில் கறி வகைக்குப் பயன்படுகிறது. பெண்கள் மஞ்சள் தேய்த்துக் குளிப்பதனால் முகத்தில் அழகு ஏற்படுகிறதென்றும், தோல் நோய் ஏற்படுவதைத் தடுக்கிறதென்றும் கூறப்படுகிறது. அயல் நாடுகளில் பல நிறப் பொருள்களைச் செய்வதற்காகப் பயன்படுகிறது. இது உடம்பு நாற்றத்தை நீக்கும். பசி உண்டாக்கும். வாந்தி, தலைவலி, வீக்கம் முதலியவற்றிற்கு இது நல்ல மருந்து என்று நாட்டு மருந்துவர் கூறுவர்.

‡ I have not the slightest hesitation in saying that a vegetarian diet, supplemented with fairly liberal amounts of milk, is the most satisfactory diet that man can take..... All the evidence from both animal experience supports, in a manner which can never be broken down, the view point that MEAT IS NOT NECESSARY IN THE HUMAN DIET.

## உணவுச் சத்துக்களின் அளவுகள் பற்றிய அட்டவணை :

| உணவு-100 கிராம் | காலரிகள் | புரதம் (கிராம்) | கொழுப்பு (கிராம்) | கால்சியம் (கிராம்) | வைட்டமின் A சர்வதேச அலகு | வைட்டமின் மில்லி C (கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| பச்சரிசி | 348 | 6.9 | 0.4 | 0.01 | — | — |
| கோதுமை | 348 | 11.8 | 1.5 | 0.05 | 108 | — |
| அகத்திக் கீரை | 93 | 8.4 | 1.4 | 1.13 | 9000 | — |
| முளைக்கீரை | 47 | 4.9 | 0 5 | 0.5 | 2500 | — |
| பொன்னாங்கண்ணி | 84 | 5.0 | 0.7 | 0.51 | 11,000 | — |
| உளுத்தம் பருப்பு | 350 | 24 | 1.4 | 0.2 | 64 | — |
| உருளைக்கிழங்கு | 99 | 1.6 | 0.1 | 0.01 | 40 | 17 |
| முந்திரிப் பருப்பு | 596 | 21.2 | 46.9 | 0.45 | 100 | — |
| வாழைப் பழம் | 104 | 1.1 | 0.1 | 0.01 | 124 | 6 |
| மாம்பழம் | 50 | 0.6 | 0.1 | 0.01 | 4800 | 13 |
| கோழிமுட்டை | 173 | 13.3 | 13.3 | 0.06 | 1200 | — |
| ஆட்டுக்கறி | 194 | 18.5 | 13.3 | 0.15 | 31 | — |
| மீன்(வஞ்சிரம்) | 93 | 19.9 | 1.5 | 0.04 | 26 | — |
| பசும்பால் | 65 | 3.3 | 3.6 | 0.12 | 180 | 2 |

## அட்டவணை :

| உணவுப்பொருள்களின் பெயர் | ஈரம் % | புரதம் % | கொழுப்பு % | கார்போஹைடிரேடு % | தாது உப்புக்கள் % | வைட்டமின் |
|---|---|---|---|---|---|---|
| தானியம்: | | | | | | |
| கைக்குத்தல்அரிசி | 12.19 | 8.49 | 0.35 | 78.29 | 0.7 | * |
| முழுக்கோதுமை | 12.77 | 11.77 | 7.45 | 71.3 | 1.2 | * |
| கம்பு | 12.41 | 11.59 | 4.99 | 67.14 | 2.65 | * |
| கேழ்வரகு | 13.05 | 7.1 | 1.29 | 76.32 | 2.24 | |
| பருப்பு: | | | | | | |
| துவரை | 15.23 | 22.27 | 1.71 | 57.23 | 3.56 | ** |
| கடலை | 9.83 | 17.08 | 5.26 | 61.23 | 2.68 | ** |
| மாமிச உணவு: | | | | | | |
| மீன் | 78.38 | 22.6 | 0.06 | — | 0.83 | * |
| ஆட்டிறைச்சி | 71.46 | 18.54 | 13.3 | — | 1.26 | * |
| கோழிமுட்டை | 73.65 | 12.3 | 13.32 | — | 0.95 | ** |
| பசுவின்பால் | 87.6 | 3.3 | 3.6 | 4.8 | 0.7 | ** |

* சொற்ப அளவு . ** அதிக அளவு

அட்டவணைகளை அலசுவோ ருக்கு இறைச்சியுணவின் எக்ஸ்-ரே நன்கு புலனாகும். இறைச்சியுணவுப் பொருட்களில் பெரும்பாலானவற்றில் கார்போஹைடிரேட் இல்லை. பல், எலும்பு ஆகியவற்றின் வளர்ச்சி, உறுதி இரண்டிற்கும் காரணமான தாது உப்புக்கள் இறைச்சியுணவில் சிறிதளவே உள்ளன. வைட்டமின் சத்துக்களும் புலாலுணவில் மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றன.

இவ் உண்மைகளின் அடிப்படையில் ஆய்ந்தால் இறைச்சியுணவு தேவையற்றதெனத் தெளியலாம்.

## சிந்திக்கும் ஆற்றல்:

புலால் தொடர்ந்து புசிப்பதால் உடலில் கொழுப்புச்சக்தி மிகுகின்றது. இதனால் வெப்ப சம்பந்தமான நோய்கள், ஊளைச் சதை முதலியன தோன்றலாகும். புலால் தொடர்ந்து புசிப்பவரது சிந்திக்கும் ஆற்றல் நாளடைவில் குன்றுவதாக ஆராய்ச்சி அறிஞர்கள் அறைகின்றனர். வீணே வம்பை விலைக்கு வாங்குவானேன்? புலால் புசித்தலை விடுத்து அறிவினைக் காப்பதில் தடையென்ன?

- நவீன உணவியல் ஆராய்ச்சிப்படி மரக்கறி உணவு உண்பவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றனர். மகாத்மா காந்தி, பெர்னார்ட்ஷா போன்ற அறிஞர் பெருமக்கள் மரக்கறி உணவின் மாண்பிற்கு எடுத்துக்காட்டாவர். அன்னவர்கள், நியதிப்படி சத்து நிறைந்த மரக்கறி உணவு உண்டதால் நீண்டநாள் உயிர் வாழ்ந்தனர். மேலும் மரக்கறி உணவு உண்பதால் உடலுறுதி குறைவதில்லை.

## சிக்கனம்:

காய்கறிகள் விலை குறைவு-இறைச்சி விலையோ மலையுச்சி! உணவுச் சாலைக்குச் சென்றால் இட்லி, தோசை வகையறுக்கள் குறைந்த விலையில் விற்கப்படுவது காணலாம். 'மிலிட்டரி' ஓட்டல்களில் விற்கப்படும் கோழி புலவு, ஆம்லெட் போன்றவைகளின் விலை அதிகம். விலைவாசி மிகுந்த இந்நாட்களில் எளிய, சத்து மிகுந்த, விலை குறைந்த மரக்கறி உணவு உண்பதால் சிக்கனமாக வாழமுடியும். ஆடம்பரம் அல்லது தாராளச் செலவு அழிவின் அறிகுறி. சிக்கனமான வாழ்க்கை நடத்த விரும்புபவர்கள் முதற்காரியமாக புலாலுணவை விட்டொழிக்க வேண்டும்.

## எது நாகரிகம் ?

நாகரிக வாழ்வு நடாத்த விரும்புவோர் புலால் புசித்தலையும் நாகரிகமென எண்ணுகின்றனர். புலால் புசித்தலை வழக்கமாகக் கொண்ட மேலைநாட்டினர் அறிவிற் சிறந்து விளங்குவதில்லையா என்று வாதாடலாம். உண்மை உணராது வீணே வாதாடுவதில் பொருளில்லை. மேலைநாட்டினர் வாழும் இடத்தின் தட்ப வெப்ப நிலையில் அவர்களால் நோயின்றி நலமுடன் வாழ புலால் புசித்தல் இன்றியமையாததாகின்றது. *

நாகரிகத்தின் நல்ல பல இயல்புகளைக் கடைபிடிக்க விரும்பாது புலால் புசித்தலை மட்டும் விரும்புவது நன்றன்று. பண்பாட்

*Meat is a useful reserve in the cold countries, where the body can in emergency maintain its temperature in very cold surroundings by the burning away or breaking down of stored reserves and tissues.—"Every-day Domestic Science and Hygiene" By I. G. Jolison and P. M. Jaylon.

டிற்குப் பெயர்போன நம் நாட்டு மக்கள் இது போன்ற செயல்களால் மதிப்பிழந்து வருகின்றனர்.

## வள்ளுவர் வாதம் :

பகுத்தறிவு வாதியெனப்பகரும் வள்ளுவருங்கூட புலால் புசித்தல் மிக இழிவான செயல் என்கிருர்.

"உண்ணுமை வேண்டும்,
புலாஅல்; பிறிதொன்றின்
புண் அது உணர்வார்ப்
பெறின்."

பொருந்தும் ஆற்ருனும் புலால் உண்டல் இழிந்தது. புலாலாவது மற்ருெரு உடலின் புண். அதை ஆராய்ந்தறிந்து உணரப் பெற்ருல் ஊன் உண்பதை விட வேண்டும். மேலும் கூறுகிருர்:—

தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும் ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அது நின்ற ஊனை உண்ணுமை நன்று!

"உயிரைக் கொலை புரியாதவனை, ஊன் உண்ணுதவனை, எவ்வுயிரும் கைகூப்பித் தொழும்."

எடுத்ததெற்கெல்லாம் வள்ளுவரை ஆதாரங் காட்டும் நம் மக்கள் புலால் மறுத்தலைப் பற்றிய பொய்யா மொழிப் புலவரின் கருத்துக்களைக் கடைபிடிக்காததேன்?

'பிராணிகளிடத்து அன்பு, மிருகங்களும் நம்மைப் போன்ற உயிர்களே' என்றெல்லாம் எழுதியும் பேசியும் வரும் எண்ணற்றவர் இன்றுமுதலாகிலும் புலால் புசிப்பதை விட்டொழிக்க வேண்டும்.

## நோய்க்குக் காரணம் :

இறைச்சியுணவு கிருமிகளை உற்பத்தி செய்ய வல்லது. பன்றியின் இறைச்சி, ஆடு, மாடு ஆகியவைகளின் இறைச்சி முதலியவற்றில் நோய்க்கிருமிகள் இருப்பது இயற்கை. சாதாரணமாகக் கடைகளில் விற்கும் இறைச்சி, நோயற்ற பிராணிகளுடையதுதான் என்பது என்ன நிச்சயம்?

புலால் புசிப்பதால் உடலில் புளிப்பு சக்தி அதிகமாகின்றது. செரிக்கும் சக்தியும் தடைப்படுகின்றது. புலால் தொடர்ந்து புசிப்பதால்,

(1) மூத்திரக்காய் நோய்.

(2) இருதய நோய்.

(3) மூளையில் இரத்தக் குழாய்கள் வெடிப்பு.

போன்ற நோய்கள் தோன்றுவதாக மருத்துவ நிபுணர்கள் மொழிகின்றனர்.

புலால் தொடர்ந்து புசிப்பது புற்று நோயையும் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. (James Braithwaite, M. D. ,—Pamphlet on the subject published in 1902.)

புகைபிடித்தல் போன்ற பழக்கம் போன்றதே புலால் புசித்தலும். புலால் புசிப்பதால் உண்டாகும் நன்மைகளைக் காட்டிலும் இடர்ப்பாடுகளே ஏராளம். உடலியல் ரீதியிலும் பொருளாதார அடிப்படையிலும் புலால் புசிக்கும் பழக்கத்தினை விட்டொழித்தல் அறிவுடைய செயலாகும்.

நா. வரதராஜுலு நாயுடு

# ஷேக்ஸ்பியர்

*[ஷேக்ஸ்பியர் நாடகச் சுவையின் ஒரு துளியை நம் நாவில் தடவுகிறார், தமிழ்-இங்கிலீஷ் இலக்கியங்களைத் தமது மூச்சாக்கிக்கொண்டுள்ள இக் கட்டுரையாளர். ஷேக்ஸ்பியரைப் படிப்பதற்காகவேனும் இங்கிலீஷ் படித்தாகவேண்டும்! ஆம்! ஆனால் இங்கிலீஷ் கற்றவர்களில் எத்தனைபேர் ஷேக்ஸ்பியரைப் படித்துள்ளனர்?...அந்தோ!]*

இன்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர், உலக இலக்கியத்தில் புத்தொளி ஒன்று தோன்றியது. ஷேக்ஸ்பியர் 52 ஆண்டுகள் வாழ்ந்து 37 கவிதை நாடகங்களையும், இரண்டு நீண்ட கவிதைக் காவியங்களையும் பல சிறு கவிதைகளையும், மனித குலத்துக்கு ஈந்தார். எம்மொழியிலும் எக்காலத்தும், எந்த ஆசிரியரும் எட்டிப்பார்க்க முடியாத புகழ் ஷேக்ஸ்பியருடையது. அவர் நூல்கள் உலக மொழிகள் அனைத்திலும் பெயர்க்கப்பட்டுள்ளன. அவர் நாடகங்களை ஆங்கிலத்திலோ, மற்ற மொழிகளிலோ, அரங்கேற்றுவதே தம் திறமைக்குச் சான்று என இன்றைக்கும் நடிகர் கருதுகின்றனர். அவர் கருத்துக்களையும், மொழியையும், நாடக அமைப்பையும், பாத்திர உற்பத்தியையும் ஆராய்வதே தம் இலக்கியத் திறனுக்குச் சான்று என அறிஞர் கருதுகின்றனர். அவர் காலத்தில் அவர் கவித்திறமையுடன் நடிகத் திறமையையும் பெற்று விளங்கியிருந்தார் என்பது உறுதி.

ஷேக்ஸ்பியருடைய வாழ்க்கையைப் பற்றி நமக்குத் தெரிந்த செய்திகள் சிலவே. கம்பனும், காளிதாசனும் போன்ற கவிஞர் அனைவருக்கும் இதுவே விதி போலும்! ஷேக்ஸ்பியர் பிறந்ததும் இறந்ததும் இங்கிலாந்தில் ஆவான் நதிக்கரையில் உள்ள ஸ்ட்ராட்போர்ட் என்ற ஊரில். அவர் வாழ்ந்தது பெரும்பாலும் லண்டனில். அக்கால வழக்கப்படி லத்தீனும், கிரேக்க மொழியும், சிறிது ஃபிரஞ்சு மொழியும் அறிந்திருந்தார் எனத் தெரிகிறது. மக்கள் அவருடைய பெருமையை அவர் காலத்திலேயே உணர்ந்து இருந்தனரா என்பது ஐயுறத் தக்கது. அவர் நூல்களிலிருந்து ஓரளவு அப்போதிருந்த பெரும் பணக்காரரை அண்டி வாழ்ந்திருக்கலாம் என நினைக்க வழி உண்டு.

ஷேக்ஸ்பியர் வாழ்ந்தது, முதல் எலிசபெத் இராணியின் ஆட்சியில். ஆங்கிலக் கடற்படை ஆதிக்கம் வலுத்திருந்த காலம் அது. ஆங்கிலேய கம்பெனிகள் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் வியாபாரம் செய்யத்தொடங்கிய காலம். திரை கடல் ஓடித் திரவியம் தேடியும், பிறநாடுகளிலிருந்து பொருளுடன் அறிவும்

திரட்டியும், பிரிட்டனை வளம்படுத்திய காலம். ரோமன் கதோலிக் மதத்தலையினின்று ஆங்கில சமூகம் பிரிந்த காலம். 'ரினேஸான்ஸ்' என்ற புரட்சி இயக்கம் ஐரோப்பாவில் தோன்றி, புதுக் கலைகளும் புது விஞ்ஞானமும் வளரத் தொடங்கிய காலம். விஞ்ஞான சாஸ்திரிகள் கோபர்னிகஸ், கெப்லர், கலிலேயோ—கலை வல்லுநர் மிகாலான்ஜலோ, லியனர்டோ டாவின்சி போன்றவரை உலகம் அறிய வந்த காலம். ஐரோப்பாவில் மனித குலம் ஆயிரம் ஆண்டு உறக்கத்திலிருந்து வீறுகொண்டு எழுச்சி பெற்ற காலம் அது.

அச்சூழ்நிலையில் ஷேக்ஸ்பியர் மகாகவி தோன்றினர்.

ஆங்கில இலக்கியத்தில் அவருக்கு முன்னும் பின்னும் எவரும் எட்டியிராத அளவுக்கு சொல் வளமும் பொருள் ஆழமும் கவிதை நயமும் செறிந்து விளங்குவது ஷேக்ஸ்பியருடைய வாக்கு. மாத்யூ ஆர்னல்ட் கூறுகிருர்: "எவரும் எட்டமுடியாத அறிவு; நுழைய முடியாத நுண் மாண் நுழைபுலம். உள்ளொளி ததும்பும் உணர்ச்சிகள். எளிமையில் எளிமை; அருமையில் அருமை. மக்களின் துயரங்களையும் எழுச்சிகளையும் அகத்தே தாங்கும் திரு நுதல்—ஐயா, பிறர் எம் வினக்களுக்கு விடை பகருகின்றனர். நும் உயர் நிலையைத் தொழுவதன்றி வேறென்ன யாம் செய்ய உளது?" தமிழ்ப் புலவர் ஒருவர் கூறியதுபோல, "தலை அல்லால் கைம்மாறுஇல்லனே."

"ஷேக்ஸ்பியர் கவிதையைக் கற்குந்தோறும் உலகில் சிறந்த அறிவாளி ஒருவருடைய நட்பைப் பெறுகிறோம். அவர் கவிதையைப் பற்றி பிறர் எழுதிய நூல்களைப் படிக்கும்போது அறிவுக்கும் பேதைமைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை அறிகிருேம்," என்ருர் ஹாஸ்லிட்.

இலக்கிய நுகர்ச்சி இலக்கண வரம்புக்கு உட்பட்டதன்று. கவிஞன் இதயம் அவன் பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுகிறது. ஒவ்வொரு நாடக பாத்திரமும் தன் கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்துப்போது கவிஞன் அப்பாத்திரத்தின் மனதில் நுழைந்து அனு

### வெற்றிலை

"வெற்றிலை முதன் முதல் மலேயாவில் தோன்றியது. இதை வடமொழியில் 'தாம்பூலம்' என்கிருர்கள். 2,500 ஆண்டுகளுக்கு முன்பே இது இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். வெற்றிலை, பாக்கு-சுண்ணும்புடன் சேர்த்து சுவைக்கப்பெறுவதனல் உணவைச் செரிக்கவைக்கும்; வாய்க்கு மணம்தரும்; மனத்துக்கு இன்பம் அளிக்கும். வெற்றிலைச் சாற்றுடன் தேன் சேர்த்து உண்டால் இருமலை நிறுத்தும்; தாய்ப்பால் சுரப்பதை நிறுத்துவதற்கு இலைகளை வாட்டிப் பல அடுக்குகளாகப் பெண்கள் மார்பில் அப்பிக் கொள்வதுண்டு. வெற்றிலைக் கொடியின் இளம் வேர்களை மிளகுடன் சேர்த்து உண்டால் பெண்கள் மலடிகளாவார்கள். பாடகர்கள் தொண்டை நயத்துக்காக வெற்றிலை வேரை மெல்லுவார்கள். காது வலிக்கும்-கண்வலிக்கும் வெற்றிலைச் சாறு பிழிவதுண்டு. நறுமணப் பொருள்களுடன் சேர்த்து சர்பத்து செய்து உண்டால் உடல் வலுவேற்படும்."

—"கலைக்களஞ்சியம்"

பவித்து அவ் உணர்ச்சியை முற்றிலும் அறிந்திருந்தாலன்றி அப்பாத்திரத்தின் இயல்பு வெளிவராது. ஷேக்ஸ்பியர் கவிதையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாத்திரங்கள் உளர்; 37 நாடகங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட பாட்டுடைத் தலைவர், பாட்டுடைத் தலைவியர். இவர் ஒவ்வொருவருடைய அகம் புகுந்து, வழி உணர்ச்சிகளை நுகர்ந்து அப்பாத்திரங்களின் வாக்காக வெளிப்பட்டன, ஷேக்ஸ்பியரின் கருத்துக்கள்.

ஷேக்ஸ்பியர் நாடகம் எழுதியதால், கம்பனையும் சங்கப் புலவரையும் போல இயற்கையையும் கடவுளையும் மக்களையும் அதிகமாகப் புகழ இடமிராது. ஒவ்வொரு பாத்திரமும் தம்மைத் தம் உரையால் வெளிப்படுத்த வேண்டும். அவ் உரையே அன்றோ நாடகம்?

## நாடக பாத்திரங்கள்

எந்தப் பாத்திரத்தையும் அவர் அவர் கூற்றின் இரண்டு தொடர்களால் அறுதி இட்டுக் கூற முடியும். இது சிறந்த ஆசிரியர்களுக்கு உரிய பண்பு. கம்பனில் இரண்டு வரிகள் சொன்னால் போதும்: அக்கூற்று இராமனுடையதா, இந்திரசித்துடையதா, அனுமானுடையதா எனச் சொல்லி விடலாம். ஷேக்ஸ்பியர் பல நூறு பாத்திரங்களை உண்டாக்கி இருந்தாலும், நடையிலும் உணர்விலும் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் வேறுபாடு உண்டு.

உபபாத்திரங்களும், ஆசிரியன் ஏற்படுத்தும் சூழ்நிலையும் தலைவன் தலைவியர்க்கு உயர்வு தருவன. "அரம்பையர் சானகிக்கு அழகு தந்து அயல்சார" என்ற கம்பன் வாக்குப்போல ஒவ்வொரு நாடகத்திலும் ஷேக்ஸ்பியரின் உபபாத்திரங்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் பொலிவு தரும். "ஒரு இயாகோ, ஒரு எமிலியா, ஒரு ஒதல்லோ, ஏன் ஒரு கைக்குட்டைத் துணிகூட டெஸ்டமோனாவின் பெருமையை விளக்கவே துணை ஆகிறது," என்பார், ப்ராட்லி.

ஏனைய மகாகவிகளைப்போன்று ஷேக்ஸ்பியரும் தமக்குமுன் வழக்கில் இருந்த கதைகளையும் வரலாற்றையும் ஆதாரமாகக் கொண்டே தம் நாடகங்களைப் புனைந்தார். அவருக்கு ஆதாரம் பெரும்பாலும் ஆங்கில நாட்டு வரலாற்று நூல்களும், புளுடார்க் என்ற கிரேக்கர் எழுதிய வாழ்க்கை வரலாறுகளும், பொக்காஷியோ என்ற இத்தாலியர் எழுதிய கதைகளுமாம். மகாகவிகள் புதுக் கதைகளையும் புது நிகழ்ச்சிகளையும் புனைந்து புகழ் தேட வேண்டியது இல்லை. அப்புகழைத் துப்பறியும் நாவல்கள் எழுதுவோர் அடையட்டும்! தாம் கொண்ட பாத்திரங்களுக்கு உயிர் ஊட்டி, பெருமையிலும் சிறுமையிலும் அவர்களை நாம் வியக்கும்படி சிறப்புத்தந்து அவர்களுடைய மேம்பாட்டையும் தாழ்வையும் காட்டி, வாழ்க்கையோடு ஒன்றி நிற்பது காவியம். இப்பெருமையை சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம் முதல், கதே (Goethe) ஈறாகப் பல மொழிக் காவியங்களிலும் நாம் காணலாகும். ஷேக்ஸ்பியர் இதற்கு விலக்கன்று.

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நடிப்பதற்காகவே எழுதப்பட்டவை. அவற்றை ஆங்கிலமொழி பேசப்படும் நாடுகள் மட்டிலும் அன்றிப் பிற மொழிகளிலும் இன்றைக்கும் நடிக்கிறார்கள். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றாலன்றி, உலகம் எந்த நடிகரையும் சிறந்த நடிகராக ஏற்

றுக்கொள்ளாது. ஷேக்ஸ்பியர் நாடகங்களை இயற்றிய காலத்தில் இருந்த நாடக அரங்குக்கும் இன்றைய அரங்குக்கும் பல வேறுபாடுகள் உளவேனும், அவை இன்றைக்கும் மக்களுடைய மனதைக் கவருகின்றன. பலமுறை அவற்றைப் படித்திருந்தாலும் நாடகங்களைப் பார்த்திருந்தாலும் 'காமம்' செறிதோறும்" புதுமை காண்கிறோம் : "நவில் தொறும் நூல் நயம் போலும்; காணுந்தோறும் அன்னதே ஆம்."

இனி, ஷேக்ஸ்பியர் நாடகச் சுவையை நுகர முற்படுவோம். ஆயினும், மறுபடியும் கூறுவேன். நாம் படிப்பது, எழுதுவது, காண்பது எதுவும் தாமே நுகர்வதற்கு ஈடாகாது.

ஷேக்ஸ்பியர் நாடகங்களை மூவகையாகப் பிரிக்கலாம் : இன்பியல் நாடகங்கள், வரலாற்று இயல் நாடகங்கள், துன்பியல் நாடகங்கள் என. சில வரலாற்று இயல் நாடகங்கள் துன்பியல் தழுவியனவாகவும் சில இன்பியல் தழுவியனவாகவும் உள். இன்பியல் நாடகங்களுள் சிறந்தனவாகக் கருதப்படுவன : சூருவளி (The Tempest), நடுவேனிற் கனவு (Midsummer Nights Dream), விரும்பிய விதமே (As You Like it), பன்னிரண்டாம் இரவு (Twelfth Night),

துன்பியல் நாடகங்களுள் சிறந்தன :

ஹாம்லட் (Hamlet), ஒதல்லோ (Othello), மாக்பெத் (Macbeth), லீயர் அரசன் (King Lear), ரோமியோ–ஜூலியத் (Romeo and Juliet). வரலாற்று இயல் நாடகங்களுள், ஜூலியஸ் சீஸர் (Julius Caesar), கோரியோலேனஸ் (Coriolanus), அந்தோனி-கிளியோபாட்ரா(Antony and Cleopatra), ரிசர்ட் நாடகங்கள் (Richard II and Richard III) போன்றவை, துன்பியல் நிறைந்தனவாகவும், ஐந்தாம் ஹென்ரி (Henry V) இன்பியல் நாடகமாகவும் கருதப்படும்.

## இன்பமும் துன்பமும்

துன்பத்தில் இன்பம் கலந்திருந்தாலும் இன்பத்தில் துன்பம் கலந்திருந்தாலும் வாழ்க்கையில் நாம் அறிந்ததே. துன்பமே முற்றும் அனுபவித்தவரும் இன்பமே முற்றிலும் துய்த்தவரும் யார் உளர்? அவ்வாறே, குறை எதுவும் அற்ற காவியத் தலைவனோ தலைவியோ இரார். குற்றம் அற்றவர், குறைவே இன்றி நிறைவே பொருந்தியவர் யார் உளர்? வாழ்க்கை இருண்டோ முற்றிலும் ஒளியுடனோ இராது. இவ் உண்மை அறிந்த ஷேக்ஸ்பியர் தம் துன்ப நாடகங்களுடன் இன்பத்தையும், இன்ப நாடகங்களுடன் துன்பத்தையும் இரண்டறக் கலந்து அளித்துள்ளார். இரண்டும் கலந்ததே வாழ்க்கை. இன்பத்தையும் துன்பத்தையும் வெவ்வேறாகக் காணாது ஒருங்கே, இரண்டற, ஷேக்ஸ்பியர் காட்டியுள்ளார்.

ஹாம்லெட் வஞ்சம் தீர்க்க டென்மார்க்குக்குத் திரும்புகிறான். அவனுக்குக் கிடைக்கும் எதிர்பாராத வரவேற்பு ஆஸ்ரிக் இடம். ஆஸ்ரிக்கின் ஒய்யார மேடைப் பேச்சு ஹாம்லெட்டின் தீவிர சிந்தனைக்கு மாறுபட்டு ஒலிக்கிறது.

ஹென்ரி V இங்கிலாந்தின் அரசனாக முடிசூடி தன் நாட்டை உறக்கத்தினின்று எழுப்பி இங்கிலாந்தைத் திருத்தி, அறத்திலாயினும் மறத்திலாயினும் சீரிய நிலைக்குக் கொண்டுவருவதாக

வாக்குறுதி செய்கிறான். உடனே, அவனுடைய பழைய குடிகாரத் தோழர்கள் தோன்றுகின்றனர், ஹென்ரியை வாழ்த்த; அவனிடம் சிறு பேறுகளை அடைய. அப்போது ஹென்ரியின் பெருமிதப் பேச்சும் அவர்கள் 'பழையம் எனக் கருதி பண்பல்ல செய்யும் கெழுதகைமையும்' ஒரே சமயத்தில் பெருமையையும் சிறுமையையும் இணைப்பன.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன தமிழ் இலக்கியத்தில் மகடூஉக் குணங்களாகப் போற்றப்படுவன. ஆங்கிலத்தில் காணல் அரிது. அத்தகைய குணங்கள் பொருந்திய தலைவி ஒருத்தி ஷேக்ஸ்பியரிலும் உண்டு. மிராண்டா. கண்காணாத தீவில் தந்தையால் வளர்க்கப்பட்ட மிராண்டா முதலில் பெர்டினன்டைக் கண்டதும் காதல் கொள்கிறாள். 'எத்துணை வனப்பு! உலகே வாழி; இத்தகைய மக்கள் உள்ள உலகம் சீரியது; புதியது' என்கிறாள். அவள் காதலன் பெர்டினன்ட் மிராண்டாவின் தந்தை ஆணையின்படி, மரக் கட்டைகளை எடுத்து அடுக்கும் போது அவள் தன் காதலை அவனிடம் வெளியிடுகிறாள். அவனுடைய உடல் துன்பத்திலும் அக் காதல் அவனுக்கு மன இன்பம் பயக்குகிறது. வாழ்வில் ஆசை உண்டாக்குகிறது.

"நீ என்னை மணந்தால், நான் உன் மனைவி ஆவேன்; நீ என்னை மணக்காவிட்டால், நான் உன் அடிமையாவேன்," என்ற சொற்கள்-என்ன கனிவு, ஆர்வம்!

## உலகறிந்த வைரங்கள்

'உலகமே ஒரு நாடக அரங்கு'

'இருப்பதா, இறப்பதா?'

'கணவனே தலைவன், கணவனே உயிர். கணவனே உடல்'

'கருணையின் ஒழுக்கு, மாரி போன்றது'

'இந்த ஆங்கில நாடு'

'தற்பெருமையே, உன்னிடம் விடைகொண்டேன்'

'ஒரு முத்தம்; என் நாடு கடந்த வாழ்க்கை போல நீண்டது;
என் வஞ்சினம் போல இனியது'

'பெயர் எதுவாயின் என்? மல்லிகை வேறு பெயர்கொண்டு அழைப்பின் மணம் கமழாதோ?'

'இமையத்தை அசைப்பாயோ நீ-தளர்ந்தவன் நானே?'

'அணையா விளக்கே; உன்னை அணைவித்த பின் ஏற்றும் திறனுடையேனே யான்?'

எனப் பல பல சொற்றொடர்கள், அவற்றுடன் தொடங்கும் பேச்சுக்கள், அவற்றில் ததும்பும் உணர்வுகள், அவ்வுணர்வுகளைக் காட்டும் மேடை நடிப்பு—யாவும் ஆங்கில மொழியில் உலகறிந்த வழக்கு. யாவற்றிற்கும் மேலாக ப்ராட்லி ஒன்று கூறுவார்:—"ஷேக்ஸ்பியர் நாடகங்கள்யாவும் அழிந்துபோய் ஒன்றுமட்டும் எஞ்சும் என்றால் அது 'லீயர் அரசன்' என்ற நாடகம் ஆகட்டும்." அந்த நாடகத்திலும் சில வரிகள்:

லீயர் தன்னைச் சுற்றி உலகம் சுழல்கிறது என எண்ணும் பேதைகளுள்ஒருவன். ஓட்டாண்டியாக விரட்டப்படுகிறான். கடும் குளிரில் போர்த்த ஆடையின்றி, ஒண்ட இடமின்றி, உண்ண உணவின்றி, மழையால் நனைந்து கான வெளியில் திரியும்போது தன் மடமையை உணருகிறான். தன் செயலுக்குக் கழுவாய் தேடி அலைகிறான். இறைவனைப் பற்

றிய எண்ணம் ஒருபுறமும், மண்ணோடு ஒட்டிய உணர்ச்சிகள் ஒரு புறமும் அவனை இழுக்கின்றன. ஒரு கூப்பாடு போடுகிறான்; தனக்காக அல்ல; உடையற்று, உணவற்று, இருக்க இடமற்று, அலையும் ஏழை மக்களுக்காக. "ஓ, அரசே, இவ் ஏழைகள் படும் பாட்டை அறிவதற்காக உன் ஆடம்பரத்தை அகற்றிவிட்டு இங்கு வா! அவர்கள் உணர்ச்சியை நீயும் அறி. தெய்வம் உண்டா இல்லையா? தெய்வம் நீதியைக் காக்கிறதா? அநீதியை வளர்க்கிறதா? என்பதை மக்கள் காணட்டும்." இத்துடன் லியருக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது.

இப் பேச்சுக்காக ஷேக்ஸ்பியரை உளமாறப் போற்றுவோம், கும்பிடுவோம் என்பார், ப்ராட்லி.

ஷேக்ஸ்பியர் வாழ்க!

# சீட்டாட்டம்

'பிக்' (Pick); 'பெசிக்' (Bezique); 'ஏல பிரிட்ஜ்' (Auction Bridge); 'ஒப்பந்த பிரிட்ஜ்' (Contract Bridge); 'ரம்மி' (Rummy); 'போக்கர்' (Poker); 'விஸ்ட்' (Whist) முதலிய மேல்நாட்டு ஆட்டங்களும், 'அவுட்'; 'பிடி'; 'கழுதை'; 28; 304; 504 முதலிய இந்திய (குறிப்பாகத் தென் இந்திய) ஆட்டங்களும் சீட்டு மூலம் ஆடப்படும் பொழுது போக்கு விளையாட்டுகள். இன்னும் நூற்றுக்கணக்கான ஆட்டங்களும் உண்டு. இன்று இது பெரும்பாலும் சூதாட்டமாகவே பணம் கட்டி ஆடப் பெற்று வருகிறது. ஒரு சீட்டுக் கட்டில் 52 சீட்டுக்கள் உண்டு; நான்கு வகைகள் (சாதி), ஸ்பேடு, கிளப், ஹார்ட், டைமண்டு-என உண்டு. சுமார் 300 ஆண்டுகளாக இச்சீட்டுக்களில் எவ்வித மாறுதலுமே ஏற்படவில்லை.

இந்த விளையாட்டு எந்த நாட்டில், யாரால் கண்டுபிடிக்கப்பட்டது எனத் தெரியவில்லை. சீனா, அரேபியா, இந்தியா —ஆகிய நாடுகளில் நீண்ட காலமாகவே இருந்து வந்ததாகத் தெரிகிறது.

16–ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரையில் ஒரு சீட்டுக் கட்டில் 78 சீட்டுகள் இருந்தன; அவற்றில் 56 எண்களுடையன; மற்றவை படச் சீட்டுகள்.

இந்த ஆட்டம் 1377ல் ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும், 1379ல் பெல்ஜியத்திலும் இத்தாலியிலும், 1392ல் ஃப்ரான்சிலும் தொடங்கப்பட்டதாம். ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான சீட்டுக்கட்டுகள் உலகமெங்கும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

டாக்டர். பா. நடராஜன், M.A., D. Litt., M.L.A.

# சோஷலிச பட்ஜட்

## II

*[புதிய நேர்முக வரிகளினால் உற்பத்தி குறையுமா? பெரு முதலாளிகளின் ஊக்கம் குறையுமா? 'குறையாது', என்கிறார், இந்த இரண்டாவது கட்டுரையில், பொருளாதார நிபுணர். இம் முடிவுக்கேற்ற ஆதாரங்களையும் தருகிறார்.]*

சோசலிசத்தின் நோக்கம் சமூக நீதியை வழங்குவதோடு, பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதுமாகும். உற்பத்திப் பெருக்கத்துக்கு டி. டி. கே. பட்ஜட் உறுதுணையாக அமைந்துள்ளதா அல்லது ஊறுவிளைக்கும் வகையில் உள்ளதா' என்பதை ஆராய்வோம்.

'தொழில் முதலாளிகள் மேல் பெரு வரி விதிக்கும்போது, அவர்களது இலாபம் குறைகிறது; ஊக்கம் குறைகிறது. ஆகவே புதுத் தொழில்களைத் தொடங்கும் ஆர்வம் மட்டுப் படுகிறது. இதனால் நாட்டில் உற்பத்தி குறைகிறது; பொருளாதார வளர்ச்சி தடைபடுகிறது'—என்று சொல்லப்படுகிறது.

பங்கு மார்க்கட்டின் போக்கு இதற்கு ஒரு அறிகுறியாக எடுத்துக் காட்டப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி ஏற்படும், பங்கு இலாபம் பெருகும் என்ற நம்பிக்கை இருக்குமானால், பங்குகளின் விலை உயர்ந்து கொண்டே போகும். இல்லாவிட்டால், பங்குகளின் விலை மந்தமாகும்; அல்லது சரியும்.

இப்பொழுது, ஃபெப்ருவரி 29ந் தேதி பட்ஜட் வெளியானதிலிருந்து பங்கு மார்க்கட் மந்தமாகவே இருந்து வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் சென்ற மொரார்ஜி பட்ஜட்டில் அமித இலாபவரி என்ற வரி போடப்பட்டது. இது பெருந் தொழில்களின் இலாபத்தில் கணிசமான தொகையை வரியாக எடுத்துவிடும் முறையில் அமைந்திருந்தது. இந்த வரி டி. டி. கே பட்ஜட்டில் எடுக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை பொதுவாக பங்கு மார்க்கட்டில் நிலவிவந்தது. அரசாங்கப் பொறுப்பிலுள்ள பலரும் அந்த நம்பிக்கை வளரும் வகையில் பேசியும் வந்தனர். அந்த நம்பிக்கையால், பங்கு மார்க்கட்டில் சூதாடும் பலர் பங்குகளின் விலை ஏறும் என்று கருதி, சற்று அதிக விலை கொடுத்து ஏராளமான பங்குகளை வாங்கிவைத்துக் கொண்டனர். அமித லாபவரியும் அவர்கள் நம்பியபடியே எடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவர்கள் நம்பியிருக்காத முறையில் அந்த வரி இருந்த இடத்தில் உபரிலாபவரி என்று ஒன்று வந்துள்ளது. பெயரளவில்தான்

(Super Profits Tax) அமிதலாபவரி போனதே தவிர, பளு அளவில் போகவில்லை. (Surtax on Profits) என்ற புதுப்பெயரில் அதேவரிப் பளுவை உபரிலாப வரி சுமத்துவதாக இருக்கின்றது. எனவே, அதிக விலைகொடுத்து பங்குகளை வாங்கினவர்கள் திரு திரு என்று விழிக்கிறார்கள். இது தான் பங்குமார்க்கட்டில் ஏற்பட்டிருக்கும் சபத நிலைக்குக் காரணம். இது நீடித்து நில்லாது. வாங்கினவர்கள் விற்று, பொருள் இழந்து மீண்டும் பங்குமார்க்கட் தன்னிலைக்கு வந்தே தீரும்.

ஆகவே, இன்றைய பங்கு மார்க்கட்டின் போக்கை வைத்து, உற்பத்திப் பெருக்கத்துக்கு பட்ஜட் ஊறு விளைவிக்கின்றது என்று சொல்லிவிட முடியாது. வரிப்பளுவுக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் இருக்கும் தொடர்பை அந்த வரிகளின் தன்மையை ஆராய்ந்து கண்டே சொல்ல முடியும்.

முதலில் வருமான வரியை எடுத்துக் கொள்வோம். தனி நபர்கள் வருமான வரி விதிப்பில் பல சிக்கலான முறைகள் இருந்து வந்தன. எத்தனையோ சர்சார்ஜ்கள் (உபரிவரி) அவ்வப்போது கூட்டப்படுவதும், குறைக்கப்படுவதுமாக குழப்ப நிலையில் போடப்பட்டு வந்தன. இவற்றை எல்லாம் நீக்கிவிட்டு, வருமான வரி விகிதத்தில் தெளிவான முறையில் சீர்திருத்தங்கள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளன. இனிமேல், வருமான வரி, அமிதவருமானவரி (Super-tax) என்ற இரண்டுதான் நிலையாக இருக்கும். தற்காலமாக ஒரு உபரிவரி (Surcharge) யும் போடப்பட்டுள்ளது. இப்படி திருத்தி அமைத்ததின் விளைவாக, தனிநபர்கள் மொத்தத்தில் கொடுக்கும் வருமானவரி விகிதங்கள் முன்னிலும் இப்பொழுது குறைந்துள்ளது. உழைப்பிலிருந்து வரும் வருமானத்தில் ரூ 1 லட்ச வருமானத்துக்கு மேல் தான் வருமான வரியும், அமிதவரியும் கூட்டி வரும் தொகையில் 10 சதம் என்று உபரிவரி (Surcharge) உண்டு. சொத்திலிருந்து வரும் வருமானத்தில் ரூ 10,000-க்கு மேலேயே உபரிவரி தொடங்கி விடுகிறது. ரூ 10,000-க்கும் ரூ. 25,000-க்கும் இடையில் தனிநபர் கொடுக்கும் வருமானவரியும் அமிதவரியும் சேர்ந்த தொகையில், $12\frac{1}{2}$ சதம் சர்சார்ஜாக விதிக்கப்படும். ரூ 75,000-க்கு மேல் வரும் பொழுது சர்சார்ஜ் $17\frac{1}{2}$ சதமாகிறது. பொதுவாக, தனிநபர்களின் உழைப்பால் வரும் வருமானத்தின் மீது முன்னிலும் இப்பொழுது பளு குறைந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். இதனால், வருமானமுள்ளவர்களின் சேமிப்பும், தொழில்களில் முதலீடு செய்யும் ஆர்வமும் குறைந்துவிடும் என்று சொல்ல முடியாது.

அடுத்து, கட்டாய சேமிப்புத் திட்டம் கைவிடப்பட்டு, அதற்குப்பதிலாக வருடாந்திர டிப்பாசிட் திட்டம் (Annuity Deposit Scheme) என்பது உருவாகியிருக்கிறது. குறைந்த வருமானமுடையவர்களுக்கு இப்பொழுது இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ரூ 15,000-க்குமேல் ஆண்டொன்றுக்கு வருமானம் வருகிறவர்கள் தான் புதுத்திட்டத்தில் உட்படுகிறார்கள். இதுவும் படிப்படியாக வருமானத்தோடு உயருவதாக இருக்கின்றது. ரூ 15,000 வருமானத்தின்மீது 5 சதவிகிதத்தில் தொடங்கி, ரூ 70,000 வருமானம் வரும் பொழுது $12\frac{1}{2}$ சதமாகிறது.

இது தனி நபர்களுக்கும் சங்கங்களுக்குமே. கம்பனிகளோ கூட்டுறவு சங்கங்களோ இதற்கு உட்படா.

டிபாசிட் கட்டுகிற ஆண்டில் மொத்த வருமானத்திலிருந்து டிபாசிட் தொகை கழிக்கப்பட்டு, மீதித்தொகை மீதுதான் வரி வசூலிக்கப்படும். டிபாசிட் கட்டின மறு ஆண்டிலிருந்தே 4 சதம் வட்டிக்கு வட்டி போட்டு, முதலும் வட்டியும் திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் அது பத்து ஆண்டுகளாக சிறுகச்சிறுகத்தான் திருப்பிக் கொடுக்கப்படும். அப்படித்திரும்ப முதலும் வட்டியும் வாங்கும் பொழுது, அந்தத் தொகை வருமானமாகக் கணிக்கப்பட்டு, அதற்கேற்ற வரிவிகிதம் மொத்த வருமானத்தில் போடப்படும்.

இந்தப் புதுமுறையால் ரூ. 15,000-க்கு மேல் வருமானமுடையவர்கள் முன்னிருந்த கட்டாய சேமிப்பு முறையை விடச் சற்று அதிகத் தொகையே செலுத்த வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். ஆனால் ஆண்டு தோறும் திரும்பப் பெறும் வசதி இருக்கிறது. முன்னிருந்த முறையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறமுடியும் என்றிருந்தது. பொதுவாக, இந்த முறையினால் சிக்கன உணர்ச்சி ஏற்படுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது என்பது தவிர, வரிவருவாய் மிகுந்துவிடும் என்பதில்லை. இதன் வழியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ 10 கோடி மூலதன வரவுக் கணக்கில் (Capital Receipts) ஏறும்; ஆனால் இது திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியதேயாதலால், இதனால், உற்பத்தி ஆர்வம் குறைந்துவிட வழியில்லை.

## கம்பெனி வரிகள்

இனி, கம்பெனி வரி (Corporation Tax) யை எடுத்துக் கொள்வோம். வருமானவரி 25 சதமென்றும், அமிதவரி 25 சதமென்றும், ஆக வருமானத்தில் 50 சதமாக கம்பெனி வரி முன்போலவே இப்பொழுதும் இருக்கும்.

ஆனால் முன்னிருந்த (Super profits Tax) அமித லாபவரிக்குப் பதிலாக இப்பொழுது உபரிலாப வரி (Surtax on profits) வந்துள்ளது. புது வரி பழைய வரியை விட முதலீட்டுக்கும் உற்பத்திக்

---

### எழுத்தில் மாற்றம்

மேலைநாட்டுப் பாதிரியார்கள் தமிழுக்கு, தமிழினை வளர்ப்பதற்குச் செய்த தொண்டுகள் பலப்பல. தமிழின்மாட்டு அளவிலா அன்பு கொண்டிருந்தார்கள் எனில் அஃது மிகையாகாது. பல ஆண்டுகளுக்கு முன்பு எ ஏ ஒ ஓ என்று குறில் நெடில் எழுத்துக்களாக எழுதப்படவில்லை. எ, ஒ என்று எழுதினால் அவைகளை நெடிலாகக் கொண்டு ஏ ஓ என்றுதான் படிக்கவேண்டும். அக்குற்றெழுத்துக்களின் மேல் புள்ளியிட்டு எ் ஒ் என்று எழுதினால் அவைகளைக் குறிலாகப் பயன்படுத்த வேண்டும். இத்துணை சிக்கல்களையும் நீக்கி எ, ஒ என எழுதினால் குறிலாகவும், ஏ ஓ எனவெழுதினால் நெடிலாகவும் கொள்ள வழிவகுத்து மாற்றியவர் யார் தெரியுமா?

வீரமாமுனிவர் என்று அழைக்கப்பட்ட கான்ஸ்டன்டைன் பெஸ்கி எனும் இத்தாலிய நாட்டுப் பாதிரியார்.

படும் பங்கு லாபத்தில் இப்போது பல வேற்றுமைகளிருக்கின்றன. வருமானவரி எல்லாப் பங்கு லாபத்தின் மீதும் 25 சதம் என்றிருந்தாலும், அமித வரி சில கம்பெனிகள் மீது கூடுதலாகவும், சில கம்பெனிகள் மீது குறைவாகவும் போடப்பட்டிருக்கிறது. இனிமேல் கம்பெனிக்குக் கம்பெனி கொடுக்கும் பங்கு லாபத்தொகை மீது அமித வரியே கிடையாது.

பாங்குக் கம்பெனிகள் இந்தியாவுக்குள்ளேயே வைத்திருக்கும் ஒதுக்கு நிதித் தொகையின் மீதான வரியில் சலுகைகள் பெறுகின்றன; இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் மூலதனப் பெருக்கம், கம்பெனிப் பங்கு லாபம், இதர லாபம் ஆகிய துறைகளில் வரிச் சலுகை பெறுகின்றன. உபரிவரியைக் கணக்கிடுகையில், தொழிலில் ஏற்பட்ட இழப்பு, செலவு செய்யப்படாத தேய்மான நிதி முதலியவை இலாபத்தில் கழிக்கப்படுகின்றன. சட்டப்படி சில கம்பெனிகள் பங்குலாபம் கொடுத்தாக வேண்டுமென்றிருக்கின்ற விதி நெகிழ்த்தப்பட்டுள்ளது. இதனுல் அவை லாபத்தைத் தொழில் பெருக்கத்துக்காக மேலும் போடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறெல்லாம் தொழில்களில் மேலும் முதலீடு செய்கிற முறையில் கம்பெனி வரியானது திருத்தி அமைக்கப் பட்டிருக்கும் போது, தொழில் வளர்ச்சி தயக்கமடையும், தடைபடும், ஊக்கம் குறையும், ஆர்வம் குன்றும் என்று சொல்வதற்கெல்லாம் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை.

வெளிநாட்டு மூலதனம் அதிகமாக வருவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு கம்பெனிகள் நடத்தும் தொழில்களில் வரும் பங்கு லாபத்தின்மீது போடப்பட்டிருக்கும் 25 சத வரிவிகிதம் 15 சதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்படி, தொழில் நுட்பப் பணிகளுக்காக இந்தியக் கம்பெனிகள் அயல் நாட்டுக் கம்பெனிகளுக்குக் கொடுக்கும் ராயல்ட்டி, ஊதியம் முதலியன மீது 25 சதம் அமித வரியும், ஏனைய வருமானங்கள் மீது 40 சதம் அமிதவரியும் போடப்பட்டுள்ளது, வெளிநாட்டிலிருந்து இங்குவந்து தொழில் செய்வோரின் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக குழந்தை ஒன்றுக்கு ரூ 2000 வரையில் இரண்டு குழந்தைகளுக்கு வருமானவரியிலும், அமிதவரியிலும் விலக்களிக்கப் பட்டிருக்கிறது. இம்மாதிரியான சலுகைகள் மேல் நாடுகளில் எல்லோருக்கும் இருந்து வருகின்றன. ஏற்றுமதியைப் பெருக்கவும் பல சலுகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## முயற்சி குன்றுமா?

நேர்முக வரிகள் அதிகமாகிவிட்டன; அதனுல் முயற்சியும் ஆர்வமும் குறைந்துவிடும் என்று சொல்வோர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிருேம். சொத்துக்கு ஆபத்து வந்துவிட்டதென்று ஒருவரும் சொத்துச் சேர்ப்பதை நிறுத்திவிட்டதாகக் காணேம்: மாருக, அதிக வரியைக் கொடுத்து அதிக சொத்தையும் சேர்ப்பதற்காக, அதிக முயற்சியும் உழைப்பும் உண்டாகின்றன. வருமானவரியை உலகிலே முதன் முதலாகக் கண்டு பிடித்த பிரிட்டனில், பவுண்டில் ஒரு ஷிலிங் வரி போட்ட காலத்தில் இப்படித்தான் சொன்னுர்கள். முயற்சி போய்விடும்;

கும் ஊக்கமளிப்பதாக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும்.

புதுவரியைக் கணக்குப் பண்ணுவதில், முன்னிலும் விரிவான மூலதன ஆதாரம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. கம்பெனிகளின் பங்குத்தொகை, ஒதுக்குத்தொகை, டிபஞ்சர், என்பவையோடு கம்பெனி 10 ஆண்டுகளாகக் கொண்டுள்ள கடன் தொகையெல்லாம் மூலதனமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இப்படியாகக் கணக்கிடப்பட்ட மூலதன அடிப்படையில் 10 சதம் வரியிலிருந்து விலக்கப்படுகிறது. முன் 6 சதம்தான் கழிக்கப்பட்டது. இதனுல் இலாபமாக கணக்கிடப்படும் தொகையில் சலுகை ஏற்படுகிறது. அப்படிக் கணக்கிட்ட லாபத்தில் 50 சதம் வருமானவரி, அமிதவரி இரண்டும் போக, எஞ்சிய லாபத்தில் 40 சதம் இப்பொழுது உபரிவரியாகக் கொள்ளப்படுகிறது.

இந்த சலுகைபோக மூலதன அடிப்படையில் 10 சதம் வரி விலக்காகும் தொகை குறைந்தது ரூ 1 லட்சம் என்றிருந்தது; இப்பொழுது அது ரூ 2 லட்சமென்று உயர்த்தப் பட்டிருக்கிறது. இதனுல் சிறு கம்பெனிகளுக்கு வசதி ஏற்படுகிறது.

புது கம்பெனிகளுக்கு என்னென்ன வரிச்சலுகைகள், ஊக்குமுறைகள் எல்லாம் முன் கொடுக்கப் பட்டிருந்தனவோ, அவை இந்த உபரிவரி முறையிலும் உண்டு. ஐந்து ஆண்டு வருமான வரி, அமித வரி இல்லாதது போலவே (Tax holiday) உபரிவரியும் கிடையாது. வளர்ச்சிக்கழிவு (Development Rebate) என்ற சலுகையும் உண்டு.

இவையெல்லாம் போக, இந்த உபரிவரிமுறையில் ஒரு சிறப்பு என்னவென்ருல், 14 முக்கிய தொழில்கள் தேர்தெடுக்கப்பட்டு அவைகளுக்கு உபரிவரியில் சிறப்பாக சலுகைகள் கொடுக்கும் முறையாகும். இரும்பு, எஃகு, அலுமினியம், செம்பு, ஈயம், துத்தநாகம், நிலக்கரி, பழுப்புக் கரி, இரும்புக்கனி, அலுமினியக் கனி, மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், டிராக்டர்கள், சிமெண்ட், இரசாயன உரம், காகிதம், தேயிலே, காஃபி, ரப்பர், போன்ற வளர்ச்சி ஆற்றலுடைய உற்பத்தித் தொழில்களுக்கு மூலதன அடிப்படையில் 20 சதத்துக்கு மேலாகவோ, அல்லது 4 லட்சம் ரூபாய்க்கு மேலாகவோ இலாபமிருந்தால்தான் உபரிவரி விதிக்கப்படும். 40 சதம் உபரிவரி விகிதம் என்றிருந்தாலும், 20 சதம் வரியில் கழிவு செய்ய வகை காணப்பட்டிருக்கிறது.

ஆனுல் இவ்வாறு கொடுக்கப்படும் சலுகைகள் எதற்கென்ருல், வரும் அதிக லாபத்தை மேலும் தொழிலிலேயே போட்டு, வளர்ச்சிக்குப் பெருக்கம் காணவேண்டும் என்பதற்காகவே. இதற்காக, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகள் பங்கு லாபங்களை (Dividends) அதிகமாகக் கொடுத்துவிடாதபடி, பங்கு லாபத் தொகையில் 7½ சதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

புதிதாக வருகின்ற கம்பெனிகளுக்கு பங்கு லாபம் கொடுக்க சில ஆண்டுகள் பிடிக்கும். இந்தக் கம்பெனிகள் பங்குலாபம் கொடுக்கத் தொடங்கிய ஐந்து ஆண்டுகளுக்கெல்லாம் பங்கு லாபவரிக்குட்படாமலே 10 சதம் வரையில் பங்குலாபம் கொடுத்துக் கொள்ளலாம்.

ஒரு கம்பெனியிலிருந்து இன்னெரு கம்பெனிக்கு கொடுக்கப்

உழைப்புக் குறைந்துவிடும்-என்ருர்கள், 1914-க்கு முன். ஆனல் வரிகள் பின் எவ்வளவோ ஏற்றப்பட்டன. பவுண்டில் 15½ ஷிலிங் வரையில் உயர்ந்தது. இருந்தாலும் தொழில்களின் வளர்ச்சி தடைபட்டதாகத் தெரியவில்லை. 1940-க்கும் 1951-க்குமிடையில் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் முன்னில்லாத அளவு நேர்முகவ்ரிகள் உயர்த்தப்பட்டன. ஆனல் உற்பத்தி முன்னிலும் பெருக்கம்தான் அடைந்தது. 1951-க்குப் பிறகு இந்த இரண்டு நாடுகளிலும் நேர்முக வரியைக் குறைக்கலானுர்கள். ஆனல் உற்பத்தி வேகம் குறைந்திருக்கிறது. உற்பத்திபெருகுவதும் பெருகாமலிருப்பதும் மக்களுடைய வாங்கும் ஆற்றலையும் தேவையையும் பொறுத்து இருக்கிறதே தவிர, வரிப்பளுவைப் பொறுத்ததாகத் தெரியவில்லை. பொது மக்களுடைய கையில் வரும் வருமானம் மிகுந்து, எல்லோருக்கும் வேலைவாய்ப்புப் பெருகுமானல், உற்பத்தியும் பெருகும். சென்ற ஆண்டில் மொரார்ஜி பட்ஜட்டில் அமிதலாபவரி போட்டபோது, தொழில் உற்பத்தி குறைந்துவிடுமென்ருர்கள். ஆனல் சென்ற ஆண்டு தொழில் வளர்ச்சி 8 சதம்; இந்த ஆண்டு 10 சதம்.

இங்கிலாந்தில் வருமான வரி, இலாபவரி இவைகளைப்பற்றி ஆராய ஒரு ராயல் கமிஷன் நியமித்தார்கள். அதில் மூன்று பிரமுக்கள் அங்கம் வகித்தனர். தலைவர் லார்டு ராட்கிளிஃப்; உறுப்பினர்கள், லார்டு ஹேஒர்த்; லார்டு கோஹன். இதில் லார்டு ஹேஒர்த் என்பவர் உலகத்தில் பெரிய கம்பெனிகளில் ஒன்ருன யூனிலிவர் கம்பெனியின் அன்றையத் தலைவராக இருந்தவர்.

**இந்தியாவில் தினசரி ஏடுகள்**

| | | |
|---|---|---|
| 1956 | ல் | 424 |
| 1957 | — | 446 |
| 1958 | — | 465 |
| 1959 | — | 491 |
| 1960 | — | 531 |
| 1961 | — | 529 |
| 1962 | — | 560 |

1960ல் எல்லா தினசரிகளும் சேர்ந்து 46,33,000 இதழ்கள் வெளியாயின.

இந்த ராட்கிளிஃப் கமிஷனின் அறிக்கை 1954-ல் வெளிவந்தது. "சாதாரணமாக ஒருவன் வருமான வரியால் தன் உழைப்பு பாதிக்கப் படுவதாகக் கருதுவதில்லை. அதைப்பற்றி முணுமுணுப்பதுண்டு; பருவ கால நிலையைப்பற்றி முணுமுணுப்பதுபோல. ஆனல்வெயில் மிகுதி, மழை மிகுதிஎன்று எப்படி எவரும் உழைப்பை நிறுத்திவிடுவதில்லையோ, அதுபோலத்தான் வரி சங்கதியிலும்", என்று பலர் சொன்ன முடிபாகக் குறிப்பிடுகிருர்கள். இது பெரு வருமானம் வருகிறவர்களுக்காயினும் சரி, சிறு வருமானம் வருகிறவர்களுக்காயினும் சரி, எல்லோருக்கும் பொருந்துவதாகும், என்று குறிப்பிட்டிருக்கிருர்கள் "அதிகவரியெல்லாம் முயற்சியைக் குறைக்கலாம்; அல்லது கூட்டலாம். இதுபற்றி எதுவும் தெளிவாகத் தெரிவதில்லை. ஆனல் இதை வைத்துக்கொண்டு, பெருவருமானம் பெறுகிறவர்களுக்கு சிறப்பான முயற்சிக் குறைவு ஏற்படுகின்றதென்ருே, அதனல் ஏழைகள்

மீது வரியை சுமத்த வேண்டுமென்றே சொல்வதானால், அப்படி ஒன்றும் பெரு வருமானக்காரர்களுக்கு சிறப்பான முயற்சிக் குறைவு ஏற்படுவதில்லையென்றே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். தொழில் வளர்ச்சியில் வேகம் வேண்டுமானால், பெருவாரியான மக்களின் வாங்கும் ஆற்றல் பெருகுவதே அல்லாது இன்றையப் பொருளாதார உலகில் வேறு வழியில்லை.

ஆகவே, டி. டி. கே. பட்ஜட் சோசலிசப் பாதைக்கு வழி வகுப்பதாக இருக்கின்றது; உற்பத்திப் பெருக்கத்துக்குத் தடை விதிப்பதாக இல்லை. ஏழை மக்கள் நுகரும் பொருள்கள் மீது புதுவரிகள் போடாத வரையில் விலைவாசியை மட்டுப் படுத்துவதாகவே இருக்கின்றது. 10 கோடி ரூபாய் வரையில் மத்திய அரசாங்க அலுவலாளரின் பல நன்மைகளுக்காக செலவிடும் வகையில் சமூக நீதியை வழங்க முயல்கின்றது. 15,000 ரூபாய்க்குக் குறைந்தவர்களுக்கு வருமான வரியைக் குறைத்ததும் அந்தத் திசை நோக்கிச் செல்லும் செயலாகவே இருக்கின்றது. வரி வசூலிப்பில் கண்டிப்பான ஐந்து முறைகளைக் கையாள எண்ணுவதும் வரவேற்கத் தகுந்ததே.

ஆனால் நடைமுறையில் எப்படியாகுமோ? விவசாய உற்பத்தி சோர்ந்து கிடக்கும் வரையில், விலைவாசி ஏறுவதை எப்படித் தடுக்க முடியும்? அதற்கு பட்ஜட்டில் ஏதுமில்லையே!

---

"ஒருவன் செல்வனா அல்லது ஏழையா என்பது, அவனுடைய ஆசைகளுக்கும் அவற்றை நுகர்வதற்கும் உள்ள விகிதாசாரத்தைப் பொறுத்ததாகும்."

—சாமுவல் ஜான்சன்.

*　　　*　　　*

"உங்களால் முடியுமானால் மற்றவர்களைக் காட்டிலும் அறிவாளிகளாக இருங்கள்; ஆனால் அப்படி யிருப்பதாக மட்டும் பிறரிடம் கூற வேண்டாம்!"

—லார்டு செஸ்டர்ஃபீல்டு.

*　　　*　　　*

"நல்லது எது, கெட்டது எது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். தீமைக்கு இழுக்கப்படும்போது, அதற்கான வாய்ப்பை நோக்கி எதிர்த்துச் செல்லக்கூடிய வழிதான் நமக்குத் தெரிய வேண்டும்."

—(Ivern Boyett).

# ஆண்டவன் கருணை ?

— கவிஞர் முருகுசுந்தரம் —

1

அஞ்சு வயதினில் இங்கர்சால்—ஓர்
அல்லிக் குளத்தின் அருகிலே
பிஞ்சு மலர்க்கரம் வீசியே—தந்தை
பின்பு மகிழ்வுடன் சென்றனன்.
கொஞ்சு மொழிபல கூறினன்—தேனைக்
கொட்டிப் புதுக்கதை பேசினன்
அஞ்சி உளம்நடுங் காமலே—அவன்
ஆயிரம் கேள்விகள் வீசினன்.

2

ஓடைக் குளிர்புனல் பொய்கையும்—அதன்
ஓரத்தில் பன்னிறப் பூக்களும்
பாடும் பறவை யினங்களும்—ஒளி
பாய்ச்சிடும் செம்பொற் பரிதியும்
காடும் உயர்ந்த மலைகளும்—அங்குக்
காட்சி விருந்துகள் வைத்தன;
வேடிக்கை பார்த்தனர் தந்தையும்—கை
வீசி நடந்த சிறுவனும்.

3

பூத்த மலர்கள் சிரித்திடும்—அந்தப்
பொய்கையில் நின்றதண் ணீரிலே
வாத்துகள் நீந்தித் திரிந்தன—மீன்கள்
வாலை யசைத்தங்கு மின்னின.
ஆத்திகப் பாதிரித் தந்தையும்—தன்
அன்புச் சிறுவனை நோக்கியே
காத்தருள் செய்யும் கடவுளின்—உள்ளக்
கருணைச் சிறப்பினைப் பேசினர்.

4

"வாத்தின் அடிகளைப் பாரடா—அதன்
வாலின் அசைவினைப் பாரடா!
பூத்த புதுமலர் போலவே—உடல்
பூரித் திருப்பதைப் பாரடா!
வாத்தினடிகள் துடுப்படா—அதன்
வாலின் அசைவு சுக்கானடா
நீர்த்திரை மேல்செலும் கப்பல்போல்—அது
நீந்தித் திரிவதைப் பாரடா!

5

"சத்தம் சிறிதுமில் லாமலே—அடி
சாய்த்துப் படகென நீந்தியே
தத்தும் தவளை யினங்களை—அது
தாவிப் பிடிப்பதைப் பாரடா!
எத்தனை அற்புதம் ஆண்டவன்—படைப்"
பென்று பலப்பல கூறியே
சித்தம் களிப்புறப் பேசினர்—மகன்
சிந்தனை யோடதைக் கேட்டனன்.

6

"முத்தம் கொடுத்திடும் தந்தையே—உச்சி
மோந்து தழுவிடும் தந்தையே!
இத்தரை மீதினில் வாத்தினைப்—படைத்
திட்ட அருளுடை ஆண்டவன்
கத்தும் தவளை யினத்தையும்—இந்தத்
தாரணி மீது படைத்தனன்
செத்து மடிவதற் காகவா—இங்குச்
சேற்றுத் தவளை பிறந்தது?

7

"கத்தும் தவளை யினத்திடம்—தெய்வம்
கருணை காட்டுவ தில்லையோ?
கொத்திக் கொலைசெய்தற் கோரினம்!—அஞ்சிக்
கோழைபோல் சாவதற் கோரினம்!
எத்திப் பிழைப்பதற் கோரினம்!—இங்கு
ஏழையாய் வாழ்வதற் கோரினம்!
மெத்தக் கொடுமையென் தந்தையே!—இதை
மேன்மைப் படைப்பென்று சொல்கிறீர்!

8

"அஞ்சி நடுங்குதென் உள்ளமே—இந்த
ஆண்டவன் செய்கையை எண்ணுங்கால்
நெஞ்சு பொறுப்பது மில்லையே"—என்று
நேருறப் பேசினன் இங்கர்சால்!
கொஞ்சும் சிறுவனின் பேச்சிலே—இந்தக்
குள்ளச் சமூகத்தின் கட்டுகள்
பஞ்சினைப் போலப் பறந்தன—அங்குப்
பகுத்தறி வெண்ணங்கள் மின்னின.

**தொழிலாளர் பகுதி:**

# பணிபுரிவோரும் பணிதருவோரும்

[மனசை ப. கீரன், பீ. ஏ.]

*[நிறைந்த ஊதியம், குறைந்த வேலை-என்பதே நாகரீக சமுதாயத்தின் குறிக்கோள். சமநீதி (சோஷலிச) சமுதாயத்தின் குறிக்கோளும் இதுவே. இன்றைய ஆட்சி முறையில் இக்குறிக்கோள் எங்கே நிற்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரை.]*

ஒருவர் தமக்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்தலன்றி மற்றவரிடத்தில் ஊதியத்திற்குப் பணிபுரிந்தால் அவர் பணிபுரிபவர் (Employee) ஆகின்றார். ஒருவர் கருப்பொருள், உழைப்பு, மூலதனம் ஆகிய படைப்பு உறுப்புக்களை உரிமையாகக் கொண்டவர் பணிதருவோர் (Employer) ஆகின்றார்.

பண்டைய நாளில் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் முதலிய தேவைகளைத் தாமே செய்து கொண்டு தன்னிறைவு பெற்றிருந்தனர். அப்போது ஒவ்வொருவரும் பணி புரிவோர் - பணி தருவோர் வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றியிருந்தனர்; எல்லோரும் தமக்குத் தாமே பணி புரிபவரே; தமக்குத் தாமே பணி தருபவரே! சமுதாயம் சற்றே முன்னேறிய நிலையிலும் தேவைகள் மிகுந்தன. ஒருவர் தாமே எல்லாப் பொருள்களையும் செய்து கொள்வதும் இயலவில்லை. அப்போது ஒருவர் தம்மால் படைக்கக் கூடிய பொருள்களை மிகுதியாகப் படைப்பார். இப்படியே மற்றவரும் செய்வார்கள். அப்போது தம்மிடம் மிகுதியாக உள்ள பொருள்களைத் தேவையானவருக்குக் கொடுத்து விட்டுத் தமக்கு வேண்டியவைகளைப் பெற்றுக் கொள்வர். இதற்குப் 'பண்டமாற்று' என்று பெயர். இதிலும் முதலில் கண்ட தன்னிறைவு நிலையில் பணிபுரிவோர்-பணி தருவோர் வேற்றுமைகள் இல்லாத தன்மையே இருந்தது.

ஆனால், இன்றைய உலகிலோ மக்களின் தேவைகளோ மிகப் பல. அதனால் வளர்ந்த தொழில்களும் எண்ணில. ஒரு சிறிய குண்டூசியை எடுத்துக் கொண்டாலும் கம்பியை நீட்டுவது, வெட்டுவது, கூர்மைப் படுத்துவது, தலையைத் திரளச் செய்வது, மெருகூட்டுவது போன்ற பதினேழு செயல் வகைகளாகப் பிரிக்கப்பட்டு உருவாகின்றது! தொழில்கள் விண்ணெனப் பரந்துள்ளன. அதனால் பணிதருவோர் மிகப்பலர். எவ்ரும் தம் தேவைகளைத் தாமே செய்து கொள்ள முடியாது. பெரிய நிறுவனங்களிலேயே பணி புரிவர். ஆகவே, பணி புரிபவரும் மிகமிகப் பலரே. இவ்வாறு எண்ணிக்கையின் மிகுதியும், வேற்றுமைகளில் பெரும் பிளவுகளும் உள்ளதால் சிக்கல்களும் வலியன ஆகின்றன.

## உழைப்பும் ஊதியமும்

வாழ்க்கை ஊதிய அளவையும் வேலையில் உள்ள உழைப்பின் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டதால் அவைகள் சரியான நிலையில் அமைய வேண்டியது இன்றியமையாதது. பணி தருவோரும் ஒரு வகையில் பணி புரிவோரே. கருப் பொருள், உழைப்பு, மூலதனம் போன்றவற்றை இணைத்துச் செயற்படுத்திப் பொருள்களை விளைக்கும் பணி புரிபவரே பணிதருவோர் அல்லது தொழிலதிபர் ஆகிறார். முதலீட்டிற்குத் தகுந்த வட்டி பெறுவதைப் போல, விளைகூறுகளை இணைப்பதில் ஈடுபடும் பணி புரிவதற்கேற்ப ஊதியமாக 'இலாபம்' பெறவும் உரியவர் ஆகின்றார். தொழிலாளருக்கு ஊதியமும் முதலீட்டுக்கு வட்டியும் பல கூறுகளையும் இணைப்பதற்கு இலாபமும் தக்கபடி பெறும் முறையில் தொழிலை நிறுவி அடையும் பயனைப் பகிர்ந்தளிக்கும் நிலை சிறந்த கடமையின் திருவுருவமே 'பணி தருவோர்' ஆகும் என்று சொல்லலாம். இன்றைய தொழில் உலகத்தில் வட்டியும் இலாபமும் தொழிலாளரின் ஊதியத்தை விழுங்கிவிடாதபடி 'உழைப்புக் கேற்ற ஊதியம்' 'பணிபுரிபவரின் வாழ்வுக்கு வேண்டிய பணம்' போன்ற கொள்கைகள் கைகூட வேண்டும்.

## திறமையும் தேர்வும்:

பணி புரிபவரின் தகுதியும் புரிகின்ற பணியின் தன்மையும் இணைபவையாய் இருக்க வேண்டும். வானொலிக்கு ஒலியே அடிப்படையாதல்லால் குருடரும் வானொலியில் இசைபாடி மகிழ்விக்கலாம். கண்ணும் கையுமே எந்திரங்களை இயக்க இன்றியமையாததலால், செவிடரும் பஞ்சாலையை அருமையாக இயக்கலாம். ஆனால் முடவர் கொம்புத்தேனை எடுக்கும் பணியில் ஈடுபட்டால் எவ்வளவு பெரிய ஏமாற்றத்தை ஏற்க வேண்டும் என்பதைத் தெளிவாக எதிர்பார்க்கலாம்.

இன்றைய உலகில் பற்பல துறைகட்கும் பணிபுரிபவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை நினைத்துப் பார்த்தால் நெஞ்சு பொறுப்பதில்லை. எதிலும் போட்டியிருந்தாலும், செக்கிழுக்கும் மாடே போல் திரும்பத் திரும்ப வழக்கம்போல எழுதிய காகிதக் கட்டுகள் தீர்க்கப்பட்ட முறையிலேயே கண்காணித்து உத்தரவுகள் போடுவதும், குற்றஞ் சாட்டுவதும், விவரங்கள் கேட்பதும், சமாதானம் கோருவதும், தொகுப்பதும் போன்ற அரசினர் அலுவலக எழுத்தர் பணிகட்கும் உலக அறிவு விஞைக்களும், என்றோ பயின்ற கல்வியறிவுத் தேர்வுகளும் வைக்கின்றனர். நேர்முகத் தேர்வுகளில் கூர்த்த மதியினரும், வழிவழியாய் வசதி மிக்க குடும்ப ஆடம்பரத்தாலும் இந்த அதிகார வேலைகளை எளிதில் அடைகின்றனர்; நாளடைவில் கூர்த்த மதிமழுங்கி அலுவலகங்களில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

ஆனால், பரந்த அறிவும் அடிப்படைத் தேவைகள் நிறைந்து வலிய அடிப்படையில் நிறுவிய குடும்ப வாழ்வும், சமூகத்தில் ஒரு பெருநிலையும் தேவைப்படக் கூடிய ஆசிரியர் போன்ற சமூக அச்சாணி அனைய அரும்பணிகட்குத் தேர்வு முறையோ அடிப்படையினையே அழிப்பதாய் உள்ளது. 'வயது எதுவாயினும் தடையில்லை; தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்ணோ மிகக் குறைந்தும் இருக்கலாம்; போட்டித் தேர்வோ

இல்லை' போன்றவைகள் சமுதாயப் பணியாளர்களின் ஏணியிலே முடிமணியாகத் திகழவேண்டிய ஆசிரியர்களை குப்பைக் குழியில் தள்ளிவிடுகின்றன.

தேர்ந்த திறனுடையோர் எனப்படுகின்ற அரசூழியர்கள் எளியகாகிதக் கட்டுக்களை அவ்வப்போது தீர்ப்பதுமில்லை. ஆயினும் அவர்கள் அணிந்துள்ள அதிகாரமும் அரசுக்கே உரிய "சிவப்பு நாடாத் தன்மை' என்ற அரசியல் மந்தமும் அகல்வதில்லை. ஆசிரியர் துறையிலும் எந்த மடமையும் குருட்டுப் பக்தி வழக்கங்களும் இருந்தாலும் "மேன்மையான வேலை' எனக் குறிப்பிட மட்டும் தவறுவதில்லை. இத்தகைய கண்மூடி வாழ்க்கை முறைகள் அகல பணியின் திறனுக்கேற்பத் தேர்வு முறைகளும் அமைய வேண்டியதே தலைசிறந்த சமுதாயத்தின் "தலைவிதி"யாகும். இன்றேல், என்னதான் போட்டியும் தேர்வும் அமைந்தாலும், பட்டுப்போன உடலில் இரத்தம் செலுத்தல் இன்றியமையாதது என்று கருதி, உடலில் இரத்தக்கூறுக்குத் தகுந்த இரத்தம் அல்லாமல் மாறுபட்டதைச் செலுத்துங்கால் இரத்தமே உறைந்து உயிருக்கு விரைந்து இறுதி நேரும்' என்பது போன்றே சமூகம் சீர்குலையும் என்ற உண்மை கசப்பானதே. என்றாலும் அதன் தன்மையுணர்ந்து தக்கபடி நடப்பதே அறிவுடைய சமூகத்தின் அணியுடைமையாகும்.

## சுமையும் தொகையும்:

பற்பல துறைகளிலும் அவசர விடுதி, ஈட்டிய விடுதி, நோய் விடுதி (Casual, Earned and Sick Leave) இருக்க அமைப்புச் சட்டத்தின் அளவில் நின்றவுற்றும் அவைகளைத் துய்க்க மிகப் பலவற்றில் இயலுவதில்லை. 'குறைந்த நேரம்; கொள்ளை ஊதியம்' போன்ற கொள்கைகள் மேனுடுகளில்தான் செயலாகின்றன. நம் நாட்டில் 'இயல்கின்ற நேரம் வேண்டிய ஊதியம்' என்னும் உயிர் வாழ்விற்கு இன்றியமையாத தேவையும் நிறைவேற வகையில்லை, என்று உள்ள நிலையை எழுதும் பொழுது இரத்தம் தான் பொங்கி எழுத்து வடிவம் பெறுகின்றது.

இரவும் பகலும் நில்லாமல் இயங்கும் இரயில்வேத் துறைப் பணிகளை எடுத்துக் கொண்டாலும் நாளுக்குச் சராசரி எட்டு மணிப் பணியுண்டு. இரவிலும் அவ்வளவே; பகலிலும் அவ்வளவே. மற்றைய தட்ப-வெப்பச் சமநிலை அறைகளில் பணிபுரிவோருக்கும் கால அளவு அதுவே-அதைவிடக் குறைவா

### நாத்திகப் பிரசாரம்

"18 ஆவது நூற்றுண்டின் கடைசியில் வெளியிடப்பட்ட நாத்திக வெளியீடுகளையெல்லாம் மொழி பெயர்த்து இன்றுள்ள பொதுமக்களிடம் பரப்ப வேண்டுமென்று பல நாட்களுக்கு முன்பே எஞ்செல்ஸ் தொழிலாளர் தலைவர்களுக்கு அறிவுரை கூறினர். அவர் சொற்படி இதுவரை நடக்காததற்கு நாம் வெட்கப்படவேண்டும். புரட்சிக் காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது எளிதென்றும், பிறகு அந்த அதிகாரத்தை சரிவரப் பயன் படுத்துவது கடினமென்றும் சொல்லப்படுவதற்கு இதுவே தக்க சான்ருகும்."

லெனின்:-"மதம்" (1920)

கவும் இருக்கலாம். இதிலுள்ள கொடுமையும் ஒழுங்கீனமும் முறை கேடும் என்னவென்ருல், வாயிலில் நின்று சீட்டுகளைப் பெறுவோர், வண்டிகளைக் கண் காணித்தனுப்பும் நடைமேடை ஊழியர் போன்ருேர்க்கு, கம் பளம்-கோட்டு-குல்லாய் போன் றவை மரியாதையை நிறுவ இருப்பினும், திறந்த திடலில் நீண்ட சரக்குத் தொடர்வண்டிப் பெட்டிகளை கண்டு தக்கபடி பூட்டி அனுப்பும் ஊழியர்க்கும், நெருப் புடன் கரியாக ஒன்றிப்போய்ப் பொறியை இயக்கிச் செல்லும் வண்டியோட்டிகட்கும் அவரது பணிக்குத் தகுந்த உடைகள், குடைகள், குல்லாய்கள், காலணி கள் போன்ற வசதிகள் இல்லவே இல்லையே என்பதைக் காண்கை யில் 'இதுதான் உலகமா? இது தான் உலகமா?' என்று அந்தத் தொண்டர்களுடன் சேர்ந்து தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு கத் தத் தோன்றுகிறது. இயற் கையை எதிர்த்துத் துயிலை விடுத் துக் குளிர்-வெய்யில் எல்லாம் தாங்கிப் பணிபுரிவோருக்குக் கிழமை இறுதி ஓய்வென்பதும் அருமையே. ஓர் இரவு பணி புரிந்து அதிகாலை வீடுசென்ருல் மறுநாள் நண்பகலோ இரவோ பணிக்கு வரவேண்டியிருக்கும். இந்நிலையில் எப்போது துயில் வது? எப்போது குழலினும் யாழி னும் இனிய தம்மக்களின் மழலை கேட்பது? அல்லது குடும்ப நல னைக் கவனிப்பது?... அன்றியும் எதிர்பாராது அடுத்துப் பணிபுரிய வரவேண்டியவர் உடல்நலமின் றிப் போயோ அன்றி வேறு காரணத்தாலோ வர இயலாவி டில் இவ் ஓய்விலும் துண்டு விழு வதில் வியப்புறவே தேவை யில்லை என்பது அப்பணியினர் காணும் உண்மை!

உண்மையிலேயே இயற் கையை எதிர்த்து நின்று பணி புரியும் இவர்கட்கு நீண்ட ஓய் வும், நிறைந்த ஊதியமும், பல வகை விடுமுறைச் சலுகைகளை அவ்வப்போது துய்க்கும் வசதியும் இருக்க வேண்டியது அவசியம். ஆனல், அமைந் துள்ள நிலையோ நேர்மாறு. வேலைப்பளு இப்படியிருக்க வேலை யின்மை நம் நாட்டில் தாண்டவ மாடுவது தெளிவு. பலருக்கு வேலையளித்தால் தான் பலரும் விடுமுறைகளை உள்ளபடி துய்க்க இயலும்; வேலையில்லாத் திண் டாட்டமும் நீங்கும். ஆனல் நிறைவேற்றுவது தான் கிடை யாது. அதிக ஆள் போட வேண் டும் என்று தீர்மானிக்க 'முறைப் படி' ஆமை வேகத்தில் காகிதக் கட்டுகள் நகர்ந்து, கண், கழுவச் செய்தித்தாள்களில் விளம்பரம் போட்டுத் தேர்வுகளைப் பல திங் களின் பின் நடத்தி, முன்னரே தெரிந்து வைத்துள்ள உறவு— நட்பு வாலிபரை அமர்த்துமுன் ஆண்டு பலவோடும். இதற்குள் பணிபுரிவோர் வேலைச் சுமை யுடன் வயதும் ஏறி நலிவர்.

ஆகவே, உண்மையிலேயே ஒரு சமூகம் பண்பட்டது என் ருல், தொழிலாளரே நாட்டுக் குடிகளின் முதுகெலும்பு என் பதை உணர்ந்து அம்முது கெலும்பு மிகுந்த சுமையால் வளையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு, வேலை யில்லாத் திண்டாட்டமும், வேலைச் சுமையின் கொடுமையும் ஒரே சமூகத்தில் இருப்பது எவ் வளவு கொடுமை என்பதை அறிய வேண்டும்; இரண்டையும் ஒருசேர நீக்கி மேன்மைபெற வேண்டும்.

## மேலாளர்-தொழிலாளர் :

எந்த நிறுவனத்திலும் தொழி லாளரைக் 'கண்காணிக்க' மேலா

ளார்கள் உள்ளனர். நிறுவனத்தின் அளவைப் பொருத்து அவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து செல்லும். தொழிலாளரைக் 'கண்காணித்தல்' என்ருல் நிறுவனத்தின் சார்பில் பணியாளரை நன்கு செயற்படச் செய்து, அவ்வாறு செய்யாத பொழுது 'தகுந்த நடவடிக்கை' எடுப்பதுடன் தொழிலாளரின் குறைகளை நீக்கவும் ஆவன செய்தல் என்றும் பொருள் படும். ஆனல், இதற்கு மாருக 'மேலாளர்' எனப்படுவோர் 'கீழோர்' எனப்படுவோரை எவ்வளவுக்கு அச்சுறுத்தி மிகுதியாக வேலை வாங்க இயலுமோ அவ்வளவும் வாங்கித் தாம் செல்லும் இடமெல்லாம் விரும்பியபடி தண்டனைக்கும் ஆட்படுத்துவதே தமது கடமை-உரிமை-அதிகாரம், என்ற அடிப்படையிலேயே செயற்படுகிருர்கள்; தொழிலாளரின் நலன் என்பது நிறுவனத்தின் இயக்கத்திற்கே அப்பாற்பட்டதாக விட்டுவிடுகின்றனர்.

மேலாளர் என்போர் கீழாளர் மேல் முழுக்க முழுக்க ஆதிக்கம் செலுத்தி அடிமைகளாக்கும் இந்தநிலை, பண்டைக்காலத்தில் அடிமைகளின் கைகால்களில் கனத்த விலங்குகள் பூட்டியிருக்க, கைகள் சோர்ந்து போகத் துடுப்புகளை வலிக்க விலங்குகள் உறுத்துவதால் தோல் கழன்று ஊறுகின்ற இரத்தத்தில் ஈக்கள் மொய்க்கப் பாடுபட்டுத் துவண்டு விழும்பொழுதும் கப்பல் தலைவர்கள் சாட்டைகளைச் சொடுக்கி அடித்து வேலைவாங்குகின்ற "பேய்" எனப்படுவதன் நிலையையே நினைவுக்குக் கொண்டு வருகின்றது. இந்தநிலை அகன்று மேலாளர்கள் தொழிலாளரின் நலனையும் கண்காணிப்பவராதல் வேண்டும். மேலாளரும் தொழிலாளரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து வருதல் வேண்டும்.

பண்டைய 'மன்னர்-சேவகர்' நிலை அகல்வதுடன் மன்னரின் மகனே மணிமுடிசூடுதல், அவனின் தத்துவப் பிள்ளையே அரியணையேறுதல், அரசிளங் குமரியை மணந்தோனே ஆட்சி அதிகாரம் அடைதல் – போன்ற அந்தப் பண்டைய ஏகாதிபத்திய உலுத்துப்போன முறைகேடு இறந்துபடவில்லை எனக்காட்டவே இந்நாளிலும் உயர் பதவிக்காரனின் பிள்ளைகள்-உறவினர்-நண்பர்கள்-மருமக்கள் பெரும் பதவிகளை அடைவிக்கும் சீர்கேடு நிலவிவருகின்றது. இவைகள் மங்கி மறைய, எல்லோரும் சமநிலை என்பது உண்மையாக, எல்லோரும் தத்தம் கடமைகளைப் புரிந்துவர, ஏகாதிபத்திய அடக்குமுறை அதிகார ஏணியின் நிழலுமின்றி கடமையொளி திகழும் தனியுரிமைச் சுயமரியாதை வாழ்வு நிலவும் நாள்தான் அந்நாடு உண்மையிலேயே தனியுரிமை நாடாகும். அந்நிலையை நாம் அடைய உழைப்புக் கருவூலத்திற்கு இழுக்குத்தேடாமல் பெருமை செய்து போற்ற வேண்டுவது மனிதர் என்போர் ஒவ்வொருவரின் கடமையாதல் வேண்டும்.

"சிக்கனமில்லாமல் யாரும் செல்வராக முடியாது; சிக்கனமிருந்தால் யாரும் வறியராக முடியாது."

—சாமுவல் ஜான்சன்.

டாக்டர் ஆர். ஜி. கிருஷ்ணன், F R.C.S.I., M.R.C.S., L.R.C.P. (Lond)

# குடும்பக் கட்டுப்பாடு ஏன்?

*[குடும்பக் கட்டுப்பாடு இல்லாமல் இந்நாட்டின் வருங் கால நெருக்கடியைச் சமாளிக்கவேமுடியாது என்பது உலகப் பேரறிஞர் கண்ட முடிவு. அளவோடு கூடிய மக்கட்பேறு பெறுவதற்குப் பலவழிகள் உண்டு. அவற்றில் தலைசிறந்த தான அறுவை சிகிச்சை முறையில் தனி நிபுணரான டாக்டர் ஆர். ஜி. கிருஷ்ணன் அவர்கள், இச்சிகிச்சையினால் எவ்விதக் கேடும் கிடையாது என்பதை வலியுறுத்துகிறார்.]*

புதிய நோய்த் தடுப்பு முறை ஏற்பாடுகளாலும், நோய்களைக் குறைக்கும் ஏற்பாடுகளாலும், இறப்பு விகிதம் நமது நாட்டில் குறைந்திருக்கிறது. இவ்விகிதம் மேலும் குறைக்கப்படும். மனித வரலாற்றிலேயே இதற்குமுன் இல்லாதவாறு மக்கள்தொகை பெருக்கத்திற்கு இது ஒரு தக்க காரணம். மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் நாடுகளில், பெருகிவரும் மக்கள் தொகை பெரும் பிரச்னையாகிவிட்டது.

நூறு ஆண்டுக்காலத்தில் (1850-1950) உலக மக்கள் தொகைக் கணக்கீடு 1·2 நூறு கோடியிலிருந்து 2.5 நூறு கோடியாகப் பெருகியுள்ளது இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் (1950–1975) உலக மக்கட் தொகை 3·8 நூறு கோடியாக உயரலாம் என நினைக்கப்படுகிறது. ஒரு வினாடிக்கு ஒரு குழந்தைக்கு மேலும், ஒரு மணிக்கு 5137 குழந்தைகளும், ஒரு நாளைக்கு 1,23,000 குழந்தைகளும், ஓராண்டில் 450 இலட்சம் குழந்தைகளும் பிறக்கின்றன. கி. பி. 2000-க்குள்ளாக உலகத்தின் மக்கள் தொகை 600 கோடிக்கும் அதிகமாகலாம் என ஊகிக்கப் படுகிறது.

நமது நாட்டிலும், பெருகிவரும் மக்கள் தொகை ஒரு பெரும் பிரச்னையாகிவிட்டது. ஒரு நாளில் 25,500 குழந்தைகள் பிறந்து மக்கள் தொகை பெருக்கெடுக்கிறது. ஆண்டொன்றுக்கு 90 இலட்சம் மக்கள் கூடுதலாகி, பற்றுக் குறையாக உள்ள உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

உலக மக்கள் தொகையில் சீனாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பெறுகிறது நமது நாடு. உலகத்தின் மொத்த நிலப் பரப்பில் 2·4 சதவிகிதம் பரப்புள்ள நமது நாடு உலக மக்கள் தொகையில் 14 சதவிகிதத்தை ஆதரிக்க வேண்டியுள்ளது. நமது நாட்டில் ஆண்டொன்றுக்கு 2.15 சதவிகிதம் மக்கள் தொகை பெருக்கமடைகிறது. ஸ்வீடன் நாட்டு மக்கள் தொகை போன்ற அளவு நம் நாட்டில் ஒவ்வோராண்டும் பெருகி வருகிறது.

போட்டிக் கட்டுரை:

# சாதிகளை ஒழிக்க வழி

பட்டுக்கோட்டை பாண்டியன்.

*[சாதி ஒழிப்புக் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது, இக்கட்டுரை. இதில் வேறு சில வழிகள் வலியுறுத்தப் பட்டுள்ளன.]*

சாதியானது ஒழுக்கத்தையோ, பண்பாட்டையோ, பொருளையோ, உயர்ந்த உண்மைகளையோ தருவதாகவும், போதிப்பதாகவும் நாம் எங்கும் காணமுடியாது. ஆனால் மனிதன் ஏன் இன்னமும் சாதிமுறையை வைத்துக் கொண்டிருக்கிறான்?

தமிழனின் இன்றையப் பண்பாட்டில், அவனுக்கு எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. இது கலப்பு நாகரீகமாகும். தமிழனது அறிவில் தெளிவில்லாததன் காரணம் ஆரியக்கலப்பே. தமிழன் சாதிக்கு விருந்தானது ஆரிய ஒழுக்கப் பயிற்சியிலே தான். தமிழனின் தனி முயற்சியில் எழுந்த கலை; நூற்கள்; ஏடுகள்; என்பனவெல்லாம் சாதியைக் காட்டவில்லை. தமிழன் பண்பாடும், நாகரிகமும், அலாதியான உண்மைகளை உடையன.

சாதி என்ற பொருளை ஆராய்ந்து பார்த்தால் அது 'பொய்' என்பதையே உரைக்கும். அதை ஒழிக்க என்ன செய்வது என்று எண்ணும் மக்கள் வேண்டும். ஒருவர், இருவர் அல்லது ஒரு குழு மட்டும் சிந்தித்தால் போதாது. எந்த ஒரு சமுதாயத்தைச் சாதி மேய்ந்து வருகின்றதோ அந்தச் சமுதாயமே எழுந்து வரவேண்டும். சாதியை ஒழிப்பது எப்படி என்பதை ஐந்துவிதமான முறைகளில் அணுகிப் பார்த்தால், இவைகள் எல்லாவற்றையும் விட மேலாக, மனிதனது உணர்ச்சிகளும், எண்ணங்களும் சாதியை நினைக்காமல் இருந்தால் அது ஒழிந்து விடும் என்பதை உணரலாம். இளமையிலேயே சாதி என்பதை மறந்தே வாழ்வது என்பதும், எல்லோரையும் தகுந்த அளவிலேயே மதிப்பது என்பதும் நடைமுறையில் வளரவேண்டும்.

கல்வி; பொருளாதாரம்; வாழ்க்கைத் தத்துவம்; தனி மனிதனும் சமுதாயமும்; வருங்காலமும் லட்சியங்களும்—என்பனவற்றை முறையாகக் காண்போம்.

## கல்வி

கல்வியானது மனிதனுக்கு ஊட்டும் நெறி அல்லது அறிவு. வாழ்வின் உற்ற உண்மைகளை போதிப்பதாக அது அமைய வேண்டும். இது மிக முக்கியம். அடுத்து அது அவனின் சிந்தனைத் திறத்தினால் ஒரு முன்னேற்றமான உணர்வை அடையத் தூண்டவும் வேண்டும். நடை

இப்படி ஆண்டுதோறும் பெருகி வரும் மக்கள் பெருக்கத்தை நம்மால் சமாளிக்க இயலுமா?

இந்தியாவின் இன்றைய இறப்பு விகிதம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள அளவுக்குக் குறைந்துள்ளது பிறப்பு விகிதம் இனியும் கட்டுப்படுத்தாவிடில் நூறு ஆண்டுகளுள் ஐந்து மடங்கு மக்கள் தொகை கூடுதலாகிவிடும்.

நம்முடைய குழந்தைகளின் நல்வாழ்வுக்கு வழிகோல நாம் எப்பொழுதும் முயன்று கொண்டிருக்கிறோம். ஆனால் இத்தகைய மக்கள் பெருக்கத்தால் அவர்களும் எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழ வழியில்லாமல் போகும்.

பாலம் அல்லது கட்டடம் கட்டுவதற்கு முன், வரைபடம் (Plan) இல்லாமலும் செலவுத் தொகை முன்னேடித் திட்டம் இல்லாமலும், தொடங்குதல் இல்லையன்றோ? அது போலவே குடும்ப வளர்ச்சிக்கும் முன்கூட்டியே திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். இன்பமான இல்லறத்தை அமைத்துக் கொண்டு தக்க கண்காணிப்பில் சிறந்த குழந்தைகளை வளர்க்கலாம். குழந்தைகளின் போதுமான வளர்ச்சியை உறுதிப் படுத்த ஒரு குழந்தை பிறப்புக்கும் மற்றொரு குழந்தை பிறப்புக்கும் இடைக்காலத்தை அதிகமாக்கி, குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும். இதனால் தாயின் உடல் நிலை காக்கப்பட்டு, குடும்பத்தில் இன்பம் வளரும். குழந்தையும் உடல்நலத்துடனிருக்கும். இது இயலாத தொன்றல்ல. விருப்பப்படி குழந்தை பெறுவதற்காக அமைக்கப் பட்டுள்ளவையே குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள்.

## காரணம் என்ன?

“அபாய நிகழ்ச்சியில் பலர் மாண்டுவிட்டால் அது அபாயத்தினால் நிகழ்ந்ததாம்! அதில் ஒருவன் தப்பித்துக் கொண்டால் அது கடவுள் கருணையினாலாம்! இது என்ன யுக்தியோ! தான் கோரிய சங்கதிகளில் ஒன்று கூடிவந்தால் அது கடவுளினால் என்கிறார்கள்; ஆனால் கோரிய மீதி 99 சங்கதிகள் கைகூடாமைக்கு யார் காரணமோ?”

—ம. சிங்காரவேலு

மூன்று குழந்தைகளை உடையவர்கள், குடும்பக்கட்டுப்பாடு நிலையங்களுக்குச் சென்று இனிக் குழந்தைப்பேறு உண்டாகாமல் இருக்கத் தையல்முறை சிகிச்சை பெறலாம். இது நிரந்தர முறையாகும். ஆண் அல்லது பெண் இந்த முறைப்படி அனுபவமிக்க டாக்டரின் உதவியைக் கொண்டு எளிதில் சிகிச்சை பெறலாம். இந்தமுறையால் உடல் சோர்வோ, உள்ளக் கவலையோ, கலவி இன்பத்தில் குறைபாடோ ஏற்படாது.

இந்த அறுவை முறைப்படி பெண்களை விட ஆண்கள் சிகிச்சை பெறுதல் எளிது. பெண்களுக்கு குழந்தை பிறந்த பின் இந்த அறுவை சிகிச்சை செய்யப் படுகிறது. அவர்களை ஒரு வாரகாலமாவது ஓய்வாகப் படுக்கையில் இருக்கவேண்டும். ஆனால் ஆண்கள் இந்த சிகிச்சை பெற்றவுடன் இரண்டு மூன்று நாட்கள் ஓய்வுக்குப்பின் நலம் பெறுவர்.

முறைச் செயல்களால் விளையும் தீமைகளை உணர்ந்து கல்வி இயல் மூலமாக அதைச் சீர் திருத்த வேண்டும்.

சாதியை புத்தகங்கள் மூலமாகப் பரப்புவது அறிவின் தாழ்ந்த தன்மையையே குறிக்கும். அதை அறிவுணர்ச்சியின் ஊடே இணைக்கவே கூடாது. தொழிலைப் போலக் கருத வேண்டும்.

குழந்தை பள்ளிக்குச் சென்றதும் தனது இயல்பு உணர்ச்சிக்கு மாறுபட்ட சூழ்நிலையில் பழக நேரிடும். அப்போது ஊட்டும் உணர்ச்சியானது எப்படியிருக்கவேண்டும் என்பதுதான் இங்கு சிந்தித்தற்குரியது. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றதும், "சாதிண்ணு என்ன சார்?" என்று மாணவி கேட்கிருள். அங்கு வண்ணுன், தட்டான், தச்சன் எடுத்துக் காட்டுக்களை வைத்து சாதியை மறைமுகமாக வளர்க்கும் வேண்டாத அநுபவம் கிடைக்கத்தான் செய்கிறது.

சாதியைப் புறக்கணிக்கும் முயற்சியிலும் சாதி என்பது என்ன என்பதை எப்படியோ மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர். சாதியின் பெயரால் பள்ளிகளில் மாணவ-மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதும் இதற்குக் காரணமாகும். பிஞ்சு உள்ளங்களில் ஊட்டக்கூடிய கல்வியானது, என்றும் நிலைத்து நிற்கக்கூடியது நிலைத்து நிற்பதோடு புதிய உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் ஊட்டுவதாகவும் மாறிவிடும். இளமையில் சாதி உணர்வில் தூண்டப்பட்டவன் பிற்காலத்தில் அதை எளிதில் விடமாட்டான். ஏன்? சாதி அவனை விட்டால் அல்லவா அவன் அதை விடுவதற்கு ஏதுவாகும்...?

கல்வி குழந்தை உணர்ச்சிகளைத் தூய்மைப் படுத்துவதாக இருக்க வேண்டும். குறுகிய மனப்பான்மையில் சிதறிய நாம் இன்று தொழிற்கல்வியின் இன்றியமையாத தேவையினுல் வருந்தி நிற்கிருேம். ஒருதொழிலானது குறிப்பிட்ட சாதிக்கல்ல என்ற பரந்த அடிப்படையான எண்ணம் மாணவர்களுக்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

பள்ளிகளிலே சாதியை முன்னிட்டு நடத்தப்படும் கூட்டங்களை அனுமதிக்கக் கூடாது. மாணவர்களை சாதிவெறி பிடித்த கழக, சங்கங்களின் விழாக்களுக்குச் செல்ல அநுமதிக்கக் கூடாது. நாடகம், சினிமா போன்ற கலைகளில் சாதியின் பெயரை கற்பனையாகக்கூட வைத்து அழைக்கக் கூடாது. அது மாணவர் உள்ளங்களில் விளையாட்டாகப் பதிந்து, சமூகத் தொற்று நோயாக புதிய எழுச்சி பெற்றுவிடும்.

முதியோர்களிடமிருந்து சாதியை ஒழிப்பது சற்றுக் கடினமே. முதியோர் கல்விக் கூடங்களில் சாதியின் பெயரால் ஏற்படும் தீமைகளைப் பற்றி அடிக்கடி உரை நிகழ்த்த வேண்டும். அதன் வன்மையைப்பற்றி நெஞ்சு உருகும்படி எடுத்துக் கூறவேண்டும். இன்றைய நாகரீக யுகத்தின் முன்னேற்றங்களையும், தொழில் வளர்ச்சியின் மேம்பாட்டையும் காட்டி அவர்களின் கவனத்தைப் புதுமை நோக்கித் திருப்ப வேண்டும்.

உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் சாதிஓதிகளை அவர்களது எண்ணத்திலிருந்து பிரிக்காவிட்டாலும், அவர்களின் வெறிச் செயல்களிலிருந்து சாதி உணர்ச்சி விளைவுகளைத் தடைப் படுத்தச் சட்டங்கள் இருக்க

வேண்டும். அவற்றைக் கல்வி அறிவின் தத்துவங்களிலும் மனோதத்துவ ரீதியிலும் புகுத்த முயல வேண்டும். வலுக்கட்டாய மென்பது நன்மைகளையும் பழி வாங்கும்; ஆதலால் கூடவே கூடாது. பெரும் பேத உணர்ச்சி களை வலுவின தாக்கும் பயனுள்ள காரியங்களைக்கூட கல்வி அறி வால் வெல்ல முயல வேண்டும்.

## பகுத்தறிவு வாதியின் மதம்!

நீதியையும், இரக்கத்தையும் நேசித்தல்; துன்புற்றவருக்கு அன்பு காட்டி ஆறுதலளித்தல்; மெலிந்தாருக்கு உதவி உறு துணையாக நிற்றல்; நன்றி மற வாமை; உண்மையையும், உரி மையையும் காத்து நிற்றல்; மனைவியையும், மக்களையும் நண்பரையும் இன்பமாகப் பேணுதல்; எழிலான இன்ப இல்லறம் நடத்துதல்; இயற்கை யின் படைப்பிலும், கலையிலும் எழில் கண்டு போற்றுதல்; மனதை மகிழ்வாகவும், உறுதி யுடனும் இருக்கச் செய்யத் தன்னையும், மற்றவரையும் மனப்பக்குவம் அடையச் செய்ய வழி வகுத்தல்; இன் சொல்லாலும், பெருமிதச் செய லாலும் வாழ்வைப் பொலிவாக வைத்து முழுமை பெறச் செய் தல்; குற்றம் களைந்து, வெறுப் புணர்ச்சியை விட்டொழித்தல்; புதிய உண்மைகள் புகுவதற்கு மகிழ்வோடு வழிவிட்டு ஏற்று தன்னம்பிக்கையை வளரச் செய்தல்; தன்னால் இயன்ற அளவு நன்மை செய்துவிட்டு, பற்றற்று இருத்தல். இதுதான் பகுத்தறிவின் மதக் கோட்பாடு; விஞ்ஞானத்தின் வழிமுறை.

— இங்கர்சால்

மேலைநாடுகளின் முன்னேற்ற வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டி அங்குள்ள கல்விமுறையை நாம் பயின்றுவிட்டு வாளா இருப்பது நன்றன்று. கல்விமுறை சமுதா யத்தை மாற்றும் சக்தி படைத் தது. அது சாதியை எளிதில் வென்றுவிடும். அதற்கு மனிதன் இதயம் பண்பட வேண்டும்.

## பொருளாதாரம் :

பொருளாதாரம் சாதியை நேரடியாக வளர்க்கவில்லை என்ற போதிலும், மறைமுகமாக அது சாதியை வளர்க்கத்தான் செய் கிறது. பணத்தினால் ஏற்றத் தாழ்வு என்பது சாதியின் அடிப் படையையும் கொண்டு நிர்ண யிக்கப் படுகிறது. இன்றைய சமூகத்தில் ஒரு சாதியில் நிறைந்த செல்வந்தர்களும், மற் றொரு சாதியில் ஏழைகளும் நிறைந்து கிடக்கிறார்கள். சாதி யால் தாழ்ச்சி பெற்ற மக்கள் பணத்தாலும் தாழ்ச்சி நிறைந் தவர்களாகவும் இருக்கிறார்கள். சமுதாயத்தின் கடைநிலையில் உள்ளவனை, சாதியாலும், பணத் தாலும் உயர்ந்தவன் எவ்வாறு நேசிக்க முடியும்?

ஒரு சாதியில் ஒரு ஏழை மற் றொரு சாதியின் பணக்காரன் ஒருவனைப் பார்க்கும் போது அவனது பணத்துக்கும் சாதிக் கும் சரிசமமாக மதிப்புக் கொடுக் கிறான். "உயர்ந்த சாதியில்" உள்ளவர்கள் ஏற்கனவே ஏராள மான வருவாய் கொண்டவர்களா கவும், தாழ்ந்த சாதிக்காரன் குறைந்த வருவாய் உடையவனா கவும் இருப்பதால், அவர்கள் தனித்தனியே வீற்றிருந்து சமு தாயத்தை நடத்திச் செல்ல விழைகின்றனர். இந்நிலைமை நீங்க எல்லோருக்கும் சமமான தொழில் வாய்ப்பும், பணவருவா யும் கிடைக்க வேண்டும்.

நாம் இன்று காணும் பணக்காரர்கள் பல சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்று பட்டுவிடுகிருர்கள். பணம் அவர்களைப் பிணைத்து வைக்கிறது என்பதுதான் உண்மை. அவர்கள் தங்கள் சாதியை மறந்து கூடச் சில சமயங்களில் திருமணங்களும் புரிகின்றனர். இங்கு பொருளாதாரம் நல்லாட்சி செய்கின்றதன்ருே? சாதிக் குறுக்கீடு எங்கோ ஓடி விட்டதல்லவா?

இன்றைய நாகரீக வாழ்வில் செல்வந்தர்கள் அனைவரும் ஒன்றுபட்ட சமத்துவ பொருளாதார தத்துவத்தையும், சாதிபேத மற்ற சகோதர உறவையும் கொண்டு சமூகத்தை சிறக்கச் செய்ய வேண்டும்.

தென்னுஃரிக்காவிலே நிற வெறியால் தொல்லைக்குள்ளான இந்திய சமூகத்தினரைக் காப்பாற்ற, மனித உரிமைகளைத் தடையின்றி வழங்க, காந்தியடிகள் வழக்காடியபோது அங்கு பெரும் பணக்காரர்களே உதவிஞர்கள். ஏழைகளும் கூட தமது சொற்பத் தொகையையும் உடல் உழைப்பையும் தந்தனர். பணக்காரர்கள் பணத்தியாகம் செய்தது, நிறவெறியையும், சமூக வெறியையும் ஒடுக்கவே. பொருளாதாரம் இங்கு மற்ருேர் நிலையில் பயன்படுகிறது காண்க. அதே பணக்காரர்கள் நமக்கென்ன என்று வெள்ளையரை கைக்குள்போட்டுக்கொண்டு சுய நலத்தை மட்டுமே பெரிதாகக் கொண்டிருந்தால் என்னவாகியிருக்கும்?

அதைப்போலவே இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலே எத்தனை கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள், செல்வந்தர்கள் தமது சாதி மதம் துறந்து, சுதந்திரம் என்ற சுவைக்கனியைப் பாதுகாக்க முயன்றனர்! எவ்வளவோ பொருட்தியாகம்! உள்ளத் தியாகம்! உயிர் தியாகம்! சுதந்திரப் பிடிப்பும், சுயகவுரவமும் ஒவ்வொரு மகனுக்கும் தேவை அல்லவா? அன்று சுதந்திரம் காக்க முன்வந்து சுதந்திரம் அடைந்தது போன்று இன்று சாதி ஆதிக்கம் ஒழிவதற்கும் செல்வர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்; முன்வரவேண்டும்.

சாதியை ஒழிப்பதில் செல்வந்தர்கள் இரண்டு விதத்தில் பயன் படுவார்கள். ஒன்று, தம்மைப் பொது நல வாதியாக்கிக்கொண்டு எல்லோருக்கும் பயன் படச் செய்வது. இரண்டு, சாதியை எண்ணுமல் எல்லோரும் சமம் என்ற அளவிலே சாதி மரியாதையை விரும்பாமலும், பணத்தன்மையை அளந்து காட்டாமலும் ஒழுங்கு முறையில் வாழ்வதுமாகும்.

சாதியின் பெயரால் பணத்தின் தன்மையை உருவாக்கலாகாது. பொருளாதார ஏற்றத்தாழ்வால் பீடிக்கப்பட்டுள்ள சமுதாயத்தை சீர்திருத்தம் செய்ய முற்படும் போது அவர்கள் சாதிமுறையையும் ஒழிக்கக் கடமைப்பட்டுள்ளனர். சாதிமுறையும் பொருளாதார சமத்துவமும் நாணயத்தின் இருபக்கங்களாக இருக்கின்றன.

பணம் இன்றைய வாழ்விலே வலிமைமிகுந்த சாதனம். அப்படிப்பட்ட சாதனமாக உள்ள பணத்தை அரசியலார் உணர்ந்து பொருளாதார கட்டுப்பாட்டையும் கொண்டு திட்டங்களையும், சீர் அமைப்பையும் உருவாக்கி மனிதனை மிருகமாக்கும் சாதியையும் மற்ற பேத உணர்ச்சி சாதனங்களையும் அறவே களைந்து மனிதனை மனிதனுக்க முயல வேண்டும். பணத்திஞலே உறவும் இன்பமும் கூடு

மானால் சாதியில் தாழ்ந்தவர்கள் பணத்திலும் தாழ்ச்சி கொண்டிருப்பதால் சாதி வளருமே தவிர ஒழியாது. பொருள் படைத்த செல்வர்களும் அரசியலாரும் முயன்று சாதியை ஒழிக்க வேண்டும்.

## வாழ்க்கைத் தத்துவம் :

வாழ்க்கைத் தத்துவம் என்றால் வாழ்க்கை வாழும் முறையினைக் கூறுவதாகும். இது சமுதாயத்து மக்களையெல்லாம் கவர்ந்து நிற்கக் கூடியது. வாழ்வு எப்படியும் அமையலாம். ஆனால் நடைமுறைகளைப் பின்பற்றித்தான் வாழ்க்கைத் தத்துவம் மலருகின்றது.

ஒரு சமுதாயம் பலசாலிகளின் கூட்டாக அமையலாம். அவர்கள் எல்லோருக்கும் அடிப்படைப் பலம் பொருந்திய வாழ்க்கை வசதிகளை சர்க்கார் அளிக்க வேண்டும். "உயர்ந்த சாதி—தாழ்ந்த சாதி" அடிப்படையில் சலுகைகள் வழங்கவே கூடாது. அது சாதி உணர்வைத் தூண்டவில்லை என்ற போதிலும், சாதியை மெய்ப்பிக்கின்றது. சமுதாயச் சக்கரங்கள் சமத்துவ ரீதியான கண்ணோட்டங்களுடன் செயல் பட வேண்டும். கல்வி கேள்வியால் எந்த அளவுக்கு ஒருவனை மாற்ற முடியுமோ அந்த அளவுக்கு வாழ்க்கைத் தத்துவ அடிப்படையாலும் ஒருவனை மாற்ற முடியும்.

சிலகோடி மக்களின் உள்ளங்களில் உள்ள பழமை இருளைப் போக்க இன்றுள்ள சமூக உயர்வு மனப்பான்மை பயன் படாது. ஏட்டளவில் வாழ்க்கைத் தத்துவங்களை அறிந்தால் மட்டும் நாம் முன்னேற முடியாது. நமது தத்துவங்கள் மக்கள்தம் கருத்துக்களாகவும் செயல்களாகவும் மலர முயல வேண்டும்.

முதல் உலகப் போர் முடிந்த பின்பு ருஷ்ய நாட்டிலே, பொருளாதார நெருக்கடியும், சமூக பிற்போக்கு சக்திகளும், மத வெறியும் வாழ்க்கைத் தத்துவத்தை சீர்குலைத்து விட்டன. அதைச் செம்மைப்படுத்த லெனின் கையாண்ட முறைகள் போற்றக் கூடியவைதான். அவ்வாறுகாவிடில் கொடுங்கோலாட்சி, பொருளியல் வேறுபாடுகள், மத வெறி-இவைகள் மறையாமல் நீடித்தே இருந்திருக்கும். மக்களின் வாழ்க்கைப் போக்கில் ஒருபெரும் உள்ளப் புரட்சி ஏற்பட வேண்டும். தாமாகவே மக்கள் தம்மை செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அரசியலார் மக்களிடம் உள்ள தவறான போக்கைத்திருத்த முனையும் போது மக்கள் உதவி செய்ய வேண்டும்.

வாழ்க்கை வாழும் போது மனிதன் தன்னை எண்ணிப் பார்ப்பதேயில்லை. எண்ணிப் பார்க்கச் செய்வது எல்லோருடைய கடமையாகும். புதுமையான வாழ்க்கைத் தத்துவங்களைக் கூறி அதனடிப்படையிலும் வாழலாம் என்பதைக் காட்ட வேண்டும். உழைப்போம்; உண்போம்; அழிவோம்;-இந்த முறையில் இயங்க வேண்டி நாம் பிறரின் மனத்தையோ, எண்ணங்களையோ, உரிமையையோ, சுதந்திரத்தையோ, ஏதாவது ஒரு பிற்போக்கு மரியாதை காரணமாக பறிக்கவோ, கெடுக்கவோ ஆசைப் படக் கூடாது.

வாழ்வானது எப்படியும் சிறந்த நெறிகளினால்தான் சிறப்பாக முடியும். அதனால் வாழ்வுத் தத்துவத்தின் அடிப்படை சாதியை அறவே நினைக்கத் தூண்டாத ஒன்றாக, எட்டாத தொலைவில் வைக்கப்படவேண்டும். உலகத்

தில் உள்ள பொருளெல்லாம் எல்லோருக்கும் சொந்தம் என்ற உண்மையில் நம்பிக்கை வேண்டும். இதை எல்லோரும் அறிய வேண்டும். அறிந்து செயல்படவும் முன்வரவேண்டும்.

## தனிமனிதனும் சமுதாயமும்

தனிமனிதனும் சமுதாயத்தின் ஓர் உறுப்பு. தனிமனிதனை நீக்கி விட்டு சமுதாயத்தைக் காண முடியாது. சமுதாயத்தை நீக்கிவிட்டால் மனிதனைக் காண முடியாது. தன்னளவில் மனிதன் தன் பாடு சாதியை வளர்க்கிறான். அதன் பலன், சமுதாயத்திலே கெட்ட நாற்றம்தான் வீசப்படுகிறது; ஆதலால் தனிமனிதனும் திருந்திட வேண்டும்.

இன்றையப்பள்ளி இளைஞர் சாதிபேதமற்ற முறையில் சிந்திக்கவும், உண்மைகள் தெளியவும் கற்றுக்கொள்ள வேண்டும். புத்தனுக்கு இருந்த நம்பிக்கை, தன்னம்பிக்கை, ஒரு புதிய மதமாகவே உருவாகி இருக்கிறது. இன்று சிலரிடம் நம்பிக்கை என்

---

## ஆதி சங்கரர்

''ஆதி சங்கரர் தத்துவப் பொருள் பற்றி வாதிட்டுப் பலரை வென்று தமது கொள்கையை நிலைநாட்டினாராம். அவர் கூட்டங்களிலே பேசிக் கொண்டிருக்கும் போதே-- வாதம் புரிந்துகொண்டிருக்கும் போதே--மாயமாய் மறைந்து மக்களின் ஆதரவைத் தம் பக்கம் திருப்பிவிடுவாராம்! ஒரு நாள் தம்மோடு வாதிட்டுத் தோற்ற ஒரு எதிரியின் மனைவி ஆண்-பெண் உறவு பற்றிக் கேட்ட கேள்விக்கு அவருக்கு விடை கூறத் தெரியவில்லையாம்! காரணம், திருமணமாகும் முன்பே துறவு பூண்டவரல்லவா? வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட சங்கரர், ஆண்-பெண் உடல் உறவு பற்றிய கேள்விக்கு விடை சொல்லச் சிறிது காலம் தவணை கேட்டு மறைந்தாராம்.

இறந்துபோன அரசன் 'அமரு' என்பவரின் உடலிலே தம் கலை மகிமையால் தம் உயிரைப் பாய்ச்சினாராம் ஆதி சங்கரர்! இறந்த அமரு உயிர் பெற்றானும். அழுதுகொண்டிருந்த அவன் மனைவி ஆவலோடு ஓடிவந்து அணைத்தாளாம்! பிறகு......? கொஞ்ச காலத்திற்குப் பின்பு சங்கராச்சாரியார் தம் யோக சாதனைகளை முடித்துவிட்டு, கேள்விக்குரிய விடையை நேரிடையாகப் பயின்று முடித்து, கேள்வி கேட்ட பெண்ணிடம் வந்தாராம். ''திறமையாக விடையளித்து, விவாதத்தில் வென்றாராம்! ஆண்-பெண் உறவு பற்றிய கேள்விக்கு விடை சொல்லத் தெரியாதது ஆதி சங்கரருக்கு-துறவிக்கு - ஒரு குறையா? இதற்காக 'அமரு' உருவம் பெற வேண்டுமா? அப்படியானால் உண்மையான துறவியா? உண்மையாகவே வேற்றுருப் பெற்று அதற்குப் பின்புள்ள செயல் செய்தது பொய் யென்றாலும், அப்படிப் பெற்றதாகப் பொய்யுரைத்து, 'அமரு சாதகம்' என்ற நூல் புனைய வேண்டுமா? ''அமருசாதகம்'' படியுங்கள்!

—R. D. கார்வே.

(தமிழாக்கம்: குருதாசன்)

மானுள்ளயலே இல்லை. பத்துப் பேர் படிச் செய்தால் அரசாங்க உதவியும் கிடைக்கிறது; அதனால் எடுத்த காரியம் வெற்றிபெற வாய்ப்பு உண்டு என்பதை மறந்து போகின்றனர்.

மகா அலெக்சாண்டர், நெப்போலியன், ஹிட்லர் போன்ற வைராக்கிய சீலர்கள் தாம் கொண்ட கொள்கையில் எவ்வளவு பிடிப்பு உறுதி, நம்பிக்கை வைத்திருந்தார்கள் தெரியுமா? அதனாலேதான் இன்றும் அவர்கள் வரலாறு நம்மைக் கண்டு நகைக்கிறது. அதர்மமோ, தர்மமோ, ஆனால் அதன்பேரில் இருந்த மதிப்பு எவ்வளவு என்பதைக் கணக்கிட முடியாது. ஏன் நாமும் அவ்வாறு வைராக்கிய சீலர்களாகி, நம்பிக்கையாளரர்கி சாதிப்பேயை விரட்டக் கூடாது?

'உலகம் ஒரு பூக்காடு அங்கு எத்தனையோ விதமான மலர்கள் மலரலாம். ஆனால் தோட்டக்காரர்களாக ஜெர்மானியரே இருக்கவேண்டும்' என்றான் ஹிட்லர். எவ்வளவு நெஞ்சுரம்? எவ்வளவு ஏதேச்சாதிகார மூளை! எவ்வளவு சர்வாதிகார ஆணவம்! அதர்மத்தில் இவ்வளவு பிடிப்புடன் இருந்த ஹிட்லரைப் போல நாமும் நம் லட்சியத்தில் அவ்வாறு ஏன் செயலாற்றக் கூடாது? நாம் மேற்கொள்ளும் பணி தலையானது. தனிமனிதர் எல்லோரும் முயன்றால் முடியாததும் உளதோ?

அமெரிக்காவிலே ஒரு லிங்கன் தோன்றி சமுதாய ஏற்றத்தாழ்வை, அடிமை வியாபாரத்தை ஒழிக்க வில்லையா? அதற்கென தனிச்சட்டங்கள் அரசியல் நோக்காகக் கொண்டுவரவில்லையா? அதெல்லாம் தனிமனிதனது எண்ணத்தில் எழுந்த கருத்தும், பெருமை வாய்ந்த செயல்களும் அல்லவா? எனவே நாமெல்லாம் புரட்சி வீரர்களாக மாறி சாதியை ஒழிப்பதில் முனைய வேண்டும். மாநாடுகள் கூட்டி எண்ணங்களை வெளிப்படுத்தலாம். சாதியின் பெயரால் விளங்கும் எல்லாவிதமான நிலையங்களையும் ஒதுக்கி நிற்கலாம். சாதித் தொழிலையும், சாதிமுறையிலேயே வாழ்வை ஓட்டும் மக்களையும்வேறுவழிகாட்டித்திருப்பி விடலாம்.

சாதியினை ஒழிக்க விரும்பும் மனிதன் ஒவ்வொருவனும் தன்னை சாதியற்ற மனிதனாக சமுதாயத்துக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன், அவன் தான் சார்ந்த அரசாங்கத்துக்கு தன்னைப்பற்றி எழுத்துமூலம் தெரியப்படுத்த வேண்டும். நாட்டிற்கு சட்டதிட்டங்கள் ஏற்படுத்தும் சபைகள் அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும். அயராது உழைக்க விரும்பும் அன்பர்கள் கிராமங்களிலே பகுத்தறிவு பிரச்சாரம் செய்யவேண்டும். வழக்கங்களை மதித்து நடக்கும் மக்களிடத்தில் தம் சார்பான உண்மைகளை வெளிப்படுத்தும் முறை திறமையாகவும், தந்திரமாகவும் இருக்க வேண்டும்.

மனிதன் மேல் கிடக்கும் வேறுபாட்டுச் சுமைகளை எண்ணிப் பார்க்கத் தூண்ட வேண்டும். பெண்மணிகளின் மனத்தைக் கவர்ந்து அவர்கள் தங்கள் கணவரை மாற்றி விட முயல வேண்டும். கலப்பு மணத்தைத் தடையின்றி பழைய முறைப்படியே வேண்டுமானாலும் நடத்தி வைக்க முயலவேண்டும். கோயில்களுக்கு எல்லோரும் சென்றுவர உரிமை வழங்கப்பட வேண்டும். கோயில் பூசாரிகளாக எல்லா சாதியினரும் வர வாய்ப்புத் தரவேண்டும்.

### வருங்காலமும் லட்சியங்களும்

வருங்காலத்துக்கு நமது முன்னேற்றத்துக்காக தமிழகத்தில் "தமிழர் சமய சங்கம்" என்ற அமைப்பை நிறுவ வேண்டும். சாதியின் அடிப்படையையும், சாதியையும் களையும் பேற்றுல் நிறுவப்பட்டதாக சமுதாயத்துக்கு அறிவிக்க வேண்டும். எல்லா சாதியினருக்கும், மதத்தினருக்கும் அதில் உறுப்பினராக உரிமை உண்டு. உறுப்பினர்கள் தாம் எந்த சாதியையும் சார்ந்தவரல்ல என்று வாக்குறுதியுடன் எழுதித் தரவேண்டும். இனி மேல், சாதியை ஒழிக்கப் பாடுபடும் கட்சிக்கே வாக்காளர்கள் ஓட்டுச் செய்யவேண்டும்; பிறகு சமூக உறவைக் கெடுக்கும் சாதியை ஒழிக்க தம் பிரதிநிதிக்கோ அரசாங்கத்துக்கோ ஆலோசனை கூறவேண்டும்.

வருங்காலம் சிறக்க நம் லட்சியமும் சிறந்ததாக இருக்க வேண்டும். மேலைநாடுகள் விஞ்ஞான யுகமெனக் கருதி ஏராளமான முன்னேற்றத்தோடு வானுலகை எட்டுகின்றுர்கள். நாம் இங்கு இன்னும்தான் சாதியை ஒழித்து வருகிறோம் !!

---

"அறியாத காலத்தில் வெறும் நம்பிக்கையுடன் செய்வதெல்லாம் பக்தி; அறிவு பெற்ற பிறகு செய்வதெல்லாம் மெய்யறிவு ஆகும்."

—ஷேக்ஸ்பியர்.

* * *

"கற்றறிந்தவர்களாயிருக்க வேண்டுமென்று எல்லோருமே ஆசைப்படுகின்றனர்; ஆனல் அதற்குத் தகுந்த விலை கொடுக்க (உழைக்க) மட்டும் எவரும் விரும்புவதில்லை."

—Juvenal.

* * *

"மூடப் பழக்க வழக்கங்களைத் 'தெய்வீகம்' என்று மதிக்காத மனிதனைப் பொல்லாதவன் என்று மற்றவர்கள் கருதுகின்றனர்; அவர்களுடைய இயல்பான கோழைத்தனமே இதற்குக் காரணம்."

—பர்னர்ட் ஷா.

* * *

"உலகமே ஒரு போர்க்களம்; அதில் நம் வாழ்க்கை ஒரு போராட்டம். இப்போராட்டத்தில் நம் வெற்றிக்கான கருவி என்ன? வெற்றி பெறுவோம் என்ற எண்ணமும், தன் திறமையில் தான் கொண்டுள்ள நம்பிக்கையும்தான்."

—நெப்போலியன்.

# உங்களுக்கு ஊக்கம் பிறக்க

[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக்கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப்பாடஞ் செய்யுங்கள்; பலதடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு நடத்தையில் காட்டுங்கள்.

மற்றப் பொன்மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன்படுத்துங்கள்.

இவை பல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு – மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]

*''இன்பமான முகம் என்ற இனிமையான தந்திரத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்!''*
—**ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்**

*''நிபுணர் என்பவரின் ஒவ்வொரு உற்பத்தியும் ஊக்கத்தின் உற்பத்தியே ஆகும்.''*

—**பெஞ்சமின் டிஸ்ரலி**

*''பகுத்தறிவினால் ஆற்ற முடியாத புண் காலப் போக்கினால் ஆறிவிடுவதை அடிக்கடி காணலாம்.''*

—**செனிகா**

*''ஒருவருடைய துன்பங்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய உண்மையான வழி, மற்றவர்களின் துன்பங்களுக்கு ஆறுதல் கூறுவதுதான்.''*

—Mme.de Maintenon

*''திறமையற்றவர் என்று எவருமில்லை; என்றாலும் சிலர் தோல்வியடைவதன் காரணம், அத்திறமையைப் பயன்படுத்தாததேயாகும்.''*
—**கால்வின் கூலிட்ஜ்**

*''உனக்கு உயிர்மீது ஆசையுண்டா? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே. நேரம்தான் வாழ்க்கையை நிரப்பிக் கொண்டிருப்பது.*

—**பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்**

*''மகிழ்ச்சியோடு இருக்கின்ற கலை எது தெரியுமா? பொதுவான சிறு சங்கதிகளிலிருந்து கூட இன்பத்தை எதிர்பார்க்கும் சக்திதான்.''*

—Henry Ward Beecher

*''மக்கள் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பதைவிடச் சிறிதாவது கூடுதலான சிறப்புடன் செயலாற்று. அதுதான் வெற்றிக்கும் வழி; இன்பத்துக்கும் வழி.''*

—Herbert N. Casson

*''இன்பமும் நட்பும் கூடிய புன்சிரிப்பு எந்த சூழ்நிலைக்கும் பொருந்தக்கூடியதாகும். உன் மனம் என்ன என்பதற்கு அதுதான் உரைகல்; ஆதலால் புன்சிரிப்பு மூலம் உன் உள்ளக்கிடக்கை வெளிப்படுகிறது.''*
—**டேவிட் டன்**

மகளிர் பகுதி

# உம் மகள் திருமணம்

*[பெண்களுக்கு 16-18 வயதில் திருமணம் நடத்துவது சரியா, தவறு, என்பது பற்றிய ஆய்வுக்கட்டுரையின் மொழிபெயர்ப்பு. இரு சார்பிலுமுள்ள நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து எழுதியுள்ளார், இக்கட்டுரையாளர். பொருள் கெடாமல், சுவைகுன்றாமல், மொழிபெயர்த்துள்ளார், திரு. குருதாசன்.]*

பதினேழு வயதினை அடைந்த பருவ மகளுக்கு மணம் முடிப்பதா வேண்டாமா என்னும் பிரச்சினை இந்தியாவில் உள்ள பெற்றோருக்கு முடிவு செய்ய முடியாத இருதலைக் கொள்ளி நிலையாக இருந்து வருகிறது. தனது மகள் உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்ததும் மணம் முடித்து வைக்க வசதி பெறாத பெற்றோர் இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளிலோ மணம் முடித்து வைக்க முடியுமா என ஏங்குகின்றனர். பள்ளிப் படிப்பை முடித்த மகள் கல்லூரியில் புகுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்தி முயற்சி செய்யும்போது மணப் பிரச்சினை சிலநாள் தள்ளிப் போடப்படுகிறது. கல்லூரியில் தேர்ந்தெடுக்கும் பாடப் பிரிவைப் பொறுத்து மண நாள் தள்ளி வைக்கப்படுகிறது. ஒருவர் ஒரு பெண்ணின் தந்தையிடம், "உங்கள் மகள் கல்லூரியில் எந்தப் பிரிவில் சேர விரும்புகிறாள்?" என்று நேர்முகமாகக் கேட்டால், அவர் கேள்வியின் ஊடே தொக்கி நிற்கும்-மறைந்திருக்கும்-துணைக் கேள்வி, "நீங்கள் உங்கள் மகளை எப்போது மணம் முடித்துக் கொடுக்கப் போகிறீர்கள்?'' என்பதே ஆகும்.

பெண்ணின் மண வயது எது என்பதைச் சிறிது ஆய்வோம். இளம் வயதிலேயே மணம் முடிப்பதற்கு ஆதரவான காரணங்கள் என்ன என்பதை நோக்குவோம். பழமையிலே பிடிப்புள்ள குடும்பங்களும், கூட்டு வாழ்வு வாழும் குடும்பங்களும், தங்களது பெண்களை இருபது வயதிற்கு முன்பே திருமணம் செய்து கொடுத்து விடலாம். அந்த வயதுடைய பெண்களுக்குத் தனக்கென ஒரு குறிக்கோள், கோட்பாடு இல்லாத காரணத்தால் தாங்கள் புகும் குடும்பத்தினர் நிலைமைக் கேற்ப, அங்கு நிலவும் சூழ்நிலைக்குத் தக்கபடித் தங்களை மாற்றி வாழ வழி செய்து கொள்கிறார்கள். அப்படி ஒட்ட ஒழுகும் நிலையில், அவர்கள் துயரப்படுவதாகவோ, துன்பப் படுவதாகவோ உணர்வதில்லை. மாமியார் - மருமகள் உறவு; கணவன் - மனைவி உறவு; உரிமை; கடமை என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்காமல்; உரிமைகள், கடமைகள் பற்றிய பிரச்சினையை எண்ணாமல்; எதிர்க்

கேள்வி போடாமல் – குறிப்பிட்ட கடமையைச் செய்து தரப்பட்டிருக்கும் உரிமையை அநுபவிக்கிருள். மாமியார் மருமகளுக்குள் உயர்வு தாழ்வு பிரச்சினை எழுவதில்லை.

இதைத்தவிர குழந்தை உள்ளம் கொண்ட பெண்ணும் தன்னை ஒரு சிறு பிள்ளை என்றும், தன் கணவன் ''எல்லாம் அறிந்தவர்'' என்றும் எண்ணும் எண்ணம் மனதில் நிலைத்திருப்பதால் தன் கணவன் சொல்லும் சொற்களும், செய்யக் கூடிய செயல்களும் சரியானவை என்றே எண்ணுகிருள். அதனுல் கணவன் கருத்தோடு ஒத்துப் போகும் நிலை ஏற்படுகிறது. வேற்றுமை உணர்ச்சி தலை காட்டுவதில்லை, எழுவதில்லை.

இவ்வித மனப்பான்மை ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது. சில பெண்களுக்குப் பிடிவாதமான குணம் அமைந்திருக்கும். அப்படிப் பிடிவாதமான குணம் உடைய பெண்களை அவர்களது முரட்டுப் பிடிவாதத் தன்மை தளர்ந்த பின்பு, கொஞ்ச காலம் தாழ்த்தி மணம் முடித்தல் நலம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இளமை மணத்தால் கிடைக்கும் மற்ருெரு நன்மை, இளமையான பெண்ணுக்கே நல்லஇடத்துச்சம்பந்தம் கிடைக்கும்வாய்ப்பு அதிகம் இருக்கிறது. இந்தியாவிலுள்ள சராசரி மனிதன் இருபத்தைந்து வயதிலிருந்து இருபத்தெட்டு வயது வரை மணம் முடிக்கிருன். அதனுல் அவனுக்கு வரும் மணப்பெண் பதினுறு ஆண்டுகளிலிருந்து இருபது வயதுக்குள்ளாக இருப்பதையே விரும்புகிருன்.

காலம் தாழ்ந்தால்......

இருபத்தைந்து ஆண்டு வரை ஒரு பெண் மணம் முடிக்காமல் இருக்கிருள் என்ருல், அதற்குப் பின்பு அவள் தனக்குத் தகுந்த கணவனைத் தேர்ந்தெடுக்க முடியுமா என்பது கடினம் தான். காரணம், பெரும்பாலும் அவளுக்குத் தரமான 95 சதவிகிதம் ஆடவர் அதற்கு முன்பே மணம் முடித்திருப்பார்கள்.

தகுதியான கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காகக் காலம் தாழ்த்தும்போது, பெண் சிந்தித்துத் தேர்ந்தெடுக்கும் நிலை மாறி உணர்ச்சி வசப்பட்டுத் தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை மிகவும் அபாயகரமானதாகும். தவிர பெற்ருேர்களும், சூழ்நிலையால் பாதிக்கப்படாத களங்கமற்ற மனம் கொண்டிருக்கும் இளமையான பெண்களைத் தங்கள் வழிக்குக் கொண்டு வர முடியும். பெண் தனக்கென்று ஒரு கொள்கை கொண்டு விட்டால், பின்பு அவளைத் தங்கள் பாதைக்கு அழைத்து வருவது என்பது பெரும்பாலும் முடியாத செயலே ஆகும். பெண்களை மிக்க விழிப்போடு தங்கள் கண்காணிப்பிலே பாதுகாத்து வரும் பழமைப் பிடிப்புள்ள பெற்ருேர், தங்களது பெண்களுக்கு இளமையிலே மணம் முடித்து வைப்பது நல்லது. ஏறத்தாழ பதினுறு வயதிற்குப் பின்பு ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் இயல்பாகவே மன எழுச்சி ஏற்படுகிறது. அவ்வெழுச்சி மிகக் கொடுமையாக அடக்கப்பட்டால் இழிந்த உருவோடு வெளிப்பட்டுச் செயல்படுகிறது.

அடக்கம் என்பதன் பேரால், பெண்கள் ஒதுங்கி நடக்கும் தன்மை இங்குள்ளது. இப்படி

ரோரை இழந்த பெண்களை வைத்துப் பாதுகாக்கும் சுற்றத்தார், அந்தப் பெண்கள் தங்களை விட்டு நீங்கினுல் பெரும் பொறுப்புக் குறைந்ததாக எண்ணுகிருர்கள். அதனுல் எவ்வளவு விரைவாகப் பொறுப்பைக் குறைக்க முடியுமோ. அதற்கு வேண்டிய வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிக்கிருர்கள்.

## தீமைகள்

வாழ்வில் ஒவ்வொரு செயலுக்கும் நன்மையும், தீமையும் உண்டு,-இரு புறம் உண்டு. இளமை மணத்திற்கு எதிரான காரணங்கள் என்ன என்பதையும் ஆராய்வோம், பதினெட்டு வயதிலோ, இருபது வயதிற்குள்ளோ ஒருவர் தம் பெண்ணை மணம் முடித்துக் கொடுத்து விட எண்ணிஞல் பெண்ணுக்குத் தகுதியான வரன் கிடைப்பது அவ்வளவு உறுதியல்ல. பதினெட்டு வயதிற்குள் மணம் முடித்து விட வேண்டுமென்று விரும்பிஞல் நீண்ட கால கல்லூரிப் படிப்புக்கு இடம் இராது.

பெண்ணும் தகுதியான கணவனைத் தேர்ந்தெடுக்கும் மனப் பக்குவம் பெற்றிருக்கமாட்டாள். எந்த விதத் தன்மையோடு கூடிய ஆடவனைத் தன் கணவனுகப் பெற வேண்டும் என்பது பற்றிய எண்ணமே அவள் மனதில் பதிந்திருக்காது. பதினெட்டு வயதிற்குள் திருமணம் முடிக்கும் பெண்ணின் மணவாழ்வு இன்பமாக நடைபெருவிட்டால் அவள் எந்நேரமும் தன் பெற்ரோரையோ, தன்னுடைய முடிவையோ தான் குறை சொல்லிக் கொண்டிருப்பாள். இளமை மணத்தால் உயர் கல்வி தடைப்படுகிறது. இன்றைய நாளில் வாழ்க்கையில் ஏற்படும் தொல்லையையும், துயரையும் சமாளித்துக் கொள்வதற்கு உயர் கல்வி இன்றியமையாததாகிறது. முழுமை பெற்ற மனிதத் தன்மைபெற உயர் கல்வி மிக முக்கியமான பகுதியாக அமைந்திருக்கிறது. சிறந்த கல்வியால் வாழ்வின் சிறப்பை உணர முடிகிறது. மனமும், மூளையும் சிறந்த கருத்துக்களால் நிரப்பப்படுகிறது.

> **கடவுள் கணக்கு**
>
> உழைப்பு+கடவுள் வணக்கம்= உற்பத்தி
>
> உழைப்பு—கடவுள் வணக்கம்=உற்பத்தி
>
> எனவே, கடவுள் வணக்கம்= 0

சுதந்திரமாக வாழ்ந்து அறிவு பெறும் இளம் பெண்களைக் குடும்பத் தளையால் பிணைத்துப் பொறுப்புக்களைச் சுமத்துவது வருத்தத்துக்கும் வேதனைக்கும் உரிய செயல் தான். மாமியாரின் பொறியிலே மாட்டிக் கொண்ட சில இளம் பெண்கள் வாழ்வின் இன்பங்கள் எவை என்பதை உணரும் வாய்ப்புப் பெறுவதே இல்லை.

அறிவு முழு வளர்ச்சி பெருத இளம் பெண்களை மணம் முடிக்கும் ஆடவர் தங்கள் கருத்துக்களை ஆணித்தரமாக நிலை நாட்டித் தங்கள் போக்கில் வாழ்வு நடத்தும் தன்மை பெறுகிருர்கள் மனைவியைத் தன் போக்கிலே ஒத்து வரும்படிச் செய்கின்றனர். அவளுடைய உணர்ச்சிகள் ஒடுக்கப்படுகின்றன; நசுக்கப்படுகின்றன. இயற்கையான மன வளர்ச்சி அடக்கப்படுகின்றது. கணவனே அல்லது

ஒதுங்கிப் போவது என்றால் ஆடவரும், பெண்களும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டார்கள் என்பதல்ல பொருள். மேல் நாட்டிலே மணமாகாத ஆடவரும், பெண்டிரும், மிக மிக நெருக்கமாக உடலுறவு கொள்ளும் தன்மையில் நடக்கிறார்கள். அதோடு ஒப்பிட்டுப் பார்த்து இந்தியா பின் தங்கியுள்ளது என்று கூறுவது பொருந்தாக் கூற்றாகும். வளர்கிற, செயல்படுகிற சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்படுவது இயல்பு. இளமையிலே மணம் முடிக்கும் பெண், காலப் போக்கில் ஒட்ட ஒழுகி அவள் தன்னை முழு வளர்ச்சி பெற்ற பெண்ணாக ஆக்கிக் கொள்கிறாள்.

அதன்றியும் இளம் வயதிலேயே மணம் முடித்த ஆடவனும், பெண்ணும் தங்கள் குழந்தைகளோடு மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைக்கிறது. குழந்தைகளின் இளம் உள்ளங்களில் எழும் உணர்ச்சிகளையும், தேவையையும் மிக நுட்பமாக அறிய முடிகிறது. பாதுகாவலராகவும், தோழராகவும் இருந்து நல்ல முறையில் உற்சாகமாகக் குழந்தைகளை வளர்க்க முடிகிறது. பொருளாதாரப் பிரச்சினையைச் சரிக்கட்ட இளமை மணம் உறுதுணையாகிறது. தந்தை வேலையிலிருந்து ஓய்வு பெறும் முன் மகன் சம்பாதிக்கும் நிலைமையைப் பெற்றால் அது மிகவும் சிறந்த தன்மை; அரிய வாய்ப்பு என்றே கூற வேண்டும்.

இளம் வயதில் மணம் முடிக்கும் பெண் வீட்டுக்கு வெளியே சென்று வேலை பார்த்து சம்பாதிக்கும் வாய்ப்புப் பெறுவதில்லை. சுதந்திரம் என்ற பெயரால் வெளியே சென்று பலதிறப்பட்ட வாழ்வு முறைகளைக் கண்டு ஏங்கும் நிலை பெறவில்லை. அதனால் மன நிறைவுடன் தடுமாற்றம் இல்லாமல், அலைபோல அசைந்தாடும் நிலை இல்லாமல், உறுதியான வாழ்வு வாழ உறுதுணையாகிறது. "அப்படி இருந்தால்" என்று எண்ணும் எண்ணமே உருவாக இடமும், வாய்ப்பும் அமையாத காரணத்தால், உறுதியான வாழ்வு அசைவதற்கு இடமிருக்காது.

## பணிக்குச் சென்றால்...

நாளுக்கு நாள் பெண்கள் பணி புரிய விரும்பிச் செல்லும் நிலை உருவாகி வளர்ந்து வருகிறது. நிச்சயமாக நாளைய இந்தியாவில் "இல்லத்தை உருவாக்கும் இல்லாள்" தன்மைக்கும், "மனைவியும் வாழ்வில் ஒரு பகுதி" என்ற தன்மைக்கும் போராட்டம் எழத்தான் போகிறது. மாறி வரும் பொருளாதார நிலைக்கும்; ஏறிச்செல்லும் விலை வாசிக்கும், உயர்ந்து போகும் வரிகளுக்கும் ஒருவர் உழைத்துப் பெற்று வரும் சம்பளம் நிச்சயம் போதுமானதல்ல. பெண்களும் உழைத்து வருதல் வேண்டும் என்பதற்கு ஆதரவாக எத்தனை காரணங்கள் சொன்னாலும் மனைவி வேலைக்குச் சென்றால் வீடும், கணவனும், குழந்தைகளும் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பெரும்பாலும் அநேக குடும்பங்களில் இளமை மணம் நடக்கிறது. பணமுடை காரணமாக முதலாவது பெண் கேட்டு வருபவர் குறைந்த தொகையைப் பரிசமாகச்-சீதனமாகக்-கேட்பதாக எண்ணிக் கொடுத்து விடுகிறார்கள். இதை விட்டு விட்டால் இதற்குப் பின்பு வருபவர் அதிகமாகத் தொகை கேட்பர் என எண்ணுவதே இதற்குக் காரணம். பெற்

# கடிதங்கள்

## நிறையும் குறையும்

நமது நாட்டின் பொருளாதாரம் சில பெருந்தனக்காரர்கள் நடத்தும் போட்டிஅரசாங்க (Parallel Govt.)த்தால் "பாங்கர்கள் சுமக்கும் பல்லக்"காகி விட்டதையும், அதைத்தவிர்க்க நமது நிதியமைச்சர் நேர்முகப் போர் தொடுக்காவிட்டாலும் மறைமுகப் படையெடுப்பு எடுத்திருப்பதையும் ''சோஷலிச பட்ஜட்'' கட்டுரைகள் நன்கு, தெளிவாக விளக்கியுள்ளன. என் பாராட்டுதல்: இருந்தாலும் இதுவரை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைக்கண்டநாம் ''மீண்டும் ஒரு முறை தலை குனிவோம்,'' ''முதலாக்கத்தில்'' நாம் அவ்வளவு முன்னேறவில்லையே என்று.

நமது இந்தியப் பத்திரிகையாளரின் சுவையற்ற தன்மையை மூன்றரைப் பக்கங்களில் சாடியிருக்க, அதில் அரைப்பத்தியேனும் அனைத்துலகக்கீழ்த்திசை இயல் அறிஞர்களின் 26 ஆவது மாநாட்டின் நிகழ்ச்சிச் சுருக்கத்தை எழுதியிருக்கலாமே! பிறர் குற்றம் காண்பதும் அதைப் பறைசாற்றுவதும் மட்டுமே போதுமா?

''சாதிகளை ஒழிக்க வழி''யில் இனப்பெருக்கம் ஒன்றையே குறியாகக் கொண்ட சாதிகளுக்கு (அதனால் பெரும்பாலோர் ஆகலாம் என்றெண்ணி) கருத்தடைக் கட்டாய முறையையும் சேர்க்கலாமே!

கவுதமன்.
(குந்தக்கல்)

## கடவுளும் மனிதனும்

ஃபிப்ரவரி 'குத்தூசி' இதழில் 'பகுத்தறிவு' என்ற தலைப்பில் வெளிவந்த கடிதம் கண்டேன். பகுத்தறிவுப் பாதையில் செல்லும் மனிதன் தன்னுடைய கடமையையே கருத்தாகக் கொண்டு செல்கின்ற காலத்தில் கடவுளைப் பற்றிய பிரச்னையை நினைக்கவே நேரமில்லை, என்ற நண்பர் கூற்று விந்தையாக உள்ளது. ஆகவே நேரமில்லாததால் கடவுளைப்பற்றிய பிரச்னை எழவில்லை என்று கூறும் நண்பர் முன்னால், ''ஒருவேளை பகுத்தறிவுப் பாசறையின் உள்ளே புகுந்து ஆழ்ந்த உண்மைகளை ஆராய்ச்சி செய்து அதன் விளைவாக ஏற்படும் களைப்பின் காரணமாக, சில விநாடிகள் ஓய்வு எடுக்கும் பொழுது-அந்த ஓய்வு நேரத்தில் எதைப் பற்றிய நினைவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்?''— என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கு நல்லவிடை கூற வேண்டுமானால், ''எதை நினைத்தால் நல்லது விளையுமோ அதை நினைப்பது நல்லது'' என்பதே யாகும்.

சர்ச்சிலை அணுகி ஒருவர், "நீங்கள் கவலைகளை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" என்று கேட்டாராம். அதற்கு சர்ச்சில் கொடுத்த விடை இதுதான்:—'' I have no time to worry '' ("எனக்குக் கவலைப்பட நேரமே இல்லை"). கவலைப்படநேரமில்லை என்பது பிரச்னை அல்ல; நேரம் கிடைத்

அவனைச் சார்ந்த குடும்பத்தினரோ பெண்ணைக் கொடுமைப் படுத்தி, ''இந்த வழியில் தான் செல்ல வேண்டும்'', என்று சொல்ல வேண்டுமென்ற நியதி இல்லை. ஆனால் அவள் செய்யும் ஒவ்வொரு செயலும் தன் கணவனுக்கும், அவனைச் சார்ந்தோருக்கும் மகிழ்ச்சி யூட்டுவதாகவும், அவர்கள் கருத்துக்கு இசைந்ததாகவும் இருக்கவேண்டும் என்பதாகிறது.

அறிவு முதிர்ச்சி பெருத இளம் பெண்ணுக்கு, மனதில் உருவாகும் எண்ணங்களை ஒழுங்குபடுத்திச் செயல் படுத்தும் திறமை இருப்பதில்லை. பொருமையும், முன் கோபமும், மனப் பக்குவம் பெற்ற பெண்ணைக் காட்டிலும் பக்குவம் பெருத இளம் பெண்ணை எளிதில் ஆட்கொள்கின்றன.

இதுபோல் ஒன்றிற்கு ஆதரவாகக் காட்டும் காரணம், மற்ருென்றுக்கு எதிராக உள்ளது. எப்படியும் ஒரு உடன்பாடு தேவை. திருமணத்திற்குப் பின்பு ஒரு பெண்ணின் வாழ்விலே இன்பக் கீற்றுத் தோன்ருமலே இருந்து விடும் என்று சொல்வதற்கு வழியில்லை. குழந்தைகள் பிறந்த் வுடன் குறிப்பிட்ட பெரும் பகுதியான காலத்தையும், சக்தியையும், அவைகளின் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் செலவழிக்கும் நிலை பெறுகிருள்; அதிலே இன்பம் காண்கிருள், தாய்.

பெண் தனது கல்வியை முடித்தவுடனே அலுவல் என்பது பற்றிச் சிந்திக்காமல், இளமையிலேயே மணம் முடிப்பதுதான் சிறப்புடைய செயல். இந்த வழியால் தகுதியற்ற ஒருவனைக் காதலித்து தன்வாழ்வைப் பாழாக்கும் முறை தடுக்கப் படுகிறது. தனது மனதுக்கொத்த மணாளனோடு, மகிழ்வோடு வாழ்ந்து தனக்குரிய உரிமையையும் நுகர முடிகிறது. வேண்டா வெறுப்போடு சுமத்தப்பட்ட சுமையாக நினைத்துக் கடமை ஆற்றும் நிலை மாறி, மகிழ்வோடு பணி புரியும் தன்மை ஏற்படுகிறது.

[*இந்திரா அவஸ்தி*: Eve's Weekly—*தமிழாக்கம்: குருதாசன்*.]

---

*'' உங்கள் பேச்சைக் கொண்டுதான் உங்கள் அன்பு மதிக்கப்படும்; உங்கள் அன்பைப் போலத்தானிருக்கும் உங்கள் நடத்தை; உங்கள் நடத்தை போலத்தானிருக்கும் உங்கள் வாழ்க்கை.''*

**—சாக்ரட்டீஸ்.**

* * *

*''மனத்தின் இன்பங்களுக்கும் உடலின் இன்பங்களுக்கும் வேற்றுமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒரு பெண்ணை அவளது உடலமைப்புக்காகக் காதலிக்காதபடி ஆத்மார்த்தமாக மட்டும் காதலிக்கின்ற ஆண் எவருமேயில்லை.''*

**—லின் யு டாங்.**

தால் கவலையை எப்படிச் சமா ளிப்பது என்பதுதான் பிரச்னை.

கே. அருணுசலம்.
(சென்னை)

## பகுத்தறிவு

அய்ந்தறிவுகளை மட்டும் கொண்டு மாக்களாய் வாழாமல் ஆருவது அறிவாம் பகுத்தறிவைக் கொண்டு வாழ்பவர்களே மனிதர்களாவர். "அந்தப் பகுத்தறிவு எங்களுக்குத்தான் உண்டு" என்று எந்த நாத்திகத் தோழனும் உரிமை கொண்டாடியதில்லை. ''உங்களுக்கும் உண்டு, அப்பகுத்தறிவு. அதைப் பயன்படுத்தி சிந்தித்துப் பாருங்கள்''' என்றே வேண்டுகிருன். ஆனுல் நடைமுறையிலோ, ''பகுத்தறிவு வளரவேண்டும்'' என்று ஆசைப்படுகிற, பேசுகிற, தொண்டாற்றுகின்ற அத்துணை பேர்களையும் ஒருசிலர், ஏன்பலர், எப்படி எடைபோடுகின்ருர்கள் தெரியுமா? ''கடவுள் இல்லை என்று சொல்பவன்'' (நாத்திகன்) 'சாதிமதங்களை சாடுகிறவன்; பார்ப்பனர்களை வெறுப்பவன்; வேதபுராண இதிகாசங்களை ஏற்றுக் கொள்ளாதவன்; இந்துமத விரோதி''—என்றே கருதுகின்றனர். காரணம் என்ன? பகுத்தறிவு என்ற சொல் அவர்களுக்குப் பிடிக்கவில்லையா? பகுத்தறிவு அவர்களுக்கில்லையா? பகுத்தறிவுவாதி என்பதற்கு அவர்கள் கணிக்கின்ற இலக்கணமாக மேற்கூறியவை இருக்கலாமோ என்னவோ!

''தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருந்தக் கூலிதரும்'' என்ற வாய்மொழிக்கிணங்க செயல் வீரனுகின்ருன் நாத்திகன். ஆனுல் விதிவழி எனக்கூறி மதிகெட்டு வாழ்கிருன், பகுத்தறிவு கொண்டு சிந்திக்க இயலாத பரிதாபத்துக்குரிய ஆத்திகன்.

இனி, ''மதச்சார்பற்ற'' இந்த அரசாங்கத்தில்தான் ''இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை'' என்று ஒரு மதப் பாதுகாப்புத் துறையும், அதற்கென மந்திரி, அதிகாரிகள், பணிமனைகள் என்றுள்ளன- மேலும், அரசாங்கப் பள்ளிகள், பணிமனைகள், நூல் நிலையங்கள், போலீஸ் நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள் முதலிய பொது இடங்களில் இந்துமதக் கடவுள் படங்கள்-அதற்கென பூசைகள்-விடுமுறைகள் நடைபெறுகின்றனவே- இதற்கு யாரைக் குறைகூறுவது? இந்நிலையைக் கண்டிக்காத அரசாங்கத்தைத்தானே குறைகூற வேண்டும்? தங்கம் என்று சொல்லிப் பித்தளையைக் கொடுத்து ஏமாற்றியவனுக்குச் சிறைத் தண்டனை அளிக்கின்ற சட்டம்; அச்சட்டத்தை அமுல் நடத்தும் ஆட்சி—வெறும் கல்லைக் காண்பித்து "கடவுள்" என்று சொல்லிப் பல லட்சம் மக்களை ஏமாற்றுகின்றவர்களுக்குத் தண்டனை அளிக்கிறதா? இல்லையே! அப்படியானுல் இதனை எப்படி அறிவுள்ள, மதச்சார்பற்ற, அரசாங்கம் என்று சொல்ல முடியும்?

### கலகக் கூட்டம்

''இந்து சமூகம் பல சாதிகள் சேர்ந்த ஒரு அவியல் ஆகும்; ஒவ்வொரு சாதியும் தன் சொந்த வளர்ச்சியைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருப்பதனுல் இந்து சமுதாயத்தை ஒரு கலகக் கூட்டம் என்றே சொல்வேன்.''

—டாக்டர் அம்பேத்கார்.

"மதச்சார்பற்ற" அரசின் தலைவர் சில மாதங்களுக்கு முன் ஒரு மதச்சார்புள்ள (மதுரை கும்பாபிஷேகத்திற்கு) கோயிலுக்கு வர விருந்தது கண்டனத்துக் குரியதல்லவா? இதனைக் கண்டித்தும்- அறிக்கை வெளியிட்டும், உயர் நீதி மன்றத்தில் தடை மனுப் போட்டும் நிறுத்தியது சுய மரியாதை இயக்கம்தானே!

இனிக்கடவுள்பற்றி. "கடவுள் இருந்தால் நமக்கு என்ன நஷ்டம்? இல்லாவிட்டால் என்ன லாபம்?" என்றிருப்பது சரியல்ல. 'நமக்கு' என்பது நாத்திகர்கள் என்றால் லாபமுமில்லை; நஷ்டமுமில்லை. இந்நாட்டில் கடவுளை மூலதனமாக்கிக் கொண்டு மக்களை மடையர்களாக்கி வியாபாரம் செய்து, உழைக்காமல் உண்டு வாழ்கின்ற ஒரு சாரார்க்கு லாபமேயன்றி நஷ்டமில்லை. ஆனால் அக்கடவுளின் பெயரால் அர்த்தமற்ற— அனாவசியமான – ஆதாரமற்ற— ஆபாசமான-விழாக்கள், சடங்குகள் ஆகியவற்றில், பகுத்தறிவு கொண்டு சிந்திக்கத் தெரியாமல் ஈடுபடுகின்றவர்களுக்கு நஷ்டமல்லவா? எனவே, கடவுள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, என்று லாப நஷ்டக் கணக்குப் போடுவது சரியல்ல. ஆதலால் நாட்டின் முன்னேற்றம் தனிமனிதனின் முன்னேற்றமே. தனிமனிதனின் முன்னேற்றம் அவனுடைய கடமை, உழைப்பு, தன்மானம், நேர்மை, ஒழுங்கு, பண்பாடு இவற்றைப் பொருத்தே அமைகின்றது.

சௌ. அன்பன்.
(வடசேரி)

*" இளமையிலும் பழமையிலும் படிந்துவிட்ட கருத்துக்கள் மட்டுமே நம்மை ஏமாற்றுவதில்லை; புதுமையின் பகட்டுகளுக்கும் இதே சக்தியுண்டு."*

—பாஸ்கல்

* * *

*" குற்றமான செயல்களைச் செய்ய இணங்காமலிருப்பது முக்கியமாகும். ஆனால் பிறர் குறை கூறுவாரோ என்று, அளவுக்கு மீறிய எச்சரிக்கையுடன் நடப்பவன் அன்புடையவனாக இருக்கலாம்; உயர்ந்தோனாக இருக்க முடியாது."*

—புளூட்டார்க்

* * *

*" சோம்பலாயிருப்பது சுகமாயிருக்கலாம்; ஆனால் அது துன்பமான நிலை. நாம் ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டே யிருக்கவேண்டும்—இன்பத்துடன் வாழவேண்டுமானால், மனித இயற்கைக்கு சிந்தனை எவ்வளவு தேவையோ, அது போலத்தான் செய்கையும் தேவை."*

—ஹாஸ்லிட்

K. S. மகாதேவன், B.Sc., M.A.

# என்ன கிழமையானால் என்ன?

*[வாரத்திலுள்ள ஏழு கிழமைகளின் பெயர்கள் எப்படி வந்தன? தமிழ் நாட்டுக்கோ, மற்ற நாடுகளுக்கோ உரியவைகளா இவை? இன்றுள்ள ஞாயிறு, திங்கள்...சனி வரிசையிலா முன்பு இருந்தது? இவை பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரை. கிழமைக்கு அடிமைப்பட்டு அல்லல்படும் தமிழர்களின் மனத் துருவைத் துடைக்கக் கூடியது; கிழமைக் கோழைகளுக்கு அறிவுப் பாதையைக் காட்டுவது.]*

இன்று ஞாயிற்றுக்கிழமை என்றால் நாளை திங்கட்கிழமை; மறுநாள் செவ்வாய்க்கிழமை பிறகு புதன்; வியாழன்; வெள்ளி; சனி. இன்றிலிருந்து எட்டாவது நாள் மீண்டும் ஞாயிற்றுக் கிழமை! இப்படியாகக் கிழமை வட்டம் சுழன்றுகொண்டே இருக்கிறது.

## நம்பிக்கைகள்

"பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது; சனியும் புதனும் தன்னைவிட்டுப் போகாது; சனிப் பிணம் தனிப் போகாது"-என்பன போன்ற நம்பிக்கைகள் கிழமையை அடிப்படையாகக் கொண்டு வழங்கி வருகின்றன. இத்தகைய நம்பிக்கைகளால் மனிதன் தனது பழக்க வழக்கங்களையும் ஓரளவு மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றான். நன்றே செய்ய விரும்பும் ஒருவர் அன்றே செய்வதை விடுத்துப் புதன் வரும்வரையில் தள்ளிப் போடுகிறார்! மருந்து உண்ண விரும்புகின்றவர் நோய் தன்னை விட்டுப் போகவேண்டுமே என்ற கவலையில் சனியையும் புதனையும் வெறுத்து ஒதுக்குகின்றார். சனிக்கிழமையில் இறந்தவரின் உடலோடு கோழி, அல்லது ஆடு போன்ற உயிர்களையும் உடன் கொண்டு சென்று அடக்கம் செய்வதும் நடந்துகொண்டுதான் வருகிறது! 'சனி நீராடு' என்ற சொற்றொடர் இன்றும் வாரத்தின் கடை நாளில் எண்ணெய்க் கடையில் கூட்டத்தைச் சேர்த்து வருகிறது!

## வாரத்திலும் பலவகை!

வாரத்திற்கு இன்று இருப்பது போன்று ஏழு நாட்கள் என்றுமே இருந்தன என்று சொல்லிவிட முடியாது; அப்படி இருக்க வேண்டிய கட்டாயமும் இல்லை! ஏனெனில், வாரம் என்பது மனிதனுகப் பார்த்து ஏற்படுத்திக் கொண்டது. ஆண்டின் நீளத்தை—பூமி ஞாயிற்றைச் சுற்றிவரும் காலத்தை – மனிதனால் மாற்ற முடியாது. அவ்வாறே மாதத்தின் நீளத்தை—திங்கள் பூமியைச் சுற்றிவரும் காலத்தை மனிதன் மாற்றிவிட முடியாது. ஆனால், வாரத்தின் நீளமோ எந்த விண்பொருள் இயக்கத்தையும் அடியாகக் கொண்டு அமையவில்லை! எனவே, மனித

னின் நலத்திற்கு ஏற்ப நாட்டிற்கு நாடு வாரத்தின் நீளம் பழங்காலத்தில் மாறுபட்டுக் கிடந்தது. தென்னமெரிக்காவைச் சேர்ந்த மைஸ்கஸ் நாட்டில் (Muyscas) மூன்று நாள் கொண்ட வாரம் வழக்கத்தில் இருந்து வந்தது. சிபெகஸ் Chibehas) என்னுமிடத்தில் நான்கு நாள் கொண்ட வாரம் நடைமுறையில் இருந்துவந்தது. பெர்சியா, ஜாவா, நியூகினி, மெக்சிகோ போன்ற இடங்களில் வழங்கிவந்த வாரத்தின் நீளம் ஐந்து நாட்காலமாகும்! ஆஃப்ரிக்க நாட்டில் ஆறுநாட்கள் கொண்ட வாரமும், எட்டுநாட்கள் கொண்ட வாரமும் இருந்து வந்திருக்கின்றன!

## வாரம் எதற்கு?

'வாரம்' என்ற சொல், முறை அல்லது 'மீண்டும் வருதல்' என்ற பொருளைத் தரும். திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய சில வேலைகளை மறந்துவிடாமல் செய்வதற்கென்றே வாரம் என்ற ஒரு கால வரையறையை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். சில ஊர்களில் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை சந்தை (Market) கூடுகிறதோ அத்தனை நாள் காலம் அந்த ஊரில் வழங்கிய வாரத்தின் நீளமாக அமைந்தது! வஜகா (Wajagga) என்ற நாட்டின் மக்கள் வாரத்தின் நாட்களை, அவர்கள் அந்தந்த நாளில் செல்லும் சந்தையின் பெயராலேயே அழைத்து வருவது இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. மேலும், காங்கோ நாட்டு மொழியில் சந்தையைக் குறிப்பதற்கும் வாரத்தைக் குறிப்பதற்கும் ஒரே சொல் இருப்பதையும் காண்கின்றோம். இவ்வாறாக, இடத்திற்கிடம் சந்தை கூடுவதை எதிர்பார்த்து நீளத்தால் மாறுபட்டுக் கிடந்த வாரங்கள் காலப்போக்கில் மறைந்து ஏழுநாள்கொண்ட ஒழுங்கான வாரம் உலக முழுவதும் பரவத் தொடங்கிற்று.

## ஏழு நாள் வந்தவிதம்

பூமியிலுள்ள சந்தைகளைக் காட்டிலும், வானத்திலிருக்கும் பொருள்களே தம்மை அதிகமாகக் கட்டுப்படுத்துவதாக சோதிடத்தை நம்பிய மக்கள் கருதினர். பழங்காலத்தில் மக்கள் அறிந்திருந்த விண்பொருள்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழு பொருள்களேயாகும். அவர்கள் அறிந்திருந்த இவ்வேழு பொருள்களும் ஏழு என்ற எண்ணிற்கே ஒரு சிறப்பினையும் கடவுள் தன்மையினையும் ஏற்படுத்தின. ஏழு கடல், ஏழு முனிவர்கள், ஏழு கன்னிகள், ஏழு பிறப்புக்கள், ஏழு அற்புதங்கள்... என்ற வகையில் ஏழின் பெருமை நீண்டு கொண்டே சென்றது. கடவுள் ஆறுநாட்கள் உலகத்தைத் தொடர்ந்து படைத்துவிட்டு ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார் என்ற கதையும் நாம் அறிந்ததே! எனவே, விண்ணில் காணும் ஏழு கோள்களுடன் ஏழு நாட்களைத் தொடர்புபடுத்தி ஒருவாரம் உருவானதில் வியப்பதற்கொன்றுமில்லை. வாரத்தின் ஒவ்வொரு நாளையும் ஒரு கோளின் பெயரால் அழைக்கும் வழக்கம் வந்தது.

## கிழமையின் வரிசை முறை

இந்த ஏழு கோள்களையும் அவை ஞாயிற்றினின்றும் இருக்கும் தொலைவை அடியாகக் கொண்டு வரிசைப்படுத்தினால் ஞாயிறு, புதன், வெள்ளி, திங்கள், செவ்வாய், வியாழன், சனி

என அமையும். ஆனால், நமது கிழமையின் பெயர்கள் இந்த வரிசையில் அமைந்திருக்க வில்லை! எகிப்த்து நாட்டினர் பழங்காலத்தில் ஞாயிறும் மற்றக் கோள்களும் பூமியை மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன என்று தவறுகக்கொண்டு, கோள்களை 1. சனி, 2. வியாழன், 3. செவ்வாய், 4. ஞாயிறு, 5. வெள்ளி, 6. புதன், 7. திங்கள் என்று வரிசைப்படுத்தி யிருந்தனர். இந்தத் தவறான வரிசை முறைதான் பின்னாளில் கிழமைகள் முளைப்பதற்கு அடிப்படையாக அமைந்தது!

## மணி முன்னால்; கிழமை பின்னால்

நாட்காலத்தை 24 மணியாகப் பிரிக்கும் வழக்கம் ஏற்பட்ட பின்னர் ஒவ்வொரு மணியையும் ஒரு கோளுக்கு உரிமையாக்கி அழைக்கும் வழக்கம் செல்வாக்குப் பெற்றது. ஒருநாளில் ஒரு மணி சனிக்கும், அடுத்த மணி வியாழனுக்கும், மூன்றாவது மணி செவ்வாய்க்கும், நான்காவது ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மணிகள் முறையே ஞாயிறு, வெள்ளி, புதன், திங்கள் ஆகியவற்றிற்கும் உரிமையாக்கப்பட்டன. நாளின் முதல் மணி சனிக்கு உரிமையாக்கப்படும் போது, அதே நாளின் 8-ஆவது 15-ஆவது, 22-ஆவது மணிகளும் சனிக்கோளுக்கே உரிமையாகின்றன. பின்னர் 23-ஆவது மணி வியாழனுக்கும் 24 ஆவது மணி செவ்வாய்க்கும் உரிமையாகின்றன. எனவே 25 ஆவது மணி, அதாவது அடுத்தநாளின் முதல் மணி, ஞாயிற்றிற்கு உரிமையாகிறது! இவ்வாறே, மூன்றாவது நாளின் முதல் மணி திங்களுக்கும், நான்காவது நாளின் முதல் மணி செவ்வாய்க்கும், ஐந்தாவது நாளின் முதல் மணி புதனுக்கும், ஆறாவதுநாளின் முதல் மணி வியாழனுக்கும், ஏழாவது நாளின் முதல்மணி வெள்ளிக்கோளுக்கும் உரிமையாகின்றன. எட்டாவது நாளின் முதல் மணியோ மீண்டும் சனிக்கோளின் ஆட்சிக்கு வருகின்றது. எனவே அடுத்தடுத்து முதல் மணியை உரிமையாகப்பெறும் கோள்களின் வரிசை, 1. சனி, 2.ஞாயிறு, 3. திங்கள், 4. செவ்வாய், 5. புதன், 6. வியாழன், 7. வெள்ளி என்று அமைந்தது. கிழமை என்றால் உரிமை என்று பொருள்.

## தலை வால் ஆனது!

இந்தக் கிழமை வரிசையில் சனி முதலிடம் பெற்றிருப்பது

---

## 114 மொழிகள் படித்தவர்

இத்தாலியிலுள்ள பலோக்ஞ என்ற ஊரிலிருந்த ஜோசஃப் காஸ்பார், கார்டினல் மெசஃபாண்டி (Joseph Caspar, Cardinal Mezzofanti) என்பவர் உலகப் பன்மொழிப் புலவர்களில் முதன்மையானவர். இவருக்கு 114 மொழிகளில் நல்ல தேர்ச்சி யுண்டு. மேலும் 72 சில்லறைமொழிகளில்பேசத் தெரியும். தாய்மொழிக்காரரைப் போலவே 54 மொழிகளில் நல்லதிறமை பெற்றிருந்தாராம். எல்லா மொழிகளிலும் சீன மொழியைக் கற்பதில் தான் மிகத் துன்பப்பட்டாராம்; அதைக். கற்பதற்கு நான்கு மாதங்கள் ஆயிற்றாம்! ஆனால் தம் ஆயுள் முழுதும் இவர் இதாலியை விட்டு வெளியே சென்றதே இல்லையாம்!

குறிப்பிடுதற்குரியது! எகிப்தியரின் வாரம் சனிக்கிழமையைத் தலைநாளாகக் கொண்டுதான் சுழன்றுவந்தது. ஆனால், எகிப்திலிருந்து விரட்டப்பட்ட யூதர்கள் மேல் நாடுகளில் அடி வைத்ததும், எதிரிகளாகிய எகிப்தியர் மேலுள்ள வெறுப்பை அவர்களின் வாரத்தின் முதல் நாளின் மீது காட்டினர்! வாரத்தின் தலை நாளாக இருந்த சனிக்கிழமையை வாரத்தின் கடை நாளாகத் தள்ளிவிட்டனர்! இதன்பின்னர்தான் ஞாயிறு வாரத்தின் முதற்கிழமையாக இருந்து ஆட்சி புரியத் தொடங்கிற்று. இந்த முறையில் அமைந்த வாரத்தையே இன்று நாம் பின்பற்றி வருகிறோம். காலப் போக்கில் வாரத்தின் கிழமை வரிசையிலேயே கோள்களையும் வரிசைப்படுத்திக் கூறும் வழக்கமும் தலையெடுத்தது! அதன் விளைவாகவே ஞானசம்பந்தரின்,

"ஞாயிறு திங்கள் செவ்வாய்,
புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டுமுடனே"

என்ற தேவார அடியும் தோன்றியது. ஞானசம்பந்தர் காலத்தில் (கி.பி. 650) கிழமை தமிழ்நாட்டில் வழங்கவில்லை என்று சொல்வது தவறு. கோள்களில் ஏழினை அவர் கிழமைகளின் வரிசையிலே வைத்துப் பாடியிருக்கிறார். அதனால் கோள்களுக்கு அஞ்ச வேண்டாம் என்று சொல்லும் போதே அவற்றின் பெயர்களைக் கொண்ட கிழமைகளையும் அஞ்ச வேண்டாம் என்பதையும் குறிப்பால் உணர்த்துகிறார்!

## ஒன்பது நாள் வாரம் வரும்?

அறிவியல் வளரவளரக் கோள்களின் எண்ணிக்கையும் வளர்ந்துகொண்டே செல்கிறது. பிற்காலத்துச் சோதிடர்கள் இராகு, கேது என்ற இரண்டைச் சேர்த்து கோள்களின் எண்ணிக்கையை ஏழிலிருந்து ஒன்பதாக்கினர். ஆனாலும், அவற்றிற்கு நாளின் மணிகளை உரிமையாக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்களில்லை. 'இராகுகாலம்' என்ற ஒன்றைமட்டும் கற்பித்து வாரத்தின் ஏழு நாட்களிலும் ஊடுருவச் செய்திருக்கின்றனர். ஆனால், இன்னும் 'கேதுகாலம்' உருவாகவில்லை! யுரானஸ், நெப்டியூன், புளூட்டோ போன்ற கோள்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அவற்றிற்கு நமது வாரத்தின் நாளில் என்ன தொடர்பு கிடைக்கக் கூடும் என்பதுபற்றியும் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. கோள்களின் எண்ணிக்கை அளவு கடந்து பெருகிவிட்டதால், வாரத்தின் நாட்களை ஒன்பது நாளாக்கும் முயற்சியைச் சோதிடம் மேற்கொள்ளாது என்று எதிர் பார்க்கலாம்!

## கோள்கள் ஏமாந்தன!

பின்னாளில் கிரேக்கர்களும், சாக்சோனியர்களும் வாரத்தின் நாட்களைக் கோள்களின் ஆட்சியிலிருந்து விடுவித்துத் தங்கள் கடவுளரின் கைகளில் ஒப்படைத்தனர்! இன்று Sunday (Sun's–day) என்பதும், Monday (Moon's day) என்பதும் கோள்களின் பெயரிலேயே இருந்தாலும். Tuesday (Tilvsday), Wednesday (Woden's day) Thursday (Thor's day) Friday (Frigg's day) Saturday (Sterne's day) என்பவை கோள்களின் பெயர்கள் அல்ல! கிரேக்க கடவுளரின் பெயர்களே! ★★

# வெங்காயம்

*['வெங்காயம்' என்றால் அலட்சியமாகவும், நகைப்பாகவும் பேசுவதுண்டு! ஆனால் அதன் உயர்ந்த பயன்களைப் பற்றி அறிந்தவர் மிக மிகச்சிலரே. சித்தவைத்தியத்தில் இது சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. பல மேல் நாட்டு முறை மருந்துகளுக்கு வெங்காயமே மூலச்சரக்காக இருக்கிறது. இதுபற்றிச் சுருக்கிக் கூறுவது இக்கட்டுரை.]*

நாம் சில காய், கனி, கிழங்கு வகைகளையும், இலை, பூ முதலிய வற்றையும் நாடோறும் உணவாகக் கொள்ளுகிறோம். உண்பவர் அனைவரும் தாமுண்ணும் உணவுப் பொருள்களில் அடங்கியுள்ள சத்துப் பொருள்களையும், நோய் நீக்கும் பகுதிப் பொருள்களையும்பற்றி அறியார். அறிந்தவர் சிலரே. நாம் நாடோறும் வெங்காயத்தை உணவுடன் உட்கொள்ளுகிறோம். வெங்காயத்தின் சிறப்பு பெரிது. அதன் பயனும் வியத்தற்குரியது.

வெங்காயத்தில் அடங்கியுள்ள அலைல் சல்பைடு (Allyl sulphide) என்ற மருந்துப் பொருள் நோய் செய்யும் நச்சுச் சிற்றுயிர்களை அழித்துவிடுகின்றது. வெங்காயத்தைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கி தொற்று நோயாளி இருக்கும் அறைகளில் வைத்தால் வெங்காயத்தின் மணம் நோய்க்கிருமிகளைத் தம்பால் ஈர்த்துக்கொள்ளும். (அம்மை நோய்க் கொண்டோர் வெங்காயத்தை உணவுடன் சேர்த்து உண்ணுதல் வேண்டும் என்று நம் வீட்டுப் பாட்டிகள் கூடக் கூறுவர்.) பிணியாளர்களின் அறைகளில் வைத்துள்ள வெங்காயத் துண்டுகளைப் பின்னர் எரித்துவிட வேண்டும்.

வெங்காயத்தை நறுக்கிய உடனேயே சமையலுக்குப் பயன்படுத்திவிட வேண்டும். பச்சடி போன்ற வெங்காய உணவு கூட 30 நிமிடங்களுக்கு மேல் சமைத்த பின் வைத்திருந்தால் அது வீணாகிவிடுமாம்.

வெங்காயத்தின் பயன் விரிந்தது. வீட்டை அழகு செய்வதற்காக வர்ணம் பூசிய பிறகு இல்லம் முழுதும் வெறுக்கத்தக்க வர்ணத்தின் மணம் வீசும். இதை நீக்குதற்கு பெரிய குவளைகளில் நீரை நிரப்பி அதில் வெங்காயத்துண்டுகளை மிதக்க விட்டால் வர்ணத்தின் வாடை அடங்கிவிடும்.

வெங்காயம் மருந்தாகவும் பயன் படுகிறது. சிவப்பு வெங்காயத்தால் செய்த அல்லியம் கோபா (Allium copa) என்ற மருந்து, நீர்க் கோவையால் ஏற்படும் மூக்கு எரிச்சலுக்கும் கண்ணீர் வடிவதற்கும் ஓமியோபதி டாக்டர்களால் கொடுக்கப் படுகிறது.

இங்கிலாந்தில் வாழும் கிராமவாசிகள் உணவு கொள்ளும் போதெல்லாம் சமைக்கப்படாத வெங்காயத்தையும் உடன் உண்ணுகின்றனர்; இது காச நோய்க்கு நல்ல மருந்து.

நாள் தோறும் 90 கிராம் வெங்காயச்சாறு உட்கொண்டால் காக்காய் வலிப்பு (epilepsy) நோய் நீங்கும் என்பது ஃப்ரெஞ்ச் நாட்டினரின் நடைமுறைக் கண்டுபிடிப்பு. ருஷ்யாவில் காதுக்குள் ஓசை கேட்பதைப் போக்குவதற்குச் சிறிது வெங்காயச்சாற்றைப் பஞ்சினால் ஊற்று கின்றனர். காது வலிக்கும் சூடான சாற்றை ஊற்றுகின்றனர்.

நம் நாட்டில், தேள் கொட்டினால் தேள் கொட்டிய இடத்தில் வெங்காயச் சாற்றைத் தேய்ப்ப துண்டு. தேனீக்கள் கொட்டினாலும் அதனைத் தேய்க்கக் குணம் பெறலாம்.

மஞ்சள் அல்லது சிவப்பு வெங்காயத்தைவிட வெண்மை நிறமுள்ள வெங்காயமே சிறந்தது. வெள்ளை வெங்காயத்திலிருந்து சிறந்த பருகு மருந்துகளைச் (Tonic) செய்து, நீர்க்கோவை (Cold) யால் துன்பப் படுவோர்க்கும் தொண்டை கரகரப்புக்கும் தொண்டைக்கம்மலுக்கும் மூச்சுவிடுதல் சம்பந்தமான நோய்களுக்கும் அளித்துக் குணப்படுத்துகிறார்கள். வெங்காயத்தை உப்புடன் கலந்து வயிற்றுவலியையும் பக்க சூலையையும் (Colic) தீர்க்கலாம்.

வெங்காயத்தை வெல்லத்துடன் கலந்து குழந்தைகள் உட்கொள்ள நல்ல உடற்கட்டு உண்டாகு மென்றுங் கூறுவர். வெங்காயத் துண்டுகள் பல்வலியையும்; தீர்க்கும் வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக்கி வலியுள்ள இடத்தில் தேய்த்தால் வலி நீங்கும். மூக்கிலிருந்து குருதி வடிதலையும் வெங்காயம் தடுக்கின்றது.

உடலில் ஏற்படும் கட்டிக்கு வெங்காயத்தை வதக்கி சூடாக வைத்துக் கட்டலாம். பருமுதலானவை ஏற்படுமாயின் வெங்காயத் துண்டுகளை அவற்றின் மீது தேய்க்கப் பரு மறைந்து போகும். தலைமயிர் உதிர்ந்து விடின் மீண்டும் மயிர் முளைப்பதற்கு வெங்காயத் துண்டுகளைத் தலையில் தேய்க்கலாம்.

வெங்காயத்தை நீரில் கொதிக்க வைத்தாலோ, அன்றி வாணலியில் வதக்கினாலோ வெங்காயத்தின் இயற்கை மணமும் காரமும் அற்றுப் போவதுடன் வைடமின் 'சி' சத்து அழிந்து போகும். நீராவியில் வேக வைத்து உண்ணுதலும் வேகவைக்காமல் உண்ணுதலும் சிறப்புடைத்து.

மூத்திரக் கோளாறு பற்றிய பிணிகளுக்கு முதல் சிகிச்சையாக வெங்காயத்தைப் பாலுடன் சேர்த்துக் காய்ச்சி உட்கொள்ளுதலும் நம் நாட்டில் உண்டு.

உறக்கமின்மையைப் போக்குவதற்கு வெங்காயம் சிறப்பானது என்று கூறப்படுகிறது; வேக வைத்து உட்கொண்டால் நல்ல உறக்கம் வரும்.

—[மூலம்; ''மெயில்''—தமிழாக்கம்: ''வத்சலம்'']

---

''எதற்கும் காரணம் கூறிச் சமாதானப்படுத்திக் கொள்ளும் திறமை வாய்ந்த மனிதன் மற்றெதற்கும் பயன்படமாட்டான்.''

—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்.

:உலகப் பெரியார் வரலாறு:

# சுதந்திரப் பறவை ரூசோ!

[ சோ. சிவஞானசுந்தரம்]

*[சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம், என்ற ஃப்ரெஞ்சுப் புரட்சியின் முழக்கத்தை, அந்நாட்டு மக்களுக்கு நிலையாகத் தந்தவர் ரூசோ. புரட்சிக்கு வித்திட்டவர் என்றே கூறலாம். சொந்த வாழ்க்கையில் ஒழுங்குமுறையில்லை; இன்பமில்லை. புரட்சி எழுத்தாளர் ரூசோவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கித் தருகிறார், கட்டுரையாளர்.]*

"வருங்காலப் பெருமக்கள் உறுதியாக எனக்குரிய சிறப்பைத் தருவார்கள்; அவர்கள் கொடுக்கத்தான் வேண்டும். ஏனென்றால் அந்தச் சிறப்பைப் பெற எனக்கு உரிமை உண்டு; வருங்கால வழித்தோன்றல்கள் நிகழ் காலத்தைப் பற்றி நீதியாக நடந்து கொள்ளுவார்களாதலால், எனக்குரிய சிறப்பைக் கொடுத்து என்மேல் அன்பைச் சொரிவார்கள் என்பது நிச்சயம்."

இப்படி எதிர்காலத்தைப் பற்றிய தனது கருத்தைத் தெளிவாகச் சரியாகச் சொன்னவர், அறிவுலகச் செம்மலான ஃப்ரெஞ்சுப் பேரறிஞர் ரூசோ. இன்று உலகச் சிந்தனையாளராக எண்ணிச் சிறப்பிக்கப்படுகிறார் அமெரிக்க விடுதலைப் போருக்கும் ஃபிரெஞ்சுப் புரட்சிக்கும் அவரது எழுத்துக்கள் பெரும்பணி ஆற்றியிருக்கின்றன.

ஆனால் யாரைப் பற்றி மனம் நிறைந்த சொற்களில் சொல்லிக் கொண்டிருக்கிறோமோ அவர், தம் வாழ்நாளில் அதிகார இனத்தோடு,—கொல்லும் வறுமையோடு,—மக்களின் அறியாமைகளோடு,—தம் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களது இழிவுப் பண்புகளோடு போராடவேண்டியவராயிருந்தார். அவருடைய வாழ்க்கை வேறு, போராட்டம் வேறு அல்ல; இரண்டும் ஒன்றே தான்.

## நூல்களும் கருத்துக்களும்

ரூசோவின் மூளையில் பிறந்தெழுந்த எண்ணங்கள் மனித நாகரிகப் பண்பைப் பெரிதும் மாற்றி அமைத்திருக்கின்றன. அவருடைய சிந்தனைகள் நாகரிகத்திலுள்ள தளர்ச்சிக்குரிய பண்புகளை எடுத்துக் காட்டின; வளர்ச்சிக்குரிய பண்புகளை வாரி வழங்கின. அவர் ஃப்ரெஞ்சு நாட்டு வாழ்க்கைப் பண்பை மட்டும் மாற்றியமைக்கவில்லை; அதன் மூலம் உலக வாழ்வையும் மாற்றி அமைக்கும் பெற்றி உடையவராகத் திகழ்கிறார்.

29-ஆண்டுக் காலத் தம் இலக்கிய வாழ்வில் அவர் எழுதி முடித்துள்ள நூல்கள் 15. ஆனால் அவருடைய மகத்தான சிந்தனையாற்றலுக்குச் சான்றாக—அறிவுக்கு உரைகல்லாக—விளங்கும் நூல்

கள் மூன்று. அவை:— (1) சமூக ஒப்பந்தம் (Social Contract), (2) எமீல் அல்லது கல்வி (Emile or Education) (3) எனது குற்ற ஒப்புதல் (My Confessions).

இவைகளில் முதலாவது அரசியலைப் பற்றியும், இரண்டாவது கல்வியைப் பற்றியும், மூன்ருவது அவரது தன் வரலாற்றையும் கூறுகின்றன. சமூக ஒப்பந்தத்தில்,—

''மனிதர்கள் எல்லோரும் பிறக்கும்போது சமமான நிலையிலேயே இருக்கிருர்கள். அவ்வாறு அவர்கள் தோன்றும்போதே படைத்தவரான இறைவன், அவர்களுக்கு மற்றவர்களால் உரிமையாக்கிக் கொள்ள முடியாத உரிமைகளைத் தருகிருர். இந்த உரிமைகளில் உயிர் வாழ்தல், மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைப் பெற நாடுதல் ஆகியனவும் அடங்கியிருக்கின்றன.''

''அந்தந்தச் சமுதாயத்தின் அறிவு முதிர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு அரசியல் அமைப்புகள் தோன்றுகின்றன."

''சமூகத்தின் நன்மையை நாடுகிற செயலில் ஒவ்வொரு சமூக உறுப்பினருக்கும் உரிமை இருக்க வேண்டும். உண்மையான சுதந்தரம் என்பது அதுதான்; அதாவது ஒவ்வொரு சங்க அங்கத்தினரும் ஏனைய சமூக உறுப்பினர்களுக்குப் பயனுள்ளவராயிருத்தல்வேண்டும். இத்தகையநோக்குடைய மனிதர்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தை எளிதில் அழிக்க முடியாது; இவர்களுக்கு அதிகமான சட்டங்களும் தேவையில்லை.''

''தேவைக்கு மேல் உடைமை, உழையாத உடைமை ஆகிய இரண்டும் இன்று பலருக்கு உண்டு. ஆனால் இது நாகரிக சமூகத்தின் பாதுகாப்புத் தரும் விளைவு. இது இயற்கை உரிமை அல்ல. இது சமூகத்தின் மொத்த வலுவையும் குறைக்கும். சமூகப் பாதுகாப்புத் தளர்ந்து இயற்கை நிலை ஏற்பட்டவுடன் உரிமைகள் பழைய இயற்கை நிலையிலேயே மீண்டும் அமையும்."

"அச்சம், அடிமைத் தனத்தை உண்டு பண்ணலாம். ஆனால் உரிமை தராது. அடிமைகள் உண்மையில் உரிமை மறுக்கப் பட்டவரே அன்றி, உரிமை இழந்தவர் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது."

''மனிதரிடையே வேறுபாடுகள் உண்டு. இயற்கை வேறுபாடுகள்கூட உண்டு. ஆனால் உயர்வு தாழ்வு கிடையாது. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சில வேறுபாடுகள் உயர்வு தாழ்வு உண்டு பண்ணலாம். ஆனால் இது நிலையானதன்று."

இவைபோன்ற பல சிறந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ஃபிரெஞ்சுப் புரட்சியின் போது வெளியிட்ட அறிக்கையிலும் அமெரிக்க விடுதலைப் போரின்போது வெளியிட்ட அறிக்கையிலும் இந்தச் சமூக ஒப்பந்தத்திலிருந்து சில சொற்ளுெடர்களைக் கொண்ட கருத்துக்களை எடுத்துப் பயன்படுத்தியிருக்கிருர்கள். எமீல் (Emile) என்ற கல்வி நூலில் அவர்,—

## கல்வி பற்றி

''கல்வியின் நோக்கம் என்ன? மனிதனையும் அவனுடைய சூழ்நிலையையும் தெரிந்துகொள்வது தான். வாழ்க்கையின் இன்ப துன்பங்களை ஒரே மாதிரியாகப் பார்க்கிறவர்கள் யாரோ அவர்கள்தாம் சிறந்த முறையில்

கல்வி பயின்றவர்கள் என்பது என் கருத்து."

"ஒரு வீர மகனை—மன உறுதி நிறைந்தவனை எங்கே பார்க்கலாம்? எங்கே வைத்தியர்கள் இல்லையோ, எங்கே நோய்களின் விளைவுகளைப் பார்க்கமுடியாதோ, எங்கே மரணத்தைப்பற்றி அதிகமாக யாரும் கவலைப்படவில்லையோ அங்கேதான் பார்க்கலாம்."

"பல பேர் நடக்கிற ஒரு வழியினிலே செடி யொன்றை வளரவிட்டால் அஃது பலபேரால் மிதிக்கப்பட்டு எப்படி அழிக்கப்பட்டுவிடுமோ அதைப் போல—அந்தக் கல்வியில்லாத மனிதன் அழிபட்டுப் போவான்."

"ஒரு மனிதனைப் பற்றி நீ நன்கு அறிந்துகொள்ளவேண்டுமானால் அவனுடைய செயலைக் கொண்டுதான் தெரிந்துகொள்ளவேண்டும்."

இந்த 'எமீலி'ல் கூறப்பட்ட முறையில்தான் அறிஞர் டால்ஸ்டாய் தமது குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். ஐரோப்பாக் கண்டத்தில் வகுக்கப்பட்ட பல கல்வித் திட்டங்களுக்கு 'எமீல்' என்ற நூலே அடிப்படையாக அமைந்தது. சமூக ஒப்பந்தமும் எமீலும் ருசோவினுடைய ஐம்பதாவது வயதில் வெளிவந்தன.

"கலைகளும் விஞ்ஞானமும் முன்னேற்றம் அடைந்திருப்பதால் மனிதனுடைய ஒழுக்கம் உயர்வடைந்திருக்கிறதா?" என்ற தலைப்பை டிஜோன் இலக்கியக் கழகத்தார் விளம்பரம் செய்தார்கள். இந்தத் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை 1749-ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்தக் கட்டுரை சிறந்தது என்று தேர்ந்தெடுத்தார்கள். இதனை அடுத்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குப் பின்னால், "மனிதரிடையே ஏற்றத்தாழ்வுகள் உண்டாவதற்கு காரணம் என்ன? இயற்கைச் சட்டங்கள் இவற்றை ஏற்றுக்கொள்கின்றனவா?" என்பது பற்றி மற்றொரு கட்டுரை எழுதியனுப்பினார். இவ்விரண்டு கட்டுரைகளும் இலக்கிய உலகில் அவருக்கு நிலையான இடத்தைத் தேடிக்கொடுத்தன.

## தண்டனையும் நாடோடி வாழ்வும்

சமூக ஒப்பந்தத்தையும் எமிலியையும் எழுதிய குற்றத்திற்காக ஃபிரெஞ்சு அரசு 1762-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11ஆம் நாளன்று ருசோவைக் கைது செய்ய ஆணையிட்டது. அவருடைய நூல்களைப் படிப்பதற்கும் தடைவிதித்தது. அம்மட்டோ! முச்சந்தியில் அந் நூல்களைத் தீயிட்டுக் கொளுத்தி மகிழ்ந்தது.

ஜினிவா, பெர்ன், நியுஷாட்டெல் ஆகிய ஊர்களும் ஃபிரெஞ்சு அரசின் வழியைப் பின்பற்றின. ஆனால் நெஞ்சில் உறுதி நிறைந்து நிமிர்ந்து நின்றார் ருசோ. துன்பம் கண்டு கலங்கவில்லை. துன்பத்தை அமைதியுடன் ஏற்றுக்கொண்டார்.

குடியுரிமைக்குத் தடை வந்தவுடனே மோட்டியர்ஸ் என்ற ஊருக்குச் சென்றார். இது ப்ருஷ்ய நாட்டு எல்லையில் இருக்கிறது. இங்கே குடியேற ஒரு சீமாட்டி உதவி செய்தார்.

18-ஆம் நூற்றாண்டில் உலகமே எண்ணியது: ருசோ முதல்தரமான ஒரு வெறியன் என்று. மோட்டியர்ஸ் மக்கள் மட்டும் அதற்கு விலக்காக இருக்க முடியுமா? அவர் வீட்டின் மீது கல்லை வீசி எறிவதன்

மூலமும், அவரைக் கேலிமொழி பேசி இகழ்தல் மூலமும் தங்கள் உயர் பண்பை வெளியிட்டுக் கொண்டனர்!.

இனி அங்கு வசிப்பதற்குத் தகுதியற்ற இடமாகத் தோன்றியது ரூசோவுக்கு. அருகிலுள்ள செயிண்ட் பீரே என்ற இயற்கை எழில் நலம் நிறைந்த தீவுக்குச் சென்று குடியேறினர். ஆனல் அந்தத் தீவு பெர்ன் நகர சபைக்கு உரியதாகையால் பெர்ன் நகரசபை ரூசோவுக்கு குடியுரிமை வழங்க மறுத்துவிட்டது. என்ன செய்வது? வழி தெரியாமல் திகைத்து நின்ற ரூசோவை இங்கிலாந்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்— டேவிட் ஹியூம்.

பிறந்த பொன்னுட்டில் வாழும் உரிமை இழந்த ரூசோ இங்கிலாந்தில் குடியேறினர்—கார்ல் மார்க்ஸைப் போல. அப்போது ரூசோவுக்கு வயது 54. ஆனல் இங்கிலாந்திலும் அதிக நாள் தங்கவில்லை. இந்தப் பிரெஞ்சு அறிஞரை ஆங்கில அறிஞர்கள் மிகக் கேவலமான சொற்களில் இழிவாகப் பேசினர்கள்; இங்கிலாந்தைவிட்டுத் துரத்த வேண்டும் என்ருர்கள்.

இதற்கிடையில் ஹியூமுக்கும் ரூசோவுக்கும் மனவேறுபாடு தோன்றி அவர்கள் கொண்டிருந்த நட்பைத் துறக்க நேரிட்டது. இங்கிலாந்து வாழ்வும் முடிந்தது ரூசோவுக்கு.

1767-ஆம் ஆண்டு மே மாதம் பாரீசுக்குப் புறப்பட்டார். பாரிஸில் பதிரேரு ஆண்டுகள் வாழ்ந்தார். இந்தப் பதிரேரு ஆண்டு வாழ்க்கையில் மலர்ந்த நூல்களே, "உரையாடலும்" (Dialogus), ''சிந்தனைகளும்'' Reveries

இந்த பாரிஸ் வாழ்வும் ஒரு நாள் கசந்தது. அடுத்து எர்மெனுன் வில்லே என்ற ஊரில் வாழ்க்கைத் துணைவியோடு குடியேறினர். இது பாரிசுக்கு முப்பது மைல் தொலைவில் இருக்கிறது. ரூசோவினுடைய இறுதிக் காலம் இந்த எர்மெனுன் வில்லேயில்தான் கழிந்தது.

வாழ்வின் தொடக்க நிலையிலிருந்து இறுதி நாள்வரை ஃபிரெஞ்சுப் பெருமாட்டிகள் ரூசோவை ஆதரித்து வந்திருக்கிருர்கள். சீமாட்டிகளின் தொடர்புகளைப் பற்றி விளக்குவதற்கு முன்னல் ரூசோவின் இளமைக் கால் வாழ்க்கையைத் தெரிந்துகொள்வோம்:

## இளமைக் கால வாழ்வு

ஐசக் ரூசோ என்பவருக்கு 1712-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28-ஆம் நாளன்று ஜினிவா நகரில் தோன்றினர். குழந்தை பிறந்த பத்தாவது நாளில் தாயாரை இழந்தார்.

16-ஆம் நூற்ருண்டில் தோன்றிய மதக் கிளர்ச்சி காரணமாக ரூசோவின் முன்னேர்கள், ரூசோ பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஜினிவாவில் குடி புகுந்தார்கள்.

இளமையில் ரூசோவை ஆளாக்கிய பெருமை ரூசோவின் சிற்றன்னையையே சாரும். அவள் தான் அவரைக் குழவிப் பருவத்திலிருந்து வளர்த்தவள்.

தன்னுடைய பத்தாவது வயதில் ரூசோ அவருடைய சிற்றப்பனிடம் ஒப்படைக்கப்பட்டார், பெற்ற தந்தையினல்.ரூசோவை இந்த பெரியோர்—ரூசோவின் சிற்றப்பன் ஏறத்தாழ 6 ஆண்டுகள் வளர்த்தார். இந்தக் காலத்தில் கல்விபெறச் செய்யவும், வேலை

யில் அமர்த்தவும் முயற்சி செய்தார். ஆனால் தோல்வியே கண்டார். ரூசோ தன்னுடைய 16-ஆவது வயதில் ஜினிவாவிலிருந்து பாரிஸ் நோக்கிச் சென்றார்.

அப்போது பெருமாட்டி லாரென்ஸ் என்பவர் இவரை ஏற்றுக்கொண்டு முதல் வேலையாக மதமாற்றம் செய்து ஏறத்தாழ பத்தாண்டுக் காலம் வளர்த்து வந்திருக்கிறார். ரூசோ இந்த லாரென்ஸ் சீமாட்டியை "தன்னுடைய அன்புள்ள அன்னை' என்று குறிப்பிடுகிறார். ரூசோவைப்பற்றி இவர், "வாழத் தெரியாத குழந்தை" என்று கூறினாள்! சடேரென்று இருவரிடையே பூசல் தோன்றிப் பிரிந்தார்கள்.

அடுத்து டினப்பினே தம்பதிகள் ரூசோவை ஆதரித்தார்கள். அவருடைய பேரறிவைத் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்த முயன்றபோது அவர்களிடமிருந்தும் விலகினார். பிறகு எளிய குடிசை ஒன்று அவருக்கு அடைக்கலம் தந்தது.

ஒரு நாள் அவரைக் காண வந்த லக்சம்பர்க் என்பவர் தமது நண்பர் நிலை கண்டு வருந்தி தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். லக்சம்பர்க் என்பவர் தமது மாளிகையில் வாழ்ந்தபோதுதான், "சமூக ஒப்பந்தம்" "எமீல்" "ஜீலா" ஆகிய மூன்று இலக்கியங்கள் வெளியிடப்பட்டன. அந்த மூன்று இலக்கியங்களை வெளியிட பெருமாட்டி லக்சம்பர்க் பெரிதும் உதவி செய்திருக்கிறார். ஃபிரெஞ்சு அரசு அவரைக் கைது செய்ய ஆணையிடும் வரை இங்கேதான் வாழ்ந்தார். மேலும் பல பெருமாட்டிகள் அவரை ஆதரித்து வந்தார்கள்.

## தொடக்க காலப் பணிகள்

இலக்கிய உலகத்திற்கு வருமுன் அவர் எண்ணிலடங்கா வேலைகள் பார்த்திருக்கிறார். நீதிமன்றத்தில் எழுத்தர்(குமாஸ்தா) வேலை, சிலை செதுக்கும் தொழில், பாதிரி, இசைக் கலைஞர், இராணுவ அதிகாரிக்குச் செயலாளர், வெனிஸ் நகரத்தில் ஃபிரெஞ்சுத் தூதருக்குச் செயலாளர், ஃபிரெஞ்சு பொருளாளர் அலுவலகத்தில் ஒரு வேலை—என்று பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

"ஒரே இயல்பும், குணமும், அறிவும் உடையவர்களுக்கிடையேதான் நட்பு முகிழ்க்கும்" என்று தமிழறிஞர் மறைமலையடிகள் கூறியுள்ளார். அறிஞர் ரூசோ தம் வாழ்நாளில் ஒத்த இயல்புடைய நட்பு உள்ளத்தைப் பெறமுடியாமல் வருந்தினார். அறிஞர் கார்ல் மார்க்சுக்கு கிடைத்ததைப் போல ரூசோவுக்கு ஒரு எங்கெல்ஸ் கிடைத்திருந்தால் இவ்வளவு துன்பம் நிறைந்ததாக அவருடைய வாழ்க்கை அமைந்திருக்காது.

ரூசோ இளமையில் கத்தோலிக்கராக்கப்பட்டார். பிறகு அதிலிருந்து விலகிப் பகுத்தறிவு வாதியானார். இறுதிவரை அப்படியே இருந்தார்.

வால்டேர், ஜான்சன், பர்க், டிடெரோ, ஹியூம் ஆகிய அறிஞர்கள் ரூசோவை மிகக் கடுமையாக வெறுத்தார்கள். ஏதோ வெறுக்கத்தக்க விலங்கைப் பற்றிக் கூறுவதைப் போல இவர்கள் ரூசோவைப் பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். இவ் அறிஞர்கள் ரூசோவை நன்கு புரிந்துகொள்ளாமல் பெரும் காரணமாக முழு மூச்சாக எதிர்த்தார்கள். ரூசோவைப் பற்றிய

இவர்களுடைய எண்ணங்களும் பேச்சுகளும் அவர்களுடைய பெருமைக்கு இழிவு தருவன.

## இறுதி நிலை

இங்கு அவருடைய வாழ்க்கைத் துணைவி தெரசா லெவாஷீர் பற்றிச் சில சொற்கள் கூற வேண்டும். அவர் ரூசோவின் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொண்டவர். அவர்கள் இருவரும் இணைந்து 50 ஆண்டுக் காலம் சுதந்திர வாழ்க்கை வாழ்ந்தார்கள். இவர்களுக்குப் பிறந்த ஐந்து குழந்தைகளும் ஒன்றன் பின் ஒன்றாக ரூசோவால் அநாதை விடுதியில் சேர்த்து விடப்பட்டன.

பாரிஸ் நகரத்திலுள்ள செயிண்ட் குவெண்டின் என்ற உணவு விடுதியில் ரூசோ ஒரு முறை தங்க நேர்ந்தது. அங்குதான் பணியாற்றினார் தெரசா. தெரசாவும் ரூசோவும் ஒருவர் மீது மற்றொருவர் அன்பு கொண்டார்கள். வாழ்வின் இறுதிவரை கணவன் மனைவியாகவே வாழ்ந்தார்கள். ஆனால் சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையிலோ—சட்டப்படியோ அவர்கள் மணம் செய்து கொள்ளவில்லை.

ரூசோ குடியுரிமை இழந்து வாடியபோதும் இங்கிலாந்து சென்ற போதும் அங்கிருந்து திரும்பி பாரிஸ் வந்தபோதும் துணைவி தெரசா ரூசோவின் அருகிலேயே இருந்தார். ரூசோ செல்லும் இடங்களுக்கெல்லாம் அவருடைய நிழலைப்போல இவளும் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தாள்.

பாரிசில் பதினோராண்டு வாழ்க்கைக்குப் பின் எர்மெனான் வில்லே வுக்குச் சென்று வாழ்க்கைத் துணைவியோடு குடியேறினாரல்லவா? இங்கே வாழ்ந்தபோது ஒரு நாட்காலை 5 மணிக்கு எழுந்து உலவப் போனார் ரூசோ. சிறிது தூரம் சென்று திரும்பி வந்தார். காலைக் காஃபி குடித்தார். எழுந்தது முதல் காஃபி குடித்ததுவரை எல்லாம் வழக்கம்போல் நடைபெற்றன. ஆனால் ஒன்றே ஒன்று வழக்கத்தில் இல்லாதது எதிர்பாராத வேளையில் நடந்தது.

காஃபி குடித்த ரூசோ தலை சுற்றிக் கீழே விழுந்தார். சமூகத்தின் சக்தியை முதன் முதலாக உணர்ந்து எல்லோருக்கும் சொன்ன ஃபிரெஞ்சு அறிஞரின் இறுதி மூச்சு அப்போது அமைதியாகப் பிரிந்தது.

## சுதந்திரப் பறவை

"தன்னால் முடிந்ததைச் செய்யவேண்டும் என்று எவன் விருப்பப்படுகிறானோ, எவன் தான் கொண்ட ஆவலின்படி செயல்களை நிகழ்த்துகிறானோ, அவன்தான் உண்மையான சுதந்திர மனிதன்."

சுதந்திர மனிதனைப் பற்றி ரூசோ தெரிவித்த கருத்து இது. மிகத் தெளிவாகத் தன்னைப்பற்றி அவர் தெரிந்து வைத்திருந்தார். ஆதலால்தான் சுற்றி நிற்பவர்களின் ஏளன மொழிகளையும் சரி, ஆறுதல் சொற்களையும் சரி, ஒன்றாகக் கருதி, தான் நினைத்த வழியில் தடையின்றி தன் வாழ்நாள் முழுவதும் 66 ஆண்டுகள் நடக்க முடிந்தது.

தான் வகுத்த வழியிலே இறுதிவரை வாழ்ந்தார் சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்தார்.

வாழ்க்கை முழுவதும் இந்த ஃபிரெஞ்சுப் பறவை எவ்வளவோ துன்பங்களையும் தோல்விகளையும் கண்டது. ஆனால் இலக்கிய வானில் பறந்த அந்தப் பறவையின் சுதந்திரத்தை

இடைவிடாத துன்பங்களும் தோல்விகளும் தடை செய்ய முடியவில்லை.

வறுமையினிடையே பிறந்து வளர்ந்து போராடி, வறுமையாளர்களின் சார்பாளனுகவாழ்ந்து, வறியோனுகவே இறந்தார் ரூசோ.

தோல்விப் புயலாகவும் சிந்தனைக் கடலாகவும் எந்த ரூசோ தன் வாழ்நாளில் உலவித் திரிந்தாரோ அதே ரூசோ தேவையில்லாமல் பிறரைப் பாராட்டியதில்லை; தம் நல்வாழ்வு கருதிப் பிறரிடம் பல்லைக் காட்டியதுமில்லை; தன்னம்பிக்கை நிறைந்தவராகவும் தன் மதிப்பு உடையவராகவுமே அவர் வாழ்ந்தார்.

கவிஞர் ஷில்லர் கூறுவதுபோல, "ரூசோ உயிர் வாழ்ந்தபோது கொடுமையாளர்களிடமிருந்து ஓய்வு பெறவும் துன்பத்திலிருந்து மீண்டு அமைதி காணவும் விரும்பினுர். ஆனுல் இந்த இரண்டும் சவக் குழியிலேதான் கிடைத்தன."

உலகத்திற்குத் தேவையானதை அவர் படைத்துக் கொடுத்தார். ஆனுல் அவருக்கு எது தேவையாக இருந்ததோ அதைச் செய்ய இந்தக் கொடுமைக்கார உலகம் மறுத்துவிட்டது.

## முதியோருக்குப் பத்துக் கட்டளைகள்

1. வயது ஏற ஏற, உடல் உழைப்புக் குறைவதனுல், குறைந்த அளவு உணவே உட்கொள்ள வேண்டும். குடல் சக்தியின் குறைவுக்கேற்றபடி பழங்கள், காய்கறிகள், கீரைகள், நீர்ப்பொருள்கள் முதலியவற்றை மிகுதியாகவும், சர்க்கரை, மாப்பொருள், கொழுப்பு —முதலியவற்றைக் குறைவாகவும் உட்கொள்ள வேண்டும்.

2. மலச்சிக்கல் ஏற்படாதபடி நாள்தோறும் நான்கு டம்ளர் தண்ணீராவது அருந்த வேண்டும்; உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

3. உடலுக்கும் நரம்புக்கும் தேவையான ஓய்வு தர வேண்டும். வயது ஏற ஏற ஓய்வு தான் முக்கியம்.

4. மனத்தளர்ச்சியோ, மனவேதனையோ இல்லாதபடி பயன்தரும் பணியில் ஈடுபட வேண்டும்.

5. ஆத்திரம், கோபம், அச்சம் முதலியவைகளுக்கு இடந்தரவே கூடாது.

6. நகைச்சுவையுடன் உரையாடி, இன்பமான மனத்துடனிருக்கவேண்டும்.

7. இளைஞர்களுடனும் குழந்தைகளுடனும் நட்புகொண்டு பழகவேண்டும்.

8. மூளைக்கு வேலை தந்து வளரச் செய்யவேண்டும்.

9. மேலும் மேலும் படித்து உணரவேண்டும்.

10. அடியோடு முழு ஓய்வெடுத்து துருப்பிடித்துவிடக் கூடாது; துருப்பிடித்து அழிவதைக் காட்டிலும், தேய்ந்து அழிவதே சிறப்பாகும்.

—Edward L. Bortz M.D
("Diabetes Control")

கோ. இராமச்சந்திரன், எம். ஏ.

# கன்னட மொழியில் தமிழ்ச் சொற்கள்

*[கன்னடத்திலுள்ள சில சொற்களை ஆராய்ந்தும், மேலும் பல ஆதாரங்களைக் கொண்டும் தமிழிலிருந்து கிளைத்த திராவிடமொழிகளில் கன்னடமும் ஒன்று என்பதை விளக்குகிறார், இக்கட்டுரையாளர். சென்ற மாதக் கட்டுரையில் தெலுங்குக் கிளைமொழி பற்றி எழுதப்பட்டது.]*

இந்திய மொழிகள் பலவற்றிற்கும் தென்னிந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் மொழியாக விளங்கும் பெருமை தமிழ் மொழிக்கே உண்டு என்பதை மொழிநூல் வல்லுநர்கள்—ஆராய்ச்சி அறிவு மிகுந்து வரும் இந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாக, விளங்கும் சான்றோர்கள்—தெரிவித்து வருகின்றனர். தமிழ் தாய் மொழி என்பதும் பிற தென்னிந்திய மொழிகள் சேய் மொழிகளேயாம் என்பதும் தெளிவாக்கப்பட்டுவிட்ட விளக்கங்களென்றே—உறுதியாக்கப்பட்டுவிட்ட உண்மை முடிவுகள் என்றே—கொள்ளப்படுதல் வேண்டும். மொழிப்பற்றுமிகுந்து வரும் நிலையில் இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு இனத்தவரும் தங்களுடைய மொழியே பழமை மிக்கது எனக் கூறுவதும், தமிழுக்கோ அன்றிப் பிற மொழிக்கோ அந்த மொழி (தங்களுடைய மொழி) கடன்பட்டது அல்ல எனக்கூறுவதும் இந்த நூற்றாண்டிற்குரிய நாகரிகப் பேச்சு என்றே கருதுகின்றனர். இத்தகையோர் உண்மையை என்றேனும் வெளிப்படுத்த வேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்படுவர் என்பது உறுதி. மொழிகளின் வரலாற்றைப்பற்றி ஆராய்ந்து விளக்கங்களைக் கூறியுள்ள ஜெஸ்பர்சன் (Olto Jespersen) அவர்கள், ஒருமொழியே காலப்போக்கில் சிதைந்து பல மொழிகளாகப் பிரிந்து வளர்ச்சியுறும் என்பது மறுக்க இயலாத உண்மையாகும் எனப் பிறமொழி நூல் வல்லுநர்கள் தெரிவித்துள்ள முடிவையும் ஆதாரமாகக் கொண்டு தம்முடைய கருத்தைத் தெரிவித்துள்ளார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் தமிழ் மொழி ஒன்றினின்றே காலப்போக்கில் பல தென்னிந்திய மொழிகள் (தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு...போன்றவை) பிரிந்து சென்று வளர்ச்சி பெற்று இன்றுள்ள நிலையில் (சமஸ்கிருதக் கலப்புமிகுதியுடன்) காட்சி யளிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம். ஒரு இனத்-

தைச் சேர்ந்த மக்களே வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டும் வேறுபாட்டை விரும்பியும் பிரிந்து சென்றுவிட்டனர். காலப் போக்கில் வெவ்வேறு இன மக்களெனத் தங்களைப் பற்றி உலகோர் எண்ணுமளவிற்குத் தாங்களும் மாறிவிட்டதோடன்றித் தங்கள் மொழிகளையும் மாற்றி விட்டனர். இது மறுக்க வியலாத உண்மையாகும். இந்த நிலையில் தான், தாங்கள் தங்கியிருக்கும் இடங்களின் தட்ப வெப்ப நிலைகள், சுற்றுச் சார்புகள் (சூழல்கள்), பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கேற்றவாறு தனித் தனி நாகரிகம் பெற்றவர்களாய்-நாகரிகத்தில் வேறுபட்டவர்களாய்-அவர்கள் (பல இனமக்கள்) வாழ்ந்து வருவதை இன்று நாம் கண்கூடாகக் காணுகின்றோம். மேற்கூறிய விளக்கமே மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்ய வல்லதாகும். தமிழ் மொழியிலிருந்தே பிறமொழி எழுத்துக்களும் இலக்கிய விளக்கங்களும் கதைகளும் தோன்றி வளர்ச்சியுற்றன என்னும் உண்மையை அழகுபடப் புலவர் வீரபாகுப் பிள்ளையவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் மொழியிலிருந்தே பலவகை மொழிகளும் எழுத்துக்களும் தோன்றின என்று கூறுங் கூற்றுப் பாஷாபிமானங் கொண்டெழுந்த தன்று. நன்கு ஆராய்ச்சி செய்யுமிடத்துக் காணப்படும் உண்மை இதுதான். மேனாட்டாராய்ச்சியாளர் பலருடைய அபிப்பிராயமும் இதுதான். ஆனால் அவர்கள் எக்காரணம் பற்றியோ தங்களது ஆராய்ச்சியை மழுப்பலாக்கிவிட்டனர்"

''தமிழும் தமிழரும்'' (பக்-51)

பழங் கன்னடம், புதுக் கன்னடம் என்னும் பிரிவுகள் ஏற்படுவதற்கு முன்னர் தமிழ்மொழி ஒன்றே தென்னாடு முழுவதும் வழக்கிலிருந்திருக்க வேண்டும் என்று கொள்வது தவறாகாது. தமிழ்மொழியிலுள்ளவாறே பிற தென்னிந்திய மொழிகளில் பழைமையான இலக்கிய (இலக்கண) நூல்கள் காணப்படவில்லை என்பதும், பிறமொழிச் சொற்களுள் பெரும்பாலானவை தமிழ்ச் சொற்களாகவோ, அன்றிச் சிதைத்து உருமாற்றி வழங்கப் படும் சொற்களாகவோ உள்ளன என்பதும், மேற்கூறிய கருத்தை — உண்மையை — வலியுறுத்தப் போதிய காரணங்களாக அமைகின்றன. ஒன்றே இனமாயினும், மொழியாயினும்—பலவாகப் பிரிவது இயற்கையின் நியதி (உயிரினங்களுக்கும், மொழியினங்களுக்கும் இது பொருந்தும்) என்னும் அரிய உண்மையை இனி எவராலும் மறுக்க வியலாது. இந்நியதியின் அடிப்படையிலேதான் தமிழினின்றும் பல மொழிகள் பிரிந்து வளர்ச்சியடைந்துள்ளன. இந்த நூற்றாண்டில் தென்னிந்திய மொழிகளிலே காணப்பெறும் சொற்கள் ஒற்றுமை; இலக்கண அமைப்பு; மொழிகள் வழங்கப்பெறும் முறைகள் முதலியவற்றைக்கொண்டு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இன்றுள்ளவாறே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகள் தனித்தே (பிரிந்தே) இருந்தன—இலக்கிய வளம் பெற்றுச் சிறந்திருந்தன—எனக் கூற முடியவில்லை. மொழிப் புலமை பெற்றுச் சிறப்புற முன்பு வாழ்ந்த அறிஞர்களுள் சிலரும், இன்று வாழ்கின்ற சான்றோர்களுள் பலரும், தாங்கள் கண்ட முடிவுகளை அழகுறத் தெரிவித்துள்ளனர்.

கன்னடம் தமிழ் மொழியி னின்றே பிரிந்துசென்று தெலுங்கைப் போலவே வளர்ச்சியடைந்த ஒரு மொழியாகும் என்பதை அவர்களுடைய முடிவுகள் தெள்ளத் தெளியத் தெரிவிக்கின்றன. அவை வருமாறு :

1. "நன்னய-சேனர் என்னும் கன்னடிய சைனர் (கி. பி. 1112) 'தர்மார்த்தா' என்னும் நூல் செய்துள்ளார். இவர் கன்னடத்தோடு சமஸ்கிருதத்தைக் கலந்து வழங்குவது, நெய்யோடு எண்ணெயைக் கலப்பதுபோலும் என்று குறிப்பிட்டுள்ளார், சமக்கிருதம் நுழைவதை எதிர்த்து நிற்க, அதனல் (கன்னடத்தால்) முடியவில்லை. கன்னட மொழியின் இலக்கியங்களைப் பின் நோக்கிப் பார்த்துக்கொண்டு செல்வோமாயின், கன்னட மொழியின் இலக்கணம் தமிழொடு மிக நெருங்கிய உறவுடையதாயிருத்தலைக் காணலாம்."

(பக்-13) "திராவிட மொழிகளும் இந்தியும்"
ந. சி. கந்தையா பிள்ளை

2. "கி. பி. புன்னிரண்டாம் நூற்றண்டுக்கு முற்பட்டுத் தெலுங்கு, துளு, கன்னடம் ஆகிய மூன்றுமொழிகளும் ஒரே எழுத்து முறை உடைய ஒரு மொழியாய் இருந்தன. அதேசமயம் தெற்கே தமிழும் மலையாளமும் ஒரே எழுத்துடைய ஒரே மொழியாய் இருந்தன. இதனல் ஆயிர ஆண்டுகளுக்கு முன் ஐந்து திராவிட மொழிகளும் இரண்டுமொழிகளாகவே இருந்தன என்று அறிகிறேம். இன்னும் ஆயிர ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தென் திராவிடம் அதாவது தமிழ்-மலையாளத்துக்கும், வட திராவிடம் அதாவது தெலுங்கு துளு-கன்னடத்துக்கும் மிகுதி வேற்றுமை இல்லாதிருந்தது."

(பக்-42) "தென்னடு"
கா. அப்பாதுரை.

3. சயங்கொண்டார் 'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலை கி. பி. 12-ஆம் நூற்றண்டில் இயற்றினர். இதிலே கருநாடகரைப் பற்றிக் (கன்னடியர்) குறிக்குமிடத்துக் கன்னட மொழியில் தமிழ்ச் சொற்கள் கன்னடியரால் கலந்து வழங்கப்பட்டன என்னும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பன்னிரண்டாம்

## தமிழ் நாட்டில் மருத்துவம்

**மருத்துவ மனைகள் :**

| | |
|---|---|
| அரசாங்கம் | 246 |
| நகர-கிராம மன்றங்கள் | 27 |
| தனியார் | 53 |
| | 326 |

**பணியாளர் :**

| | |
|---|---|
| மொத்த மருத்துவர் | 1,896 |
| நர்சுகள் | 3,713 |

**படுக்கைகள் :**

| | |
|---|---|
| அரசாங்க மருத்துவ மனைகள் | 19,084 |
| பிற | 5,672 |
| | 24,756 |

**மருந்து நிலையங்கள் :**

| | |
|---|---|
| அரசாங்கம் | 331 |
| நகர-கிராம மன்றங்கள் | 254 |
| தனியார் | 34 |
| | 619 |

நூற்றுண்டுவரை தமிழ் வேறு, கன்னடம் வேறு எனப் பிரித்தறியும் நிலை இல்லை என்பது பெறப்படுகின்றது. பாடல் பகுதி வருமாறு :

"மழலைக் குறு மொழியிற் சில
வடுகும் பல தமிழும்
குழறித் தரு கருநாடியர்
குறுகிக் கடைதிறமின்"

முற்காலத்தில் தெலுங்கும் கன்னடமும், வடுகு என்னும் ஒரே பெயரால் அறியப்பட்டன என்பதும் தெளிவாகின்றது.

4. "இவ்வாறே கன்னடமுந் தெலுங்கை யொட்டிப் பெரிதும் இயங்கினமையான் அது போலவே பல்லாற்ருலுந் தன்னைச் சீர்ப்படுத்திக்கொண்டது. இதனாலன்றே 'பழங் கன்னடம்' என்றும் 'புதுக் கன்னடம்' என்றும், அஃது இருவேறு பிரிவினதாகி இயங்குகின்றது. பழங் கன்னடத்தைத் தமிழினின்றும் பிறந்ததெனக் கூறுங் கன்னடப் புலவர் பலர் இன்றுமுளர்."

(புக்–31) "தமிழ் மொழியின் வரலாறு"

வி. கோ. சூ.

"வடநாட்டு மொழிகளில் காணப்படும் மத்திய கால இந்து ஆரியச் சொற்களில் 25-சதவீதம் மாத்திரம் பழைய இந்து ஆரியத்தினின்றும் வந்தவை என டாக்டர் காத்ரி (Dr. Katre) என்பார் கூறுகின்றார்.. மீதிச் சொற்கள் உள்நாட்டுச் சொற்களேயாதல் வேண்டும். வடநாட்டு மொழிகளில் மாத்திரமல்ல, சமஸ்கிருத மொழியிலும் மிகப் பல தமிழ்ச் சொற்கள் உருமாற்றத்துடன் காணப்படுகின்றன. ஆரியத்துக்குப் பல சொற்களை உதவி, அதனைச் சீர்திருத்திச் சமஸ்கிருதமாக்கியது தமிழே."

"பழைய இந்தியாவில்
மக்கள் வாழ்க்கை"
(ஆங்கில நூல்)

P. T. சீனிவாச ஐயங்கார்

## சில சொற்கள்

தமிழ் மொழிச் சொற்களில் பெரும்பாலானவை இன்றும் கன்னட மொழியில் சிதைக்கப்படாமலும், சில சிதைக்கப்பட்டும், வேறு பல உருமாற்றப்பட்டும் காட்சியளிக்கின்றன. இருமொழிகளிலுமுள்ள ஒப்புமையுடைய சொற்கள், தொடர்கள் ஆகிய யாவும் மேற்கூறிய உண்மையையே—முடிவையே—வலியுறுத்துகின்றன. கன்னட மொழியில் காணப்பெறும் தமிழ்ச் சொற்களில் பலவும், கதைப் பகுதி ஒன்றும் தொகுத்துக் கீழே காட்டப் பெற்றுள்ளன. கதைப் பகுதி தெளிவுற அமைய வேண்டும் என்னும் காரணத்தை முன்னிட்டு, தமிழ்-கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் தரப்பட்டுள்ளது. தமிழினின்றும் பிரிந்து சென்ற கன்னடம் சமஸ்கிருதக் கலப்பால் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாறுபட்டு விட்டிருந்தாலுங்கூட, அது (கன்னடம்) முழுவதுமாக மாறுபட்டு (மாற்றப்பட்டு) விடவில்லை என்பதைக் கதைப் பகுதியே தெளிவாகக் காட்ட வல்லதாம். விளக்கங்களாவன :

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| அனல் | அனலு |
| எருக்கு | எர்கெ |
| உரிஞ்சு | உஜ்ஜு |
| யாடு, ஆடு | ஆடு |
| காக்கை | காகெ |
| கா (கானும்) கான் | கா |

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| கொடு (வளைவு) | குடு |
| கள்வன் (கள்ளன்) | கள்ள |
| களம் | கள; கண |
| சிக்கு (தல்) (சிக்கெனப்பற்றி) | சிக்கு |
| மக்கு (முட்டாள்) | மங்கு |
| பெயர் | பெஸர், ஹெஸரு |
| ஞாயிறு | நேஸர் |
| பல் | ஹல், ஹல்லு |
| பால் | ஹாலு |
| புலி | ஹுலி |
| போகு(தல்) | ஹோகு |
| அவன் வந்தான் | அவனு பந்தனு |
| அவன் வந்தானா ? | அவனு பந்தனே ? |
| வேம்பு | பேவு |
| வா | பா |
| ஒன்று | ஒந்து |
| பன்றி | பந்தி, ஹந்தி |
| பொன்று(தல்) | பொந்து, ஹொர்ந்து |
| புற்று | புத்து |
| பற்று | பத்து |
| மற்று | மத்து |
| தலை | தலெ |
| மனை | மனெ |
| புகை | ஹொகெ, புகை |
| எறி(தல்) | இறி |
| எலி | இலி |
| தெளி | திளி |
| செவி | கிவி |
| உடல் | ஒடல் |
| உடைமை | ஒடெமெ |
| சொறி | சுறி |
| கொறி (செம்மறியாடு) | குறி |

எண்கள் :

| | |
|---|---|
| ஒன்று, ஒரு, ஓர் | ஒண்டு, ஓர் |
| இரண்டு, இரு, ஈர் | எரடு, ஈர் |
| மூன்று, மூ | மூரு |
| நான்கு, நாலு, நால் | நாலு, நால்கு, நால் |
| ஐந்து, அஞ்சு, ஐ | ஐது, ஐ |
| ஆறு, அறு | ஆரு, அர |
| ஏழு எழு | ஏளு; எ |
| எட்டு, எண் | எண்டு, எண் |
| ஒன்பது, ஒன்பான், தொள் | ஒம்பத்து, ஒம்பயி, தொம் |
| பத்து, பான், பதின் | பத்து, ஹத்து, பட்டு, வட்டு, பதின், பதி |
| நூறு | நூரு |

[எண்கள் பகுதி—தமிழாக்கப் பட்டுள்ள பகுதி—ரோமன் லிபியி லுள்ளது.]

(page-358)–A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages

—Rev. Robert Caldwell.

## கதைப் பகுதி

விதைக்கிறவன் உவமை

(கன்னடம்)

"இகோ, பித்துவவனு பித்த ஹொரட்டனு. அவனு பித்து வாக செலவு மார்கத ஹத்தர பித்து. பக்ஷிகளு பந்து அதன்னு திந்து பிட்டவு. பேரெ கெலவு பஹள மண்ணு இல்லத பண் டெஸ்தள களல்லி பித்து; அதக்கெ ஆளவாத மண்ணு இல்லத காரண, சங்கடலெ மொளியித்து; ஆதரெ சூர்யனு மூடிதாக அது பெந்து, அதக்கெ பேரு இல்லாததரிந்த ஒணகி ஹோயித்து. பேரெ கெலவு முள்ளுகள மேலெ பித்து; முள்ளுகளு பெளெது, அணிகி சிதவு, பேரெ கெலவு ஒள்ளே பூமிய மேலெ பித்து, ஒந்து நூரஷ்டு, ஒந்து அரவத் தஷ்டு, ஒந்து மூவத்தஷ்டு பல வகாட்டத்து. கேளுவதக்கெ கிளவிகளுள்ளவனு கேளலி."

பக்–79; 80 (மத்தேயு, 13 : 3–9)

## இதன் மொழி பெயர்ப்பு (தமிழ்)

"இதோ, 'வித்துகிறவன் வித்தப் புறப்பட்டான், அவன் வித்து கையில் சில வழியருகே விழுந்து, பறவைகள் வந்து அதைத் தின்றுவிட்டன. வேறே சில மிகுந்த மண் இல்லாத பாறையிடங்களில் விழுந்தது. அதற்கு ஆழமான மண் இல்லாத காரணமாய் விரைந்து முளைத்தது. ஆனால் வெயில் ஏறினபோது அது வெந்து, அதற்கு வேரில்லாததால் உணங்கிப் போயிற்று. வேறே சில முட்கள் மேலே விழுந்தது, முட்கள் வளர்ந்து அதை நெருக்கிவிட்டன. வேறே சில நல்ல நிலத்தில் விழுந்து ஒன்று நூறாகவும் ஒன்று அறுபதாகவும் ஒன்று முப்பதாகவும் பலன் கொடுத்தது. கேட்கிறதற்குச் செவிகளுள்ளவன் கேட்கக் கடவன்."

[குறிப்பு :—மெய்ம்மறை (சத்திய வேதம்) என்னும் கிறித்தவ மறையின் மொழிநடை விடைத் தொண்டராதலால், மேற்கூறிய உவமையில் அஃறிணைப் பன்மை யெழுவாய்கள் ஒருமை வினையொடு முடிந்தன; பன்மைச் சொற்கு ஒருமைச் சொல் வந்தது.]

(பக்—80) "திராவிடத் தாய்"
திரு. ஞா. தேவநேயன்

கன்னட மொழி இலக்கணம் இன்று சமஸ்கிருத மொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி யடைந்து வருகிறது. கன்னடப் புலவர்களுள் சிலர் 'தேவபாஷை'யிடம் கொண்ட பற்றுக் காரணமாகப் பல சமஸ்கிருதச் சொற்களை ஏற்றுக்கொண்டு கன்னட மொழியை வளர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறு காலப் போக்கில் சமஸ்கிருதச் சொற்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் கன்னட மொழியுடன் கலந்து காணப்பெற்ற தமிழ்ச் சொற்கள் பலவும் பயனற்றவை எனக் கருதித் தள்ளப்பட்டுவிட்டன. தமிழினின்றும் பிரிந்து சென்ற கன்னடம் 'ழ'க்ரத்திற்குப் பதிலாக 'த' 'ர' 'ற' ஆகிய சமஸ்கிருத எழுத்துக்களை ஏற்றுக்கொண்டது. அளவு கடந்த நிலையில் சமஸ்கிருதச் சொற்களையும், இலக்கண இலக்கிய விளக்கங்களையும் பிற்காலத்தே தோன்றிய புலவர்களும் ஆசிரியர்களும், கன்னட மொழியிலே சேர்த்து வழங்க ஆரம்பித்துவிட்டனர். இந்த அவல நிலையைக் கண்ணுற்ற புலவர் அண்டய்யன் என்பார் சமஸ்கிருதச் சொற்களைக் கலவாமலே காவியங்களைக் கன்னட மொழியில் செய்ய வேண்டும் எனத் தெரிவித்துச் சென்றார். எனவே சமஸ்கிருதச் சொற்கள் கன்னடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு கன்னட மொழி—பழங் கன்னடம்—தமிழ் மொழியினின்றும் வேறாகப் பிரிந்து நின்று இயங்கப் பெறாத அளவிற்கு ஒரு மொழியாகவே—தமிழாகவே —வழங்கப்பட்டதாம் என்பது தெளிவாகின்றது. நயசேனன் என்னும் புலவர் சமஸ்கிருதச் சொற்களைக் கன்னடத்தோடு கலப்பது எண்ணெயை நெய்யுடன் கலப்பதுபோன்றதேயாம் (முன்னரே காட்டப்பட்டது) எனத் தெரிவித்துச் சென்றார். அவர்கள் கூறிச் சென்ற கருத்துக்களை வே. வேங்கடராஜுலு ரெட்டியார் 'அச்ச கன்னடக் காவியம்' என்னும் தலைப்பிலே கீழ்க்காணுமாறு தொகுத்துக் காட்டியுள்ளார். கருத்து வருமாறு :

"வடமொழிச் சொற்களைக் கன்னடச் சொற்களோடு ஒருங்கு சேர்த்து வழங்குதல் தகுவ தன்று; அது எண்ணெயும் நெய் யும் கலந்ததுபோல் இருக்கும்* என்று நயசேனன் என்பவர் கூறியிருக்கின்றார்; நாகவர்மரும் இவ்வாறே பழித்துக்கூறியுள் ளார். 'வட சொற்களைச் சேர்க் காமலே காவியஞ் செய்தல் வேண்டும்' என்று புலவர்கள் வேண்ட அவர் கருத்தின்படி அண்டய்யன் என்பவர் அச்ச கன்னடத்தில் 'கப்பிகரகாவம்' என்னுங் காவியமொன்றை கி.பி. 1235-ல் இயற்றி இருக்கின்றார்."

(பக்-29) "தென் மொழிகள்"
வே. வேங்கடராஜுலு
ரெட்டியார்.

கன்னட மொழிப்பற்றும் தமிழ் மொழியைக் குறைபட மதிப்பிடும் உள்ளமும் கொண்ட புலவர் களுள் சிலர், கன்னடம் தமிழி னின்று பிரிந்து நின்று வளர்ச்சி யடைந்தது என்றோ அன்றிப் பிறமொழிச் சார்பினால்—தமிழ் மொழியால்—(சமஸ்கிருதம் நீங் கலாக) வளர்ச்சியுற்றது என்றோ கூறிவிட்டால், கன்னட மொழிக்கே இழுக்கைத் தேடித் தந்துவிட்டதாகக் கருதித் தவறு படப் பலவாறு பேசியும் எழுதி யும் வருகின்றனர். பொருந்தாத விளக்கங்களைத் தொகுத்து நூல் கள் வாயிலாக வெளியிடுகின்ற னர். மறைந்தொழிந்தது (இறந் துபட்டது) சமஸ்கிருத மொழி. எனினும் அம்மொழி வெறி கொண்டவர்களாய் வாழும் சில புலவர்களைப் பார்த்து அவர் களைப் போன்றே மொழி சம்பந்த மான பொருந்தாக் கதைகளைக் கட்டிவிடும் அளவிற்குக் கன்னடி யர் பலர் துணிவு கொண்டுவிட்ட னர். இது காலத்தின் கோலமே அன்றி வேறில்லை, சென்னைப் பல்கலைக் கழகத்திலே கன்னட மொழித்துறைப் பேராசிரியராகப் பணிபுரியும் சான்றோர் எம். எம். பட் அவர்களும்; இலக்கணக் கடலை நிலைகண்டுணர்ந்தவரும் தமிழ்மொழிமாட்டு ஆராக் காதல் கொண்டவருமாக விளங்கும் பேராசிரியர் மொ. அ. துரை அரங்கசாமி அவர்களும்; மொழி நூல் வல்லுநர்களாக விளங்கும் ஞா. தேவநேயன், சி. இலக்கு வனார் போன்றவர்களும் மற்ற வர்களும் தமிழ்-கன்னடம் ஆகிய இரு மொழிகளைப் பற்றியும் கூறி யுள்ள விளக்கங்கள் தொகுத்துக் காட்டப் பெற்றுள்ளன. அவற்றை மனத்திற் பதிய வைத்து பிறகு தமிழினின்றே கன்னடம் பிரிந்து சென்றது என் னும் முடிவைத் தயங்காது, தெளி வுடன் கூறப் பலரும் முன்வரு வர். மேலே குறிப்பிடப்பட்ட புலவர்களால் தரப்பட்டுள்ள முடிவுகளும் பிற விளக்கங்களும் வருமாறு:

(a) "திராவிட மொழிகளுக்குள் குறிப்பிடத்தக்க அளவிற்கு, அல் லது முக்கியமான அளவிற்கு மிக நெருங்கிய ஒற்றுமை உண்டு என்பது தெளிவு. குறிப்பிடத் தக்க ஒற்றுமை கன்னடம், தமிழ், மலையாளம் முதலிய மொழிகளுக் கிடையிலே உண்டு என ஒரு வகையிலும் அவ்வாறே வழக்கி லுள்ள சில அடிப்படைச் சொற்

---

* நயசேனன் கன்னடத்தில் கூறியுள்ள பாடல்:—

"ஸக்கதமம் பேழ்தொடெ
நெறெ
ஸக்கதமம் பேழ்கெ சுத்த
கன்னடதொள் தந்
திக்குவுதெ ஸக்கதங்களா
தக்குதெ பெரஸல்கெ க்ருத
முமம் தைலமுமம்"

களின் துணை கொண்டும் ஒலிப்பு முறையின் துணை கொண்டும், தெலுங்கு , கன்னடம் ஆகிய மொழிகளுக்கிடையிலே ஒற்றுமை உண்டு என மற்றொரு வகையிலும் கூறலாம்."

(தமிழில் தரப்பட்டுள்ளது)
(page-42)

"The Languages of India
—A Kaleidoscopic Survey.

(b) "வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்று மொழி நூல் உணர்வு வாயிலாக நாம் இன்று தலை நிமிர்ந்து கூறும் ஆற்றல் பெற்றுவிட்டோம். ஆனால், நம் தமிழின் வயிற்றில் பிறந்த தெலுங்கும்,மலையாளமும், கன்னடமும் வடமொழியிலிருந்து அவ்வாறு உய்திபெற மாட்டாது அதிலேயே அழுந்திவிட்டதைக் குறித்து நாம் இரக்கம் காட்டுவதொழிந்து வேறு யாதும் செய்ய வல்லேம் அல்லோம்."

(பக்-335)

தெ. பொ. மீ. மணிவிழா மலர்.

'வடமொழியும் தமிழும்'

(கட்டுரை) டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி.

(c) "திராவிட நெடுங்கணக்கில் சமஸ்கிருத நெடுங்கணக்கிலில்லாத எ, ஒ,ன,ற, ழ என்னும் இந்த ஐந்து சிறப்பெழுத்துக்கள் உண்டு. இவையெல்லாம் பழங் கன்னடத்தில் இருந்தன. புதுக் கன்னடத்தில் ற, ழ எழுத்துக்கள் வழக்கொழிந்து, அவற்றின் செயலை ர, ள, எழுத்துக்களே செய்கின்றன. கன்னட வர்க்க எழுத்துக்களில் வல்லோசை (பருஷ) யினவும், மெல்லோசை (மிருது) யினவும் முற்காலத்திலிருந்து இயற்கையாக வழங்கி வருகின்றன."

(கன்னட மொழி பற்றி எம். எம். பட் தந்துள்ள விளக்கத்தின் ஒரு பகுதி)

'கலைக்களஞ்சியம்'
(பக். 390) (தொகுதி மூன்று)

(d) "During the Middle Tamil Period, Canarese, Tulu, Kudagu, Malayalam and Tuda and Kota sprang from the Tamil as separate languages.......Now the language spoken in the plateau of Mysore, Southern Mahratta Country and in some parts of Andhra Pradesh as far as Bedar is Canarese. During the 6th Century A. D. as far as the place where the Bombay Presidency, Madras Presidency and Hyderabad state meet, the Tamil dialect became a new language, as North Canarese. In modern Mysore and Coorg till 12th Century, vulgar Tamil was spoken. (Vide Nannool Payiram). Then owing to the changes mentioned above, as far as the Nilgiri hills on the south, vulgar Tamil became South Canarese."

(pp 25 & 26) "Tamil Language"

—Prof. **S. Ilakkuvanar M.A., M.O.L.**

இலக்கண வரம்பினை நெடுங் காலத்திற்கு முன்பே பெற்றுச் சமஸ்கிருத மொழியால் அழிக்கப் படவோ, அன்றி மாற்றப்படவோ முடியாத அளவிற்கு வளம்பெற்றுத் திகழ்ந்த (இன்றும் திகழுகின்ற) தமிழ்மொழி போலல்லாது. கன்னடமொழி சமஸ்கிருதச் சூருவளியில் சிக்குண்டு பிற தென்னிந்திய மொழிகளைப் போன்றே நிலை உருக்குலைந்து போயிற்று என்பது அழிக்கப்பட முடியாத உண்மையாகிவிட்டது. பண்டைத் தமிழின் ஒரு பகுதியே கன்னடமாகப் பிரிந்து இயங்கிய நிலைமாறி, காலப் போக்கிலே வளமற்றதாகத் திகழ்ந்த கன்னடம் தனித்து நிற்கும் ஆற்றலையும் இழந்து சமஸ்கிருத மொழிச் சொற்களையே (நூற்றுக்கு 40 அல்லது 50 விழுக்காடு) மூலங்களாகக் கொண்டு வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இத்தகைய மாறுபாட்டிற்கு (வளர்ச்சிக்கு?) சமஸ்கிருதத்திலுள்ள சமய நூல்களும், நீதி நூல்களும் வழிகோல ஆரம்பித்துவிட்டன. வேற்று மொழியின் வேகத்தை—ஆதிக்கத்தை—கன்னட மொழிப் புலவர்களாலோ, அன்றி அரசர்களாலோ தடுக்க முடியவில்லை. இயலும் என்ற நிலையிலும் சமயவாதிகள் இதனைத்தடுக்க விரும்பவில்லை. இந்த உண்மையை வலியுறுத்துவதற்கான சான்றுகள் நிரம்ப உண்டு. கன்னட மொழி தமிழினின்றும் பிரிந்து சென்ற ஒரு மொழியேயாகும் என்னும் உண்மையை வலியுறுத்த மிகச் சிறந்த சான்று—விளக்கம்—ஒன்றே போதும் எனக்கொண்டு, கல்வெட்டுச் செய்தியை ஆதாரமாகக் கொண்ட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது. இதனால் கன்னட மொழியில் தமிழிலுள்ளவாறே 'ழ' கரம் ஒரு காலத்தில் வழக்கிலிருந்தது என்பதையும், எனவே கன்னடம் தமிழேயன்றிப் பிறிதொரு மொழியாக முன்பு விளங்கவில்லை என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. விளக்கம்,—

"கன்னடத்தில் ழகாரம் றழம் என்று வழங்கும். வரிவடிவில் ழ—பெரும்பாலும் ற கரம் போற லின் இப்பெயர் பெற்றது. தமிழில் ழ கரத்தை மகரள என்று சொல்லுதல் ஈண்டு ஒப்பிடத் தகும். கன்னடச் சொற்களில் இயல்பாக உள்ள ள கரம் குளம் எனப்படும். வடசொற்களில் ல கரத்துக்கு ஈடாக வரும் ளகரம் க்ஷளம் எனப்படும். உ—ம்: கமலம்-கமளம். வடசொற்களில் இருக்கும் ட, ட்ட, த, ர, க்ஷளம் இவ்வெழுத்துக்கட்குக் கன்னடத்தில் ழகரம் வரும். ழகரம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டுவரை வழங்கியுளது; றகரம் 18-ஆம் நூற்றாண்டுவரை இருந்தது. இக்காலத்திலும் பழங்கன்னட நடையில் செய்யுள் இயற்றுபவர் ழகர றகரங்களை வழங்குதல் உளது)"- என்பதாகும்.

(பக்-11) "தென் மொழிகள்"

—வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

---

"உள்ளும் புறமும் ஒன்றுயிருப்பவன் ஒருவருக்கும் அஞ்சமாட்டான். தீய உள்ளமுடையவன் ஒருக்காலும் இன்பமாயிருப்பதில்லை."

—மகாத்மா காந்தி.

# 8. பிரிவாற்றுமை

[இதுவரை கூறப்பட்டது களவியல்; காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் களவாகச் சந்தித்துக் காம முற்றுப் புணர்ந்து, பிரிந்து, மீண்டும் சந்திக்க முடியா மல் வருந்துவதைப் பற்றியது. இனிக் கூறப்படுவது, அவ் இருவரும் ஊரார் அறிய, உற்றுர் ஒப்புதலுடன் மணம் முடித்துக்கொண்டு இல்வாழ்க்கை நடத்துவதைப் பற்றியது. இது கற்பியல்; இருவருக்குமிடையே இருக்கவேண்டிய கட்டுப்பாட்டைக் குறிப்பது. காதல் கணவன் தன் பணி காரணமாகத் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதைக் குறித்து மனைவி வருந்து வதைக் குறிப்பது இந்த அதிகாரம்.]

கணவனை நோக்கி, "என்னை விட்டுப் பிரிந்து செல்லாமலிருப் பதென்றுல், எனக்குச் சொல்; அதைவிட்டு, என்னிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டு விரைந்து திரும்புவதைப் பற்றிக் கூறுவ தாளுல், அது வரையில் உயிர் வாழ்ந்திருக்கக் கூடியவரிடம் சொல்!" பிறகு தன் தோழியை நோக்கிக் கூறுகிருள்:— அவரது பார்வை முன்பு இன்பம் தந்தது; இன்றே அவர் பிரிவதற்கு இணங்குவது, பிரிவிஞல் வரும் அச்சத்தைத் தரும் துன்பமாயுள் ளது. அறிவுள்ள காதலரிடை யிலும் பிரிவு ஒரு காலத்தில் உள்ளபடியால், அவர், 'பிரி யேன்' என்று கூறும் உறுதி மொழியை நம்ப முடியவில்லை. 'அஞ்சாதே' என்று அருளுடன் முன்பு கூறியவர், இன்று பிரிந்து செல்வாரேயாளுல் அவர் கூறிய உறுதியை மறுத்துப் பேசுவதில் குற்றமென்ன? என்னைப் பாது காக்கவே என் கணவர் இருக்கி ருர் என்றுல், அவர் பிரிவ தைத் தடுக்கவேண்டும்; அதற்கு மாருக அவர் பிரிந்து சென்ருல் அவரைக் கூடுதல் எனக்கு அரி தாகிவிடும். (என்ஞல் சகித்துக் கொண்டிருக்க முடியாது). என்னைப் பிரியும் கருத்தைச் சொல் லக்கூடிய கல் நெஞ்சம் உடைய வராளுல், அத்தகையவர் மீண் டும் அன்பு காட்டுவார் என்னும் ஆசை பயனற்றது. என் உடல் மெலிவால் கழன்றுவரும் முன் கை வளையல்களே என் கணவன் பிரிந்துவிட்ட செய்தியைப் பலர் அறியத் தெரிவிக்கின்றனவே! நம் மீது அன்புடைய உற்ருர் உறவினர் இல்லாத ஊரில் வாழ் வது துன்பமானது; அதைவிடத் துன்பமானது, இனிய காத லரைப் பிரிந்திருப்பது. நெருப் புத் தன்னைத் தொடுபவரைத்

தான் சுடும்; ஆனால் காதல் நோயோ தொடுகின்றவரையில் சுடாமல், விட்டுப்பிரிந்த உடனே சுடுகிறது. பிரிவுக்கு உடன்பட்டு, பிரியும் போது அத்துன்பத்தால் கலங்குவதையும் விட்டு, பிரிந்த பிறகு அதைச் சகித்துக் கொண்டிருந்து, பின்னும் உயிர்வாழ்ந்து இல்லறம் நடத்துவதே பெரும்பாலான பெண்களின் இயற்கையாகிவிட்டது. என் நிலையும் இதுவே.

---

## பர்னார்ட்ஷாவின் காதல்

"டூ கான் (Du Cann) என்பவர் இலக்கிய நிபுணர்களின் காதல் வாழ்க்கையை ஆராய்ந்து எழுதுபவர். "சார்லஸ் டிக்கன்ஸ்" என்ற நாவலாசிரியரின் காதல் வாழ்க்கை பற்றி முன்னரே எழுதியுள்ளார். இப்போது பர்னார்ட்ஷாவின் காதல் வாழ்க்கைபற்றி ஒரு நூல் எழுதியுள்ளார்.

29 ஆவது வயதில் காதல் இன்பத்தில் குதித்த ஷா இத்துறையில் பல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளார். திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்த ஃப்ளாரன்ஸ் ஃபார் (Florence Farr) என்ற பெண்ணிடமும், திருமதி பாட்ரிக் காம்ப்பெல் என்ற பெண்ணிடமும் தம் காதல் விருப்பத்தைக் காட்டிப் படுதோல்வியுற்றார். இரண்டாவது பெண்ணைக் காதலித்தபோது ஷாவின் வயது 56. அவள் மறுத்துவிட்டவுடன், மனமுடைந்த ஷா அவளைத் தாறுமாறாகத் தாக்கியும் தூற்றியும் எழுதினாராம்.

சார்லட் பெயின்-டவுன்ஷெண்டு என்ற பெண்ணுடனும், திருமதி அன்னி பெசண்ட் உடனும், நடிகை எலென் டெர்றி என்பவளுடனும், மே மாரிஸ் என்பவளுடனும், எடித் நெஸ்பிட் என்பவளுடனும், பெர்த்தா நியூகம் என்ற ஓவியருடனும், எரிக்கா காட்டரில் என்பவளுடனும்—பர்னார்டு ஷாவைத் தொடர்புபடுத்தி இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது.

இவர்களில் சிலர் ஷாவினால் மறுக்கப் பட்டவர்களாம்; இரண்டொருவர் ஷாவின் காதலுக்கு இணங்க மறுத்துவிட்டவர்களாம்.

"லிங்க்"

---

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29

ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

TELEGRAMS:
"SWITCHES"

PHONE:
51436

# KASIMARI

ADDS ONE MORE LINE

**MACHINE TOOLS MADE TO Gr. I. LIMITS**

**WATCH FOR THE PRODUCTS SHORTLY APPEARING IN THE MARKET**

(1) $\frac{3}{4}''$ CAPACITY H. DUTY DRILL PRESS
BENCH MODEL

(2) 6"x10" TOOL & CUTTER GRINDER
BENCH MODEL

## KASIMARI MACHINE TOOLS CO.,

KASIMARI BUILDINGS
295 THIRUVOTTIYUR HIGH ROAD
MADRAS 21